மாணவர் விடுதிகளுக்கான கழிவு நீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்புத் தொகுதியை வுடிவமைத்தல், பூர்த்தி செய்தல் & பொருத்துதல்	16,908,633.36

பீடங்கள், நூலக வலையமைப்பு மற்றும் கல்விசார் பிரிவுகள், நிலையங்கள் & அலகுகள் என்பவற்றின் அறிக்கைகள்

17. விவசாய பீடம்

A. அறிமுகம்

2001 ஆம் ஆண்டு இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமானது 17 மாணவர்களுடன் ஸ்தாபிக்கப்பட்டது. பீடமானது நீடித்து நிலைத்து நிற்கும் விவசாய முறைமையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் குறிப்பாக இலங்கையின் உலர் வலயத்தின் சூழல்தன்மைக்கு ஏற்ப உற்பத்தி செய்தலை முதன்மையாகக் கொண்டு விவசாயத்தில் விசேட பட்ட கற்கை நெறி ஒன்றை வழங்கி வருகின்றது. இப் பட்ட கற்கைநெறியானது வேறுபட்ட விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட முறைமைகளை வழங்கும் எட்டு அரையாண்டுகளை கொண்டது. தற்போது, விவசாய பீடமானது விவசாய பொறியியல் மற்றும் மண் விஞ்ஞானம், விவசாய முறைமைகள், கால்நடை மற்றும் உணவு விஞ்ஞானம் என்பவற்றுடன் தாவர விஞ்ஞானம் என்னும் நான்கு கல்வித் துறைகளை கொண்டது. மேலும், பீடமானது ஒரு கணினி அலகு, ஆங்கில மொழி கற்பித்தல் அலகு, விவசாயப் பண்ணை மற்றும் ஒரு நூலகம் என்பவற்றை கொண்டுள்ளது. மண் விஞ்ஞானம், தாவர விஞ்ஞானம், கால்நடை மற்றும் உணவு விஞ்ஞானம் மற்றும் புவியியல் தகவல் முறைமைகள் போன்ற ஆய்வுகூடங்கள் என்பவற்றுடன் விவசாய பொறியியல் தொழிற்கூடமும் ஒன்றிணைந்து மாணவர்களின் பகுப்பாய்வு மற்றும் ஏனைய திறன்களை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது.

விவசாய பீடமானது வருடாந்தம் 165 மாணவர்களை உள்ளெடுப்பதுடன் அனைத்து அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் வளாக விடுதி வசதிகளை அளித்து வருகின்றது. பீடத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கையானது தற்போது 90 க்கும் மேலாக காணப்படுகின்றது. இதன் பட்ட கற்கை நெறியானது அடிப்படை பாடவிதானங்களையும் விசேட பாடவிதானங்களையும் உள்ளடக்கியுள்ளது. அடிப்படை பாடவிதானங்கள் முதல் 5 அரையாண்டுகளில் பிரிக்கப்பட்டு எல்லா மாணவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 6 ஆம் மற்றும் 7 ஆம் அரையாண்டுகளில், மாணவர்கள் விசேடபாடவிதானங்களை அவர்களின் விருப்பின் பேரில் தெரிவு செய்ய அனுமதிக்கப்படுகின்றது. இறுதி அரையாண்டில், மாணவர்கள் 6 கிரடிட் புள்ளியை வழங்கும் சுய ஆய்வு ஒன்றினை ஆராய்ந்து அதன் விரிவான ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

B. அடைவுகள்

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவினால் பூர்த்தி செய்யப்பட்ட ஆய்வுகூட மற்றும் விரிவுரை மண்டபங்களுடனான கட்டடத் தொகுதிக்கு (ரூ. 758 மில்லியன்) அமைச்சரவையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
- 12 ஆவது வருடாந்த ஆராய்ச்சி சிம்போசியம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதோடு பிரசுரங்கள் பிரசுரிக்கப்பட்டன.
- முன்மொழியப்பட்ட தத்துவமாணிப் பட்ட கற்கை நெறியானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உத்தரவாத அலகினால் அங்கீகரிக்கப்பட்டது.
- பட்டப்பின் கற்கை நெறி ஆகிய "விவசாய முதுமாணி கற்கை நெறி" இற்கான முதலாவது அணி மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர்.
- கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட விடுதிகள் அமைக்கப்பட்டு முடிவடைந்துள்ளது.
- பீடமானது "விவசாயம் மற்றும் சூழல்தொகுதிகள் தொடர்பான இலங்கை ஆய்விதழ்" எனும் இணைய ஆய்விதழின் இரண்டாம் தொகுதியை பிரசுரித்துள்ளது.
- பீடத்தின் "விவசாயம் மற்றும் சூழல்தொகுதிகள் தொடர்பான இலங்கை ஆய்விதழ்" எனும் இணைய ஆய்விதழ் தே. வி. ம. இன் எஸ். எல். ஜே. ஓ. எல். இனால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.
- விரிவுரை மண்டபங்களின் வசதிகள் மேம்படுத்தப்பட்டு உள்ளன.
- தே. ஆ. பே. இன் ரூ. 4.9 மில்லியன் தொகை ஆய்வு மானியத்தை பெற்றுக் கொண்டது.
- ஜனாதிபதி செயலகமும் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சும் இணைந்த ஆய்வுத் திட்டத்தில் (ரூ. 12.63 மில்லியன்) ''இலங்கை உலர்வலயத்தில் நீடித்து நிலைத்து நிற்கும் பயிரிடல் முறைகளுக்கான ஆய்வு மேடையை மேம்படுத்துவதற்கு பல்நோக்கு உத்தி'' திட்டத்தை தொடர்கின்றது.

- இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழு உடன் ஒன்றிணைந்து ரஜரட்டைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் தொழில்நுட்ப காப்பக நிலையம் அமைக்கப்பட்டமை.
- 2020 ஆம் ஆண்டின் மாசி 11 ஆம் திகதி விலங்கு மற்றும் உணவு விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவின் விசேடத்துவ பட்ட நெறியை கற்கும் 3 ஆம் வருட 2 ஆம் அரையாண்டு (2015/2016) மாணவர்களினால் "அரன்சியா 2020" போசணை தினம் ஒழுங்குபடுத்தப்பட்டது.
- விலங்கு மற்றும் உணவு விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவின் ஆய்வு கூட சேவையை நிறுவுதல்

C. தோல்விகளும் நியாயங்களும்

- நிதிப்பற்றாக்குறை காரணமாக பண்ணை வீதி அமைப்பு மேம்படுத்தல் ஆரம்பிக்கப்படாமை.
- கோவிட் - 19 தொற்றுநிலைமை காரணமாக ஆய்வுகூட மற்றும் விரிவுரை மண்டபங்களுடனான கட்டடத் தொகுதி ஒன்றை ஸ்தாபித்தலில் தாமதம் ஏற்பட்டமை
- கோவிட் - 19 தொற்றுநிலைமை காரணமாக 600 விரிவுரை மண்டப கதிரைகளை கொள்வனவு செய்தல் தோல்வி அடைந்தமை
- நிதிப்பற்றாக்குறை காரணமாக பால் மற்றும் இறைச்சி பதப்படுத்தல் அலகுகளுக்கு உபகரணங்கள் பொருத்தப்படாமை.

D. எதிர்காலத் திட்டங்கள்

- விவசாயத்தில் பட்டப்பின் ஆய்வு பட்ட கற்கைநெறியை (தத்துவமாணி, முனைவர் பட்டம், முதுமாணி) அமுல்ப்படுத்துதல்.
- பீடப் பண்ணையில் கால்நடை வளர்ப்பு அலகை விரிவுபடுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளல்
- தொழிற்துறைப் பயிற்சி நெறிகளுக்காக நிறுவனங்களுடன் புரிந்துணரர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடல்
- ஆய்வுகூட மற்றும் விரிவுரை மண்டபங்களுடனான கட்டடத் தொகுதி ஒன்றை தாபித்தல்.
- எல்லா வசதிகளுடன் கூடிய பால் மற்றும் இறைச்சி பதப்படுத்தல் அலகுகளை அமைத்தல்.
- பீடத்திற்கு உரிய 13 ஆவது வருடாந்த ஆய்வு சிம்போசியத்தை ஒழுங்குபடுத்தல்.
- பீட வளாகத்தின் பண்ணை வீதி அமைப்பை மேம்படுத்தல்.
- பீடப் பண்ணை மற்றும் புதிய நிலம் (3 ஆம் துண்டு) என்பவற்றை சுற்றி வேலிகளை நிர்மாணித்தல்.
- பீடத்தின் சூழல் அழகினை மேம்படுத்தல்.

18. பிரயோக விஞ்ஞான பீடம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகமானது (இ.ர.ப) 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7 ஆம் திகதி வெளியிடப்பட்ட 896/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் அநுராதபுர நிர்வாக மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்த மாணவர்களை முன்னேற்றுவதற்காக மூன்று வருட பட்ட கற்கை நெறியை வழங்குவதை உடனடி நோக்காகக் கொண்டு, பொல்கொல்லவில் இருந்த மத்திய மாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரியை இணைத்து பீடமானது 10 ஆம் திகதி தை மாதம் 1997 இல் 3 வருட பட்ட கற்கைநெறியை 102 மாணவர்களைக் கொண்ட அணியுடன் கால்கோள் செய்யப்பட்டு 1998 இல் அவர்கள் பட்டம் பெற்றனர். 1997 இல் பதிவு செய்தவர்களை முதலாவது மாணவ அணியாக பட்ட கற்கைநெறியை மேற்கொள்ள ப.மா.ஆ இனால் அனுப்பப்பட்டது.

இறுதியில் பீடமானது மிஹிந்தலையிலுள்ள பிரதான வளாகத்தில் 16 ஆம் திகதி தை மாதம் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ச்சியான விருத்தியுடன், பீடமானது ஒரு செயற்திறன் மிக்க, புத்தாக்க மற்றும் 2020 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இரசாயனவியல் கற்கைத் துறைப் பிரிவு அடங்கலாக ஐந்து கற்கைத் துறைப் பிரிவுகளின் ஊடாக தேசியமயப்படுத்தப்பட்டதும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதுமான பிரயோக விஞ்ஞானத்தின் வெவ்வேறு துறைகளில் 13 இளமாணிப் பட்டக் கற்கை நெறிகளை அளிப்பதை முதன்மைப்படுத்தி கற்றல், ஆய்வு, தொழிற்பயிற்சிகள் மற்றும் ஆலோசனை என்பவற்றில் பெயர் பெற்ற நிலையமாக விளங்குவதை நோக்காகக் கொண்டது. மேலும் பீடமானது ஆய்வின் மூலமான பட்டப்பின் பட்டங்கள் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகளை வழங்குகின்றது.

B. அடைவுகள்

- பீடம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உத்தரவாத அலகிடம் சுய மதிப்பீட்டு அறிக்கைகளை 30 ஆம் திகதி ஆனி மாதம் 2020 ஆம் ஆண்டு அன்று சமர்ப்பித்தது.
- நேர்மைமுறை மீளாய்வுக் குழு வெளியக விண்ணப்பங்கள் அடங்கலாக ஆய்வுகளை நடாத்துவதற்கு நேர்மைமுறை
- பாடவிதான விருத்தி
    - பாடவிதான விருத்திக் குழுவினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய கணிதவியலில் கௌரவ பட்ட கற்கை நெறிக்குரிய பாடவிதானங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன
    - புள்ளிவிபரவியலுக்குரிய மேம்படுத்தப்பட்ட பாடத் திட்டங்கள் பாடவிதான விருத்திக் குழுக்கு சமர்ப்பிக்கப்பட்டது
    - சுகாதார விருத்தியில் இளமாணி மற்றும் சுகாதரா விருத்தியில் கௌரவ இளமாணி பட்டங்களுக்குரிய பாடவிதானங்கள் பல்கலைக்கழக பாடவிதான விருத்திக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
    - 2020 ஆம் ஆண்டு தை மாதத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் (கௌரவ) இளமாணிப் பட்ட கற்கை நெறியின் தற்போதைய பாட விதானம் மீள்திருத்தம் செய்வதற்கு தொழிற்துறை நிறுவன நிபுணர்கள் மற்றும் கல்விசார் நிபுணர்கள் உடனான மூன்று நாள் தொழிற்பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது. மீள்திருத்த செயற்பாடுகள் தற்போது பாடவிதானம் எழுதுதலின இறுதி நிலையில் உள்ளது.
    - பீடத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய முறைக்கு ஏற்ப ஆங்கில மொழிப் பாடங்களுக்குரிய பாட ஏற்பாடுகள் மாற்றி அமைக்கப்பட்டன

- பட்டப்பின் கற்கைகள்
    - பட்டப்பின் அலகு மற்றும் கற்கைகள் குழு என்பவற்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன

- ஆய்வின் மூலமான உயர் பட்ட கற்கை நெறிகளின் சட்டவிதிமுறை ஒழுங்குகள் மாற்றியமைக்கப்பட்டன (2021 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வரும்).
- பீடத்தினால் சிறுவர் பாதுகாப்பில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறியானது 2020 ஆம் ஆண்டின் ஆவணி மாதத்தில் இருந்து நிர்வகிக்கப்படுகின்றது

- உட்கட்டமைப்பு வசதிகள்
  - பகுதி- நிரந்தர கட்டடத்தின் முன்மொழிவு ப. மா. ஆ இனால் அங்கீகரிக்கப்பட்டு இருப்பதுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக திட்டமிடல் அமைச்சின் கீழ் உள்ளது
- சுவீகரிக்கப்பட்ட ஆய்வு மானியங்கள்
  - இரசாயனவியல் விஞ்ஞானத் துறைப் பிரிவினால் தேசிய ஆய்வுப் பேரவையின் கீழ் இரு ஆய்வு மானியங்கள் பெறப்பட்டன
  - சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவினால் செயற்பாட்டுஆய்வு ஒன்றுக்காக மொத்தத் தொகை ரூ. 5,142,500 பெறுமதியான உலக வங்கியின் ஆய்வு மானியம் பெறப்பட்டது
  - ஏழு குறுகிய - கால முன்னோடிச் செயற்திட்டங்கள் போதைப் பொருட் பாவனையை குறைப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் மதுபான மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்திடம் (ம. போ. த. நி) இருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டன.
  - ரூ. 80 மில்லியன் பெறுமதியுடைன இரு ஆ. பு. வ (ஆய்வு, புத்தாக்க மற்றும் வணிகமயமாக்கல் மானியங்கள்) மயானியங்கள் யுர்நுயுனு இடமிருந்து பெறப்பட்டன.
- கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் அதாவது பீடத்திற்கான பாட வடிவமைப்பு, பரீட்சை விடயங்கள் தொடர்பான வழிகாட்டல்கள், தொழிற்துறைப் பயிற்சிக்கான வழிகாட்டி, புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டத்துக்கான கொள்கைகள், பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பாவனைக்குரிய கொள்கை, மாணவர் முன்னேற்ற கொள்கைகள், பல்கலைக்கழக நிகழ்நிலை கற்றல் சூழல் (நி. க. சூ) கொள்கை, கல்வித் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் குழுவுக்கான குறிப்புக்களுக்கான விடயங்கள், நூலக அறிமுக நிகழ்ச்சித்திட்டத்துக்கான வழிகாட்டி மற்றும் திறந்த கல்வி மூலங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் மாணவர் ஆவணங்கள் முகாமை ஆகியன பீடத்தின் தர உத்தரவாத அலகின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டது.
- மாணவர்களுக்கான வெளிக்கள செயற்பாட்டு இடுகைகள் வழிகாட்டிகள், சகபாடிகள் மதிப்பீட்டு முறைகள், கற்கைத் துறைப் பிரிவின் விருதுக்கான வழிகாட்டிகள் மற்றும் மாணவர்களின் வெளிக்கள செயற்பாடுகளுக்கான வழிகாட்டிகள் என்பன சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவுக்காக தயாரிக்கப்பட்டன.
- அடையப்பட்ட முன்னேற்றங்கள்
  - இரசாயனவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவினை ஸ்தாபிப்பதற்கு நிர்வாக மற்றும் கல்வி தொடர்பானவை உள்ளடங்கலாக அனைத்து அத்தியாவசிய நடவடிக்கைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிறைவேற்றப்பட்டன.
- நாட்டில் நிலவிய நோய்த் தொற்று நிலைமை காரணமாக தேசிய அங்கீகாரத்தை நோக்கிய சுகாதார விருத்திக்கான அணுகல் மற்றும் கற்கை நெறிகள் 2020 ஆம் ஆண்டில் அதிகளவில் அதிகரித்துக் காணப்பட்டது. இலத்திரனியல் மற்றும் அச்சிடப்பட்ட ஊடகங்கள் முயற்சிகள் மற்றும் கோவிட்-19 இனை எதிர்கொள்வதற்காக அமுல்ப்படுத்தப்பட வேண்டிய சுகாதார விருத்திக்கான அணுகல் உடன் கூடிய விரிவான முறைகள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு மேம்படுத்தின.
- விருதுகள்
  - வைத்தியர். டபிள்யூ. எம். எஸ் பெர்ணான்டோ, சிரேஷ்ட விரிவுரையாளர்/ சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு அவர்கள் நிரேராகி லங்கா நீரிழிவு தடுப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பாகமான இலங்கையில் நீரிழிவு தடுப்பில் சிறந்த பங்களிப்புக்காக தேசிய விருதைப் பெற்றுக் கொண்டார்.
  - தரம் மற்றும் புத்தாக்க ஆய்வுகளில் சிறந்து விளங்கலை மேம்படுத்தும் பொருட்டு பீடத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த ஆய்வுக்குரிய விருதை வழங்குவதற்கு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- சுகாதார விருத்தி சமூக அமைப்பினால் நடாத்தப்பட்டவை
    - நிலவின் கீழ் – 2020 ஆண்டு தை மாதம் 23 ஆம் திகதி அன்று பல்கலாச்சார திறமைகளை ஊக்கவிக்கவும் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இடையே இணைப்பை வலுப்படுத்தவும் நடாத்தப்பட்டது
    - சமூகத்திற்கான நிதியை பெறுவதற்காகவும் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடையே சூழல் நேய கொள்கையை ஏற்படுத்துவதற்காகவும் ஒரு நன்கொடைக் கடை 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3 ஆம் திகதி அன்று அமைக்கப்பட்டது.
- பல்கலைக்கழகத்துக்கான "பரீட்சைகள் தகவல் முறைமை (ஈ. ஐ. எஸ்)" இனை பிரதிப் பதிவாளர்/ கல்விசார் மற்றும் பரீட்சைகள் பிரிவு அவர்களின் உதவியுடனும் கணினி நிலையம், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் விவசாய பீடம் ஆகியவற்றின் கல்விசார் உதவி உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் விருத்தி செய்யப்பட்டது. தற்போது இந்த முறைமை பீடத்தினால் ஒரு முன்னோடி செயற்திட்டமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. முதல் தடவையாக புதுமுக மாணவர்கள் (2018/ 2019 அணி) பீடத்திற்கு இணையவழியில் உள்வாங்கப்பட்டு வெற்றிகரமாக பதிவுகள் ஈ. ஐ. எஸ் இனூடாக மேற்கொள்ளப்பட்டது மற்றும் ஈ. ஐ. எஸ் இனூடாக அனைத்து மாணவர்களும் தமது தற்போதைய அரையாண்டுக்கான பதிவுகளை மேற்கொள்கின்றனர்.
- தொழிற்பட்டறைகள் மற்றும் இணையவழிக் கருத்தரங்கு அமர்வுகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

1. உயர்தர பௌதிகவியல் மாணவர்களுக்கான தொழிற்பட்டறை ஒன்று மிஹிந்தலை மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.
2. கணினியியல் கற்கைத் துறைப் பிரிவின் கீழ் இணையவழிக் கருத்தரங்கு அமர்வுகள் வெவ்வேறு நிறுவனங்களினால் நடாத்தப்பட்டன.

- நான்கு இணையவழிக் கருத்தரங்கு அமர்வுகள் & வருடாந்த பொதுக் கூட்டம் -- அனைத்து தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞான பட்டதாரி மாணவர்களுக்காக இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழக ஐ.ஈ.ஈ.ஈ. மாணவர் கிளையினால்
- நான்கு இணையவழிக் கருத்தரங்கு அமர்வுகள் & வருடாந்த பொதுக் கூட்டம் -- அனைத்து தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞான பட்டதாரி மாணவர்களுக்காக இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சங்கத்தினால் (ர. த.தொ.தொ. ச)
- பத்து இணையவழிக் கருத்தரங்கு அமர்வுகள் & கூட்டம் 2020/21-- அனைத்து தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞான பட்டதாரி மாணவர்களுக்காக இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழக எ.ஃப். ஓ. எஸ். எஸ். சமூகம் மற்றும் மொஷிலா கம்பஸ் கழகம் என்பவற்றால்

- கணினியியல் கற்கைத் துறைப் பிரிவின் மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் 2020-2021 ஆம் ஆண்டிற்கான ஐ. ஈ. ஈ. ஈ இன் இலங்கைப் பிரிவு மாணவர் செயற்பாடுகள் குழுவில் தன்னார்வத்துடன் இணைந்து செயற்படுகின்றனர்.
- கணினித் துறையின் இளங்கலைப் பட்டதாரிகள் மற்றும் பட்டதாரிகள் ஐ. ஈ. ஈ. ஈ இன் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகப் பிரிவின் மாணவர் கிளையிலிருந்து 18 பட்டதாரி மாணவர்கள் பிரதிநிதிகளாக ஐ. ஈ. ஈ. ஈ எஸ். எல். எஸ். வை. டபிள்யூ. சீ' 20 எனும் ஐ. ஈ. ஈ. ஈ இன் இலங்கைப் பிரிவின் கொடி நிகழ்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

C. தோல்விகளும் நியாயங்களும்

கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை கோவிட் 19 நோய்த் தொற்றுநிலை காரணமாக குறித்த காலப்பகுதியல் திட்டமிடப்பட்ட நடாத்தப்பட முடியாமல் போனது.

- பிரயோக விஞ்ஞான பீட பட்டதாரிகள் ஆய்வு அமர்வுகள் (பி.வி.பீ. ப. ஆ.அ - 2020)
- உயிரியல் விஞ்ஞானத்தை தொடர்கின்ற மாணவர்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அதிகமான தொழிற் பயிற்சிகள்
- வெளிக்கள செயற்பாட்டுகள் (தாவர நுண்ணங்கி இடைத் தொடர்பு)
- 2020 ஆம் ஆண்டின் பங்குனி மாத 29 ஆம் திகதியில் இருந்து சித்திரை மாதம் 02 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் திட்டமிடப்பட்ட சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவுக்கான கனடா லாவல் பல்கலைக்கழகத்தில் இருந்து நம்பிக்கைக் குழுவினர் விஜயம்

மற்றும் மிஹந்தலை சுகாதார அலுவலகத்திற்கான வெளிக்கள திட்டங்கள்

- சிட்னிப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச பொதுச் சுகாதார முதுமாணி கற்கை நெறியின் மாணவர்களுக்கான வெளிக்கள பயிற்சிகள்
- தொழிற்துறைப் பயிற்சிக்கான சரியான கால அட்டவணையை தயாரிக்க முடியாமை

- கல்விசார் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் பௌதிக வளங்களின் பற்றாக்குறை என்பன காரணமாக இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தமை
- பாட விதான மீளாய்வு அங்கீகாரம் வழங்கும் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதத்தால் 2018/2019 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கு சுகாதார விருத்தி இளமாணிப் பட்ட கற்கை நெறி மற்றும் சுகாதார விருத்தி கௌரவ இளமாணிப் பட்ட கற்கை நெறி ஆகியவற்றின் மீளாய்வு செய்யப்பட்ட பாட விதானங்களை அமுல்ப்படுத்தப்பட முடியாமை
- சுகாதார விருத்தித் கற்கைத் துறைப் பிரிவின் கட்டட விரிவாக்கம் ஆரம்பிக்கப்படாமை.

D. எதிர்காலத் திட்டங்கள்

- பசுமைப் பல்கலைக்கழக கொள்கையை உருவாக்குதல் - சூரிய படலத்தை பொருத்துதல்
- வலுவிழந்தோருக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (வலுவிழந்தோருக்கான மலசலகூடத்தை புனரமைத்தலை பூர்த்தி செய்தல்)
- கணிதவியல் கல்வித்துறைப் பிரவு மற்றும் பட்டப்பின் கற்கை அலகை நிறுவுதல்
- பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு விருது வழிகாட்டிக்கு அமைய 2019 ஆம் ஆண்டில் இருந்து ஆய்வு விருதுகளை வழங்குதல்
- கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான கற்கை நெறி மீளாய்வு (வருகையை நோக்காகக் கொண்டு) தொடர்பாக தொழிற் பட்டறை ஒன்றையும் மற்றும் பீடத்தின் உள்ளக தர உத்தரவாத அலகினால் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு தொடரான உத்தியோகத்தர் விருத்தி தொடர்பான தொழிற் பட்டறைகளையும் நடாத்துதல்
- புதிய பட்ட கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துதல்; பௌதிகவியலில் கௌரவ இளமாணிப் பட்டம், தரவுப் பகுப்பாய்வில் கௌரவ இளமாணிப் பட்டம், "சூழல் விஞ்ஞானத்தில் கௌரவ இளமாணிப் பட்டம்" (பாட விதானங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன)
- சீனாவில் இருந்து தே. ஆ. பே ரீ. ஓ. மானியம் 16 – 015 இன் நிதி உதவியின் மூலம் நேர்மாறான மின் பகுப்பு முறையுடனான நீர்ச் சுத்திகரிப்பு தொகுதி அமைப்பு ஒன்றை பெற்று பொருத்துதல்
- சுகாதார விருத்தி டிப்ளோமா கற்கை நெறியை மீள ஆரம்பித்தல்
- தகவல் தொழில்நுடபத்தில் (கௌரவ) விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நெறிக்கான பாட விதானத்தை பூர்த்தி செய்தல் மற்றும் கணினி விஞ்ஞான துறைக்கான பாட விதான மீளாய்வை ஆரம்பித்தல்
- ஆண்டுக்கான கல்விசார் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்
- மாணவர்களுக்குத் தேவையான பௌதிக வளங்களை அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள விருத்தி செய்தல்
- உயிரியல் விஞ்ஞான துறையினால் சமூகத்திற்கு அறிவு மற்றும் தொழிநுட்பம் என்பவற்றை கொண்டு செல்வதற்காக தொழிற் பட்டறைகளை நடாத்துதல்
- உயிரியல் விஞ்ஞானத்தின் வேறுபட்ட துறைகளில் மாணவர்களின் அறிவு மற்றும் திறமைகளை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
  - பட்டதாரி மாணவர்களின் ஆய்வு மற்றும் முன்வைக்கும் திறனை வளர்ப்பதற்காக ஏனைய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மாணவர் ஆராய்ச்சி அமர்வுகளை நடாத்த ஏற்பாடு செய்தல்
  - வடமத்திய மாகாணத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் போன்றோருக்கான பாடசாலைகளில் கல்வியின் தரத்தை முன்னேற்றும் பொருட்டு தொழிற் பட்டறைகளை நடாத்துதல்
- ஆய்வுட உத்தியோகத்தர்களுக்கு ஆய்வுகூட செயற்பாட்டுத் தரங்களை விருத்தி செய்வதற்காக பயிற்சிப் பட்டறையை ஒழுங்குபடுத்துதல்

19. முகாமைத்துவ கற்கைகள் பீடம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடமானது முகாமைத்துவ கற்கைகளில் சிறந்த ஒரு மையமாக செயற்படுகின்றது. இது பட்டப் படிப்பை மேற்கொள்ளும் ஏறத்தாழ 2000 மாணவர்களையும் 50 கல்விசார் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு இளைய சமுதாயத்தை ஆனால் ஆற்றல் மிக்க அணியையும் கொண்டுள்ளது. இந்த பீடமானது இளமாணிப் பட்ட மற்றும் பட்டப்பின் கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது. அக் கற்கை நெறிகள் முகாமைத்துவத்தின் வெவ்வேறு உப பிரிவுகளின் கீழ் இளமாணிப் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறிகள், முதுமாணிப் பட்ட கற்கைநெறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இப்பீடமானது கணக்கியலும் நிதியியலும், வணிக முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், தகவல் முறைமை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்பவற்றுடன் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் எனும் ஆறு கற்கைத் துறைப்பிரிவுகளின் மூலமாக பின்வரும் கற்கைநெறிகளை வழங்குகின்றது.

- கணக்கியல் மற்றும் நிதியியல் கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- வணிக முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- தகவல் முறைமை கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- மனித வள முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்

அத்துடன் மேலும், பட்டப்பின் கற்கைநெறியான வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் மற்றும் வெளிவாரி பட்ட கற்கைநெறி ஆகிய வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டம் ஆகியவற்றை, அவற்றுக்காக வேறாக தாபிக்கப்பட்ட அலகுகளின் மூலமாக வழங்கி வருகின்றது. அதே வேளை, இந்த பீடமானது ஒரு முனைவர் பட்டக் கற்கை நெறி ஒன்றை ஆரம்பித்துள்ளதோடு, அது ப. மா. ஆ இனால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் பணி நோக்கு முகாமைத்துவத்தில் தரமான கல்வியையும் செய்முறை திறன்களுடன் தலைமைத்துவத்தையும் வழங்குதல் மற்றும் மாறிவரும் சூழலை கருத்திற் கொண்டு ஆய்வுகளை நடாத்துதல் என்பனவாகும்.

பீடத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் ஆவன,

- மாணவர்களுக்கு வணிகம் மற்றும் முகாமைத்துவ கல்வியை வணிக நிறுவனங்களுக்கு உதவுவதுடன் விருத்தி செய்வதற்காக வழங்குதல்,
- வளர்ந்து வரும் தொழில் நிறுவனங்கள்.்.வணிக முதலீட்டாளர்களினால் எதிர்பார்க்கப்படும் அத்தியாவசியமான திறன்கள் மற்றும் அறிவை பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் மற்றும் வேகமாக அபிவிருத்தி அடைந்துவரும் வணிகச் சூழலில் தொழிற்தகைமை உடையவர்களாக அவர்களை ஆக்குதல்,
- வணிக உலகில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை புரிந்து கொள்வதற்கும் அவர்களின் வருங்கால தொழிலை மேம்படுத்துவதற்கும் போதுமான கொள்கை மற்றும் செய்முறை அறிவு போன்றவற்றை வழங்குதல்,
- அவர்களின் குறித்த துறைகளுடன் சம்பந்தப்பட்ட படைப்புச் சிந்தனைகள், பிரச்சினைகளை தீர்த்தல், தொடர்பாடல், மற்றும் ஆய்வு திறன்கள் ஆகியவற்றில் அவர்களின் முழுமையான ஆளுமையை வளர்ப்பதற்கு மாணவர்களை ஊக்குவித்தல், மற்றும்
- வசதிகள் கிடைக்கும் இடங்களிலும் மற்றும் கிடைக்கும் போதும் ஒழுக்கமுறைகளை பின்பற்ற மாணவர்களுக்கு பாரிய உதவியை அளித்தல்.

B. அடைவுகள்

- நான்கு இளமாணிப் பட்ட கற்கை நெறிகளுக்கான பாடவிதான மீளாய்வு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதுடன் அவை கௌரவப் பட்டங்களாக மாற்றப்பட்டன.
  - கணக்கியல் மற்றும் நிதியியல் கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
  - வணிக முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
  - தகவல் முறைமை கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
  - சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- பட்ட கற்கை நெறிகளினது அனைத்து பாட விடயங்களும் இணையவழி கற்றல் முகாமை முறைமைக்கு மாற்றப்பட்டுள்ளது.
- மாணவர்களுக்கு கல்விசார் ஆலோசனைச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.
- தகவல் முறைமை எனும் பெயரில் புதிய கற்கைத் துறைப் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.
- தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட்டது.
- விரிவுரை மண்டபங்கள் மற்றும் பீட கட்டடத் தொகுதி என்பவற்றில் வை.ஃபை வசதிகள் பொருத்தப்பட்டன.
- கற்கைத் துறைப் பிரிவு ஒன்றுக்கு கணினி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது.
- வணிக காப்பகம் ஒன்று நிறுவப்பட்டது.
- வணிக முகாமைத்துவ கற்கைத்துறைப் பிரிவின் கல்விசார் உத்தியோகத்தர்களின் வழிகாட்டலின் கீழ் மாணவர்களினால் 10 சமூகம் சார் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- பெரும்பாலான விரிவுரை மண்டபங்கள் சிறந்த வகுப்பறைகளாக விருத்தி செய்யப்பட்டன.
- தகவல் முறைமை கற்கைத் துறைப் பிரவில் தற்போது உள்ள கணினி ஆய்வு கூடத்தினை விரிவுபடுத்துவதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கைத் துறைப் பிரவின் மாதிரி சமையலறை மற்றும் உணவகம் என்பவற்றின் விரிவுபடுத்தல் வேலைகளில் கிட்டத்தட்ட 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

C. தோல்விகளும் நியாயங்களும்

- புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கற்கைத் துறைப் பிரிவுக்கான ஆளணிகள் இன்னும் அங்கீகரிக்கப்படாமை காரணமாக கல்விசார் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களுக்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் இணைவிதானச் செயற்பாடுகள் என்பவற்றை நடாத்த முடியாமல் போனது.
- கோவிட் 19 நோய்த் தொற்றுநிலை காரணமாக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நடாத்த முடியவில்லை.
- கோவிட் 19 நோய்த் தொற்றுநிலை காரணமாக பீடத்தின் கட்டட நிர்மாண வேலைகள் தாமதம் அடைந்தன

D. எதிர்காலத் திட்டங்கள்

- இளமாணிப்பட்டகற்கை நெறிக்கு இணையவழி மதிப்பீடுகளை அறிமுகப்படுத்தல்
- வடமத்திய மாகாணத்தில் வணிக நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை விருத்தி செயதல்
- வணிக அமைப்புக்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளல்
- மனிதவள முகாமைத்துவ மாணவர்களுக்கு உளவியல் மற்றும் ஆலோசனை வழங்கல் சான்றிதழ் கற்கை நெறி ஒன்றை புதிதாக அறிமுகப்படுத்தல்
- இரு பட்ட கற்கை நெறிகளுக்கான பாடவிதான மீளாய்வை ஆரம்பித்தல்
- எச். ஈ. ஆர் மாணவ இதழ் ஒன்றை ஆரம்பிக்க திட்டம் இடப்பட்டு உள்ளது

- மாணவர்கள் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்காக ஒரு புதிய கணினி ஆய்வு கூட தொகுதியை நிர்மாணிக்க திட்டம் இடப்பட்டு உள்ளது
- தகவல்முறைமை கற்கைத் துறைப் பிரிவின் கணினி ஆய்வு கூடத்துக்கு புதிய கணினிகளை கொள்வனவு செய்ய திட்டம் இடப்பட்டு உள்ளது
- சுற்றுலாப் பாடசாலை, சைசுஆன் பல்கலைக்கழகம், பீ.ஆர் சீனாவின் கீழ் " சீனா - இலங்கை இடையான இடைநிலை கலாசார பாரம்பரிய & சுற்றுலா ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம்" ஆகியவற்றுடன் இணைந்து சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவில் ஆய்வு நிலையம் ஒன்றை நிறுவுதல்.
- கற்கைத் துறைப் பிரிவின் பட்டதாரி மாணவர்களின் ஆய்வு வெளியீடுகளை இலத்திரனியல் வடிவ சஞ்சிகையாக வெயியிடுதல்
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவின் சமையலறை மாதிரி மற்றும் உணவகம் என்பவற்றின் மேல்மாடி நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்தல்
- 2021 ஆம் ஆண்டின் உலக சுற்றுலா தினத்தை தேசிய சுற்றுலா பங்குதாரர்களுடன் இணைந்து கொண்டாடுவதற்னு ஏற்பாடு செய்தல்
- கோவிட் 19 மற்றும் சுற்றுலாத் துறை சம்பந்தமான முகாமைத்துவ விடயங்கள் ஆய்வதழின் விஷேட வெளியீடு
- எண்ணிக்கையில் அதிகரித்து வரும் மாணவர்களை அனுமதிப்பதற்காக இக் கற்கைத் துறைப் பிரிவின் ஆய்வு நிலையத்தை விரிவாக்கம் செய்தல்
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் குறுகிய கால கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு ஒன்றிய வளர்ச்சிக்கான திறன்கள் (அவுஸ்திரேலியா- உதவி) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடல்
- அநுராதபுர உணவு விடுதிகள் சங்கத்துடன் இணைந்து மாற்று சுறறுலாத்துறை விருத்தி எனும் தலைப்பில் ஐ. அ. – உதவி (ஐ. அ. அரசாங்கம்) அமைப்பின் ஆதரவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடல்

20. மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக (இ. ர. ப) மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம் (ம.ம.இ.வி.பீ) ஆனது 2006 ஆம் ஆண்டு ஆடி மாதம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் 15 கல்வித் துறைகள் மற்றும் 3 கல்வி அலகுகள் என்பவற்றை கொண்டது. நாட்டின் மூன்றாவது பெரிய வைத்தியசாலையான அனுராதபுர போதனா வைத்தியசாலை (அ.போ.வை) ஆனது பீடத்தின் பிரதான போதனா வைத்தியசாலையாக காணப்படுகின்றது. அ.போ.வை ஆனது நவீன இனங்காணல் மற்றும் முகாமைத்துவ வசதிகளுடன் கூடிய பிரதான சிகிச்சைப் பிரிவுகளுக்கான பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அலகுகளைக் கொண்டுள்ளது. அனைத்து சிகிச்சைத் துறைகளினது உத்தியோகத்தர்கள் அ.போ.வை இல் ஆலோசகர்களாக சேவையை வழங்கி வருகின்றனர். சமூக நடைமுறை பகுதியானது ஒரு சமூக-பொருளாதார ரீதியாக வேறுபட்ட மக்களைக் கொண்டுள்ளது, இது முதன்மை மற்றும் தடுப்பு பராமரிப்பில் விரிவான பயிற்சியை செயல்படுத்துகிறது. ம.ம.இ.வி.பீ வழங்கும் சமூக பராமரிப்பு சேவைகளில் மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேவைகள், வெளிக்கள சிகிச்சைகள், சுகாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் தாய்வழி மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் ஆகியவை அடங்கும், குறிப்பாக குழந்தை ஊட்டச்சத்து குறைபாட்டைத் தவிர்ப்பது மற்றும் தாய்வழி நோயுற்ற கண்காணிப்பை மேம்படுத்துவது தொடர்பானது. மாணவர்கள் தங்கள் முழு திறனை அடைவதற்கு வழி வகுப்பதன் மூலம், நிறுவனத்தின் தரத்தை உயர்த்த பீடம் தொடர்ந்து பாடுபடுகிறது. பீடத்தின் குறுகிய வரலாற்று காலப்பகுதி முழுவதும் எங்கள் இளங்கலை பட்டதாரிகள் பொதுவான தகுதி வரிசையில் உயர் பதவிகளைப் பெற்றுள்ளனர் மற்றும் பல்வேறு முதுமாணி படிப்புகளில் சிறந்து விளங்கினர்.

B. அடைவுகள்

- 2020 ஆம் ஆண்டினுள், இரு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு விரிவுரையாளர் (தகுதிகாண்) ஆகியோர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.
  - வைத்தியர். அமில இசுரு, சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் I, உளவியல் கற்கைத் துறைப் பிரிவு
  - வைத்தியர். எச். பி. டீ. ஜீவந்த, சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II, உடற்கூற்றியல் கற்கைத் துறைப் பிரிவு
  - வைத்தியர். எச். எம். என். சீ. ஹேரத், விரிவுரையாளர் (தகுதிகாண்), உடலியல் கற்கைத் துறைப் பிரிவு
- மருத்துவவியல் கற்கைத் துறைப் பிரிவின் வைத்திய பேராசிரியர் சிசர சிறிபத்தன அவர்கள் மருத்துவவியலில் சிரேஷ்ட பேராசிரியராக தரமுயர்த்தப்பட்டார்
- ஒட்டுண்ணியியல் கற்கைத் துறைப் பிரிவின் வைத்திய கலாநிதி கே. ஜீ. ஏ. டீ. வீரக்கோன் அவர்கள் ஒட்டுண்ணியியலில் வைத்திய பேராசிரியராக தரமுயர்த்தப்பட்டார்
- குழந்தையியல் கற்கைத் துறைப் பிரிவின் வைத்திய கலாநிதி டபிள்யூ. ஏ. ஜே. சீ. சந்ரகுமார சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II க்கு தரமுயர்த்தப்பட்டார்
- வைத்திய பேராசிரியர் என். கே. ஏ. சில்வா (ஒட்டுண்ணியலில் பேராசிரியர், ஒட்டுண்ணியல் கற்கைத் துறைப் பிரிவு) பௌதிகவியலாளர்களுக்கான ரோயல் கல்லூரி, எடின்பேர்க் (எ.ஃப். ஆர். சீ. பீ (எடின்)) இன் புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொண்டார்.
- வைத்திய கலாநிதி ஆர். டீ. என். சரத்சந்ர (சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவவியல் கற்கைத் துறைப் பிரிவு) பௌதிகவியலாளர்களுக்கான ரோயல் கல்லூரி, எடின்பேர்க் (எ.ஃப். ஆர். சீ. பீ (எடின்)) இன் புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொண்டார்.
- வைத்திய கலாநிதி ஏ. எம். ஏ. எச். எம். எஸ். சேனாநாயக்க (சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவவியல் கற்கைத் துறைப் பிரிவு) பௌதிகவியலாளர்களுக்கான ரோயல் கல்லூரி, எடின்பேர்க் (எ.ஃப். ஆர். சீ. பீ (எடின்)) இன் புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொண்டார்.
- வைத்திய கலாநிதி ஆர். டீ. என். சரத்சந்ர (தலைவர்/ சிரேஷ்ட விரிவுரையாளர், உளவியல் கற்கைத் துறைப் பிரிவு) உளவியலாளர்களுக்கான ரோயல் கல்லூரி, எடின்பேர்க் (எ.ஃப். ஆர். சீ. பீ (ஐ. இ)) இன் புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொண்டார்.

- வைத்திய கலாநிதி ஏ. எம். எம். வீ. குமாரி (விரிவுரையாளர், உடலியல் கற்கைத் துறைப் பிரிவு) அவரது முனைவர் பட்டக் கற்கையைப் பூர்த்தி செய்து கொண்டார்.
- வைத்திய கலாநிதி எச். ஈ. சீ. எஸ். குமார (தகுதிகாண் விரிவுரையாளர், உடலியல் கற்கைத் துறைப் பிரிவு) 'மொன்றியல் அறிவாற்றல் மதிப்பீட்டு சோதனையை நிர்வகித்தல் மற்றும் புள்ளியிடல் (எம்.ஒ.சீ.ஏ)' கற்கை நெறியைப் பூர்த்தி செய்து கொண்டார்.
- வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீசங்கர் (தலைவர்/ சிரேஷ்ட விரிவுரையாளர், சத்திர சிகிச்சை கற்கைத் துறைப் பிரிவு) சத்திர சிகிச்சையாளர்களுக்கான ரோயல் கல்லூரி (எ.்.ப். ஆர். சீ. எஸ் (ஜீ.எல்.ஏ.எஸ்.ஜி)) இன் புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொண்டார்.
- 2020 ஆம் ஆண்டினுள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.
    - திரு. டபிள்யூ. பி. திஸ்ஸாநாயக்க – சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
- பீடமானது கற்கை நெறிகள் மீளாய்வுக்கு உடட்படுத்தப்பட்டதுடன் 'B' தரத்தை பெற்றுக்கொண்டது.
- பீடத்தின் வளாகம் முழுவதையும் தரை வடிவமைப்புச் செய்யப்பட்டது
- பல்துறை ஆய்வுகூடத்தில் ஒலி ஒளி அமைப்பை பொருத்தப்பட்டது.
- பேராசிரியர் பிரிவில் திறன் ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்டது
- மகப்பேற்றியல் மற்றும் பெண்ணியல் கற்கைத் துறைப் பிரிவில் அரும்பொருட் காட்சியகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.
- நோயியல் கற்கைத் துறைப் பிரிவில் தன்னியக்க முழு குருதி கல எண்ணிக்கை பகுப்பாய்வி பொருத்தப்பட்டது
- பேராசிரியர் பிரிவில் பரீட்சை நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது
- பேராசிரியர் பிரிவில் கணினி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.
- குறியீட்டு ஆய்வுச் சஞ்சிகைகளில் ஆய்வுகளை பிரசுரித்தலுக்காக பீடாதிபதி விருதுகளை அளித்தல்.
- சிகிச்சைக்கு முன்னரான கட்டடத் தொகுதி நிர்மாணத்தை ஆரம்பித்தல்.
- நிலவிய கோவிட் - 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக ஏற்பட்ட பாரிய சவால்களுக்கு மத்தியிலும் கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் இந்த வருடம் முழுவதும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

(a.) ஆய்வுகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகளின் விபரம்

விடயம்	பிரசுரிக்கப்பட்டவை
a. ஆய்வு வெளியீடுகள் (சுருக்க ஆய்வறிக்கைகள் + முழுமையான ஆய்வறிக்கைகள்) எண்ணிக்கை	145
b. புத்தாக்கங்களின் எண்ணிக்கை	1
c. ஆய்விதழ்களின் எண்ணிக்கை	1
d. புத்தகங்களின் எண்ணிக்கை	1
e. கட்டுரைகளின் (முழுமையான ஆய்வறிக்கைகள்) எண்ணிக்கை	52

(b.) கருத்தரங்குகள், தொழிற்பட்டறைகள் மற்றும் சிம்போசியங்களின் விபரம்:

விடயம்	திட்டமிடப்பட்டவை	நடாத்தப்பட்டவை
a. பட்டப்பின் கற்கை நெறிகளுடன் தொடர்பானவை	13	13
b. பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகளுடன் தொடர்பானவை	-	-
c. இளமாணிப் பட்ட கற்கை நெறிகளுடன் தொடர்பானவை	10	10
d. பட்டப்பின் கற்கை (சமூக மருத்துவ கற்கைத் துறைப் பிரிவு) நெறிகளுடன் தொடர்பானவை	10	10
e. சுகாதார சேவைகள் மற்றும் பராமரிப்பு தரநிலைகளை மேம்படுத்தல் தொடர்பானவை (மருத்துவ கற்கைத் துறைப் பிரிவு)	1	1

(c.) பெறப்பட்ட விருதுகளின் விபரம்:

விடயம்	விருதுகளின் எண்ணிக்கை	கல்விசார் உத்தியோகத்தர்களினால் பெறப்பட்டவை	மாணவர்களினால் பெறப்பட்டவை
a. உள்நாடடு விருதுகள்	39	39	-
b. தேசிய விருதுகள்	4	3	-
c. சர்வதேச விருதுகள்	1	1	-
d. ஏனையவை	-	-	-

C. தோல்விகளும் நியாயங்களும்

தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களை இந்த வருடத்தினுள் நிரப்பும் பொருட்டு தரமான கல்விசார் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய விளம்பரப்படுத்தப்பட்டது ஆனால், சுகாதார அமைச்சுடன் ஒப்பிடுகையில் அதே தொழில்வாண்மைக்கு குறைந்த வசதிகளே பல்கலைக்கழகத்தினால் அளிக்கப்படுவதன் காரணமாக அது வெற்றியடையவில்லை.

D. எதிர்காலத் திட்டங்கள்

- பசுமைப் பல்கலைக்கழக கொள்கையை அமுல்ப்படுத்தல்.
- நூலகம் மற்றும் நிர்வாகக் கட்டடத் தொகுதியை புனரமைத்தல்.
- சீசீரீவீ கமரா அமைப்பை பொருத்துதல் (பேராசிரியர் பிரிவில்).
- பீட உத்தியோகத்தர்களுக்கான வாகன தரிப்படம் அமைத்தல்.
- மருத்துவ மாணவர்களுக்கான புதிய விடுதித் தொகுதியை அமைப்பதை நோக்கி செயற்படல்.
- கழிவுநீர் சுத்திகரிப்புத் தொகுதியை பொருத்துதல்.

21. சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்

A. அறிமுகம்

சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் ஆனது 1995 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோதே நிறுவப்பட்டது. தற்போது இப் பீடம் கிட்டத்தட்ட 2135 மாணவர் தொகையை கொண்டுள்ளது. 2020 இல் 434 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் தற்போதைய உள்வாங்கல் மாணவர் எண்ணிக்கை 434 ஆகும்.

சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் ஆனது 6 கற்கைத் துறைப் பிரிவுகளை கொண்டுள்ளது. இப் பீடம் ஒவ்வொன்றும் அவற்றினது பிரத்தியேகமான கீழே குறிப்பிடப்பட்ட கலைமாணி (பொது) மற்றும் கலைமாணி (சிறப்பு) பட்ட கற்கைநெறிகளை வழங்குகின்றது.

- தொல்பொருள் மற்றும் மரபுரிமை முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு
  - தொல்பொருள் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவத்தில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- ஆங்கில மொழி கற்பித்தல் கற்கைத் துறைப் பிரிவு
- சூழல் முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு
  - சூழல் முகாமைத்துவத்தில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- மானிடவியல் கற்கைத் துறைப் பிரிவு
  - வரலாற்றில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- மொழியியல் கற்கைத் துறைப் பிரிவு
  - சிங்கள மொழியில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- சமூக விஞ்ஞானங்கள் கற்கைத் துறைப் பிரிவு
  - பொருளியியலில் கௌரவ கலைமாணிப் பட்டம்

பட்டதாரி மாணவர்கள் பின்வரும் விளைவுகளை மேற்குறிப்பட்ட கற்கை நெறிகளின் ஊடாக அடைவார்கள்.

I. உள்நாட்டு மற்றும் சர்வதேச சமூக மற்றும் கலாசார திறன்களை முறையாக இனங்காணுதல் மற்றும் தேவைக்கேற்ப அவற்றை மாற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு நல்ல அறிவு, திறன்கள் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

II. பௌதிக மற்றும் ஆன்மீகத் தேவைகளுக்கு இடையிலான உள்ளார்ந்த உள்ளக - உறவைப் பற்றிய அவர்களின் கருத்தை வளர்ப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் ஒரு சீரான கல்வியைக் கொண்டிருத்தல்.

B. அடைவுகள்

- பொதுஜன தொடர்பாடலில் கௌரவ கலைமாணிப் பட்ட கற்கை நெறியை அறிமுகப்படுத்தியது.
- சமூகவியலில் கௌரவ கலைமாணிப் பட்ட கற்கை நெறிளை அறிமுகப்படுத்தியது.
- பொருளியல் கற்கைத் துறைப் பிரிவு எனும் ஒரு புதிய கற்கைத் துறைப் பிரிவை ஸ்தாபித்தது.
- ஆங்கில மொழி கற்பித்தல் கற்கைத் துறைப் பிரிவானது ஆங்கில மொழி கற்பித்தலில் பட்ட கற்கை நெறிகளை எதிர்வரும் காலத்தில் வழங்கவதற்கு தீர்மானித்துள்ளது. உள்வாரி மற்றும் வெளிவாரி மாணவர்கள் ஆகிய இரு சாராருக்குமான ஈ. ரீ. எஸ். எல். கலைமாணிப் பட்டக் கற்கை நெறிக்குரிய ஆரம்ப பாடத் திட்டங்களின் அமைப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் மேலும் மேம்படுத்துவதற்காக ஈ. எல். ரீ. ஆலோசகர்களுடன் தொழிற்பட்டறைகளை நடாத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பீடங்களுக்கு இடையிலான ஆங்கில பேச்சு போட்டி மற்றும் எழுத்துப் போட்டி என்பவற்றை 2020 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும், போட்டி மிகுந்த தொழில் சந்தையினுள் நுழைவதற்கு மாணவர்களை ஆங்கில மொழியில் திறன் மிகுந்தவர்களாக ஆக்கும் பொருட்டு பீட மட்டத்தில் ஈ. எல். ரீ. கற்கை நெறிகளை 2020 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்வதற்கு திட்டம் இடப்பட்டது.
- பெரும்பாலான விரிவுரைத் தொடர்கள் நிலவிய நோய்த் தொற்று நிலைமை காரணமாக தொலைக் கல்வி முறைமைகள் ஆகிய க. மு. மு வசதிகள் மற்றும் ZOOM செயலி என்பவற்றின் ஊடாக நடாத்தப்பட்டன

- சுய மதிப்பீட்டுக் குழுவனால் திறமையை அடிப்படையாகக் கொண்டதும் எதிர்பார்க்கைகளை அடிப்படையாகக் கொண்டதுமான கற்றல் முறைமையை விருத்தி செய்தல்.
- கலை, மற்றும் இலக்கியம் ஆகியன தொடர்பாக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியது.

C. தோல்விகளும் நியாயங்களும்

- "அயன மண்டல சுற்றுச்சூழல் ஆய்விதழ் தொகுதி II – 2020" வெளியிடுதல்
- சூழல் முகாமைத்துவத்தில் கௌரவ கலைமாணிப் பட்டத்தினை சூழல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞானமாணிப் பட்டம் ஆக தரமுயர்த்துதல்
- வரலாற்றுக் கற்கைகளில் ஒரு தேசிய ஆய்வு சிம்போசியம் (தே. ஆ. சி. வ. க) – 2020, 2020 ஆம் ஆண்டு ஆடி மாதத்தில்
- கல்வி ஆய்விதழ் மற்றும் மானிடவியல் கற்கைத் துறைப் பிரிவின் ஆய்விதழ் ஆகியவற்றை வெளியிடும் நடவடிக்கைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.
- கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை
  நாட்டில் நிலவிய தொடர்ச்சியான நோய்த் தொற்று நிலை காரணமாக பீடத்தின் சில முன்மொழியப்பட்ட நிகழ்வுகள் பிற்போடப்பட வேண்டி அமைந்தன.
- கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக 2018/ 2019 ஆம் கல்வியாண்டு மாணவர்களை உள்வாங்கலில் தாமதம் ஏற்பட்டமை. மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட போது அரையாண்டுக் கற்பித்தல் நடவடிக்கைகளை சமாந்தரமாக எடுத்துச் செல்ல வேண்டி இருந்தது. ஆகையால், விரிவுரைகள் ZOOM செயலியின் ஊடாக இணைய வழியில் இவ் உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கு நடாத்தப்பட்டது.

D. எதிர்காலத் திட்டங்கள்

1. தொல்பொருளியலில் 6 ஆவது பட்டதாரி மாணவர்கள் ஆய்வுச் சிம்போசியம் ஒரு நிகழ்நிலை நிகழ்வாக இடம்பெறும் சிம்போசியததின் சுருக்க ஆய்வறிக்கை பிரசுரிப்பு மற்றும் "புரவேதா" இதழ் ஆகியன இந் நிகழ்வில் வெளியிடப்படும்.
2. 'தொல்பொருளியல் மற்றும் மரபுரிமை கற்கைகள் ஆய்விதழ்' தொகுதி 05; வெளியீடு I, II & III ஆக கற்கைத்துறைப்பிரிவின் வருடாந்த ஆய்விதழழை வெளியிடுதல்
3. தொல்பொருளியல் மற்றும் மரபுரிமை கற்கைத் துறைப் பிரிவு ஆனது 2021 ஆம் ஆண்டில் இருந்து அத்துறைப்பிரிவின் கல்விசார் உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களின் அடைவுகளுக்கான கௌரவிக்கும் முறை ஒன்றை ஒழுங்குபடுத்தல்
4. பீட கற்கைத் துறைப் பிரிவுகளினால் நடாத்தப்படும் இணையவழிக் கருத்தரங்குகளை தொடர்து நடாத்துதல்
5. அயன மண்டல சுற்றுச்சூழல் ஆய்விதழ் தொகுதி II – வெளியீடு II இனை வெளியிடுதல் பட்டதாரி மாணவர்களுக்கான ஆய்வுச் சிம்போசியத்தை நடாத்துதல்
6. பட்டப்பின் கற்கைக்குரிய பாடத்திட்டங்களை பூர்த்தி செய்தல்
7. வணிக காப்பக அலகின் செயற்பாடுகளை விரிவாக்குதல் - பீடத்தில் மாணவர் கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்தல்
8. பொருளியல் கற்கைத் துறைப் பிரிவிற்கான புதிய ஆய்வுச் செயற்திட்டங்களை வி உருவாக்குதல்
9. மென் திறன்கள்/ தரவுப் பகுப்பாய்வு மேம்பாடு எனும் பெயரில் ஒரு குறுகிய கால கற்கை நெறியை அறிமுகப்படுத்தல.
10. இணையவழி மொழி நிகழ்ச்சி - ∴ப்ரான்ஸ், ஜப்பான், ஆகியவற்றின் தூதரகங்கள் சீனாவின் தூதரகத்தின் கன்பூசியஸ் தொழில் நிறுவனம் மற்றும் இந்திய உயர் ஆணைக்குழு என்பவற்றுடன் இணைந்து மொழியியல் கற்கைத் துறைப் பிரிவினால் முதல் முறையாக இணையவழி மொழி நிகழ்ச்சியை நடாத்தியது.
11. ஜப்பானிய மொழி ஆய்வுகூடம் - ஒரு புதிய ஜப்பானிய மொழி ஆய்வுகூடம் ஆனது ஜப்பானிய தூதரகத்துடன் இணைந்து அமைக்கப்படுதல்.

22. தொழில்நுட்ப பீடம்

A. அறிமுகம்

தொழில்நுட்ப பீடமானது இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் 6 ஆவது பீடமாக 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. தொழில்நுட்ப பீடத்தை நிறுவுவதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகள் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிறுவனத்தின் ஒட்டுமொத்த தற்போதைய கல்வி கட்டமைப்பை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டது. இந்த ஆரம்ப கட்ட முயற்சியின் மூலம், பிற இலங்கை பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது அவற்றுக்குச் சமமான அளவு மற்றும் நோக்கம் கொண்ட, போதியளவு விரிவான கல்வி கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்று நம்பப்பட்டது.

தொழில்நுட்ப பீடமானது ஒவ்வொன்றும் அவற்றுக்குரிய பட்ட கற்கை நெறிகளை பிரதானமாகக் கொண்டுள்ள 5 கற்கைத் துறைப் பிரிவுகளை கொண்டது: 1 – உயிர்ச் செயன்முறைத் தொழில்நுட்பம் (உ.செ.தொ), 2 – மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் (மி.இ.தொ), 3 – உணவுத் தொழில்நுட்பம் (உ.தொ), 4 – தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (த.தொ.தொ), 5 – சடப்பொருள் தொழில்நுட்பம் (ச.தொ). அனைத்து பட்ட கற்கை நெறிகளும் 4 வருட கால எல்லையைக் கொண்ட இலங்கை தகுதி கட்டமைப்பு தரநிலை 6 க்கு அமைவானதாகும். க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பிரிவின் கீழ் தோற்றிய மாணவர்கள் இந்த கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவதுடன் ஆரம்பத்தில் உயிர்முறைமைத் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் & தொடர்பாடல் தொழில் நுட்பம் ஆகிய குழுக்களாக பிரிக்கப்படுவர். உயிர்முறைமைத் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப மாணவர்கள் அவர்களது இரண்டாம் வருடத்தில் முறையே உயிர்முறைமை மற்றும் உணவு, மற்றும் மின்னியல் & இலத்திரனியல் மற்றும் சடப்பொருள் தொழில்நுட்பம், அவர்களது விருப்பத் தெரிவு, கற்றல் திறமைகள் மற்றும் வளங்களின் கிடைப்பனவு மற்றும் தொழிற்சந்தைக் கேள்வி என்பவற்றுக்கு இணங்க பிரிக்கப்படுவர்.

நாட்டில் தற்போதுள்ள பட்ட கற்கை நெறிகளுடன் ஒப்பிடுகையில், தொழில்நுட்ப பட்ட கறகை நெறிகளானது அதிக தொழில், பெரிதும் நேரடித் திறமைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கூடியவை ஆகும். பாடவிதானத்தின் ஆரம்பத்திலிருந்தே அதனுடன் தொழில்நிறுவனங்களின் தொடர்புகள் மற்றும் இணைப்புக்கள் என்பன ஒன்றிணைக்கப்படுகின்றன. இது அனைத்து பட்ட கற்கை நெறி மாணவர்களும் இறுதி அரையாண்டுகள் சிலவற்றில், தொழிற்கற்கைத் துறைப் பிரிவு இடுகைகள் மற்றும் ஒரு அரையாண்டு கால ஆய்வு செயற்திட்டம் என்பவற்றை தொடர வேண்டும் எனும் முக்கிய கெபள்கையைக் கொண்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் (ப.மா.ஆ) இருந்து பெறப்படும் நிதிக்கு மேலாக, பீடமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ஆ.அ.வ) இருந்தும் உட்கட்டமைப்பு மற்றும் மனித வள விருத்திக்காக நிதி உதவியைப் பெறுகின்றது. இந்த பீடமானது இன்று வரை க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்ற மாணவர்களை மூன்று அணிகளில் உள்வாங்கியதுடன் அதி சிரேஷ்ட மாணவர்கள் அவர்களின் நான்காம் வருட முதலாம் அரையாண்டை ஏற்கனவே பூர்த்தி செய்து தற்போது தொழிற்கற்கைத் துறைப் பிரிவு பயிற்சியை தொடர்கின்றனர். பீடமானது தற்போது நான்கு அணிகளையும் சேர்த்து 1060 மாணவர் தொகையை கொண்டிருக்கும் அதேவேளை 28 நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் 9 தற்காலிக உத்தியோகத்தர்கள் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

B. அடைவுகள்

மின் கம்பிகள் பொருத்தும் வேலை த. தொ. தொ ஆய்வு கூடத்தில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் இணைய வலையமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2021 ஆம் ஆண்டு தை மாத முடிவில் இவ் ஆய்வு கூடத்தை பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். கட்டம் II மற்றும் III கட்டடத் தொகுதிகளின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கட்டடவியலாளர்களின் காலக் கணிப்புகளின் படி பொறியியல் வேலைத்தளம் மற்றும் சடப்பொருள் முன்னோடித் தொகுதி என்பன மாசி மாதத்தின் முடிவில் பூர்த்தி செய்யப்படும். மூன்று மாடிக் கட்டடம் சித்திரை மாத இறுதியில் பூர்த்தி செய்யப்படும் அத்துடன் முழுச் செயற்திட்டமும் 2021 ஆம் ஆண்டின் கார்த்திகை மாதத்தில் பூர்த்தி செய்யப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி அளிக்கப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தி

(எஸ். ரீ. எச். ஆர். டீ) செயற்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல ஆய்வுகூடத் தொகுதிகள், அலுவலக மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டன. இச் செயற்திட்டத்தின் கட்டட வேலைக்கான நிதி மனுக்கள் திறக்கப்பட்டதுடன் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவிற்கு அதன் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்படும். இவற்றிற்கு மேலதிகமாக, பீடத்தினால் கோவிட் 19 தடுப்புக்கும் இணையவழி கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் இன்னொரு 25 மில்லியன் ரூபாவினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த 25 மில்லியன் தொகையில் 13 மில்லியன் மாணவர் விடுதிகளில் வை-பை வசதிகளை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டது. மற்றைய தொகை இணைய வழிக் கற்பித்தல் மற்றும் கற்றல் உபகரணங்களையும் பல்கலைக்கழகம் முழுவதிற்கும பயன்பாட்டிற்குத் தேவையான கை கழுவி திரவம், கையுறை, முகக் கவசம் மற்றும் சவர்க்காரம் ஆகியவற்றையும் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டது. பீடமானது கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக இணைய வழிக் கற்பித்தல் முறையை நோக்கி வெற்றிகரமாக மாறியது. அனைத்து விடயங்களுக்குமான பாடக் கொள்கைகள் இணைய வழிக் கற்பித்தல் மூலமாக பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது மற்றும் வருடம் முழுவதும் மாணவர்கள் பங்குபற்றல் 60 % ஆக காணப்பட்டது. 3 ஆவது வருட 2 ஆம் அரையாண்டு 15/16 த.தொ.தொ மாணவர்களின் இறுதி அரையாண்டுப் பரீட்சை மற்றும் செய்முறை வகுப்புக்கள் அவர்களுக்கு மாணவர் விடுதிகளில் இரு வார கால தனிமைப்படுத்தலின் பின்னர் நடாத்தப்பட்டன. 16/17 கல்வியாண்டு அணி மாணவர்கள் 2020 ஆம் ஆண்டு மார்கழி மாதம் அவர்களது இறுதி அரையாண்டுப் பரீட்சை மற்றும் செய்முறை வகுப்புக்களுக்காக கொண்டு வரப்பட்டனர்.

75 கி. வா. சூரிய மின்னுற்பத்தி தொகுதி ஒன்று 2020 ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஆ.அ.வ இன் நிதி உதவியுடன் எஸ். ரீ. எச். ஆர். டீ செயற்திட்டத்தின் கீழ் பீடத்தின் கட்டம் I கட்டடத்தில் பொருத்தப்பட்டது. இதில் இருந்து கிடைக்கும் வருமானம் பீட அபிவிருத்தி நிதி கணக்கில் வைப்பிடப்படுகின்றது. 300 கி. வா. மின் பிறப்பாக்கி பீடத்தில் பொருத்தப்பட்டது. தொழில்நுட்ப சேவை நிலையம் ஒன்று உபகரணத்தையும் ஆலோசனைச் சேவையையும் பிற நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டது. இதில் இருந்து கிடைக்கும் வருமானமும் பீட மற்றும் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதி கணக்கில் வைப்பிடப்படுகின்றது.

15/16 கல்வியாண்டின் உயிர்முறைமை தொழில்நுட்ப மாணவர்கள் மற்றம் பொறியயல் தொழில்நுடப மாணவர்கள் தமது மூன்றாம் வருடத்தின் 1 ஆவது ஆரையாண்டை பூர்த்தி செய்ததுடன் தொழிற்துறை பயிற்சிக்காக சென்றுள்ளர். தொழில்துறை பயிற்சி நெறிக்கு தொழில்நுட்ப பீடம் விண்ணப்பித்தது இதுவே முதல் முறையாகும், அத்துடன் அனைத்து மாணவர்களும் தங்கள் கற்கை நெறியுடன் தொடர்புடைய புகழ்பெற்ற நிறுவனங்களில் தொழில் வாய்ப்புகளைப் பெற முடிந்தது. அதே கல்வியாண்டு அணியின் த. தொ. தொ. மாணவர்கள் தமது 3 ஆம் ஆண்டின் 2 ஆம் அரையாண்டை நிறைவு செய்து அவர்களின் இறுதி இரண்டு அரையாண்டுகளுக்கு நகர்ந்துள்ளனர். பீடம் 275 மாணவர்களைக் கொண்ட அதன் 4வது அணியினை (18/19 உள்வாங்கல்) பதிவுக்காக அனுமதித்தது. புதிய மாணவர்களின் உள்வாங்கலுடன் பீடத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கை 1065 ஆக உயர்த்தப்பட்டது. பீடம் இரு சிரேஷ்ட விரிவுரையாளர்களையும் ஆறு தகுதிகாண் விரிவுரையாளர்களையும் ஆட்சேர்ப்பு செய்து கொண்டதுடன் மொத்த நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கையை 29 ஆக உயர்ந்தது.

உயிர்முறைமை தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு (உ. மு. தொ), தொழில்நுட்ப பீடம் ஆ. அ. வ இடமிருந்து விஞ்ஞான மற்றும் மனித வள விருத்தி செயற்திட்டம், உ. சு. நி – ரீ. டீ. ஆர் ஆய்வு மானியங்கள் மற்றும் ஐ. ஏ. ஈ. ஏ/ சீ. ஆர். பீ இன் எஸ். ஆர். எல். 2020007 மானியம் ஆகிய மூன்று (03) ஆய்வு மானியங்களை 2020 ஆம் ஆண்டில் தக்க வைக்கக் கூடியதாக அமைந்தது.

1. ஐ. ஏ. ஈ. ஏ/ சீ. ஆர். பீ இன் எஸ். ஆர். எல். 2020007 மானியம் (54, 000 யூரோக்கள்) (2022-2023) - “இலங்கையின் தனித்து வேறாக்கப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்திப் பகுதிகளில் மலட்டு பூச்சி நுட்பத்தை ஒருங்கிணைத்து பழ ஈக்களின் எண்ணிக்கையை குறைத்தல்.”

2. உ. சு. நி/ ரீ. டீ. ஆர். சனத்தொகை நிதி மானியம் 2019 (ஐ. அ. டொ. 55650) – "நடமாடும் காவி அவதானிப்பு அலகு (எம். வீ. எஸ். யூ.) மற்றும் இலங்கை மதவாச்சி சுகாதார அலுவலகத்தில் லெய்ஸ்மானியாஸிஸ் காவி அவதானிப்பினை வசதிப்படுத்தல்"

3. ஆ. அ. வ இடமிருந்து விஞ்ஞான மற்றும் மனித வள விருத்தி செயற்திட்டம் - சிறந்த விவசாயத்தில் திறமையைக் கட்டியெழுப்புதல் ஆய்வு சார் தொடர்புகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியக விண்ணப்பங்கள் ஆகியவற்றுக்காக ஐ. அ. இ மைக்சிகன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து விருத்திக்கான முன்மொழிவு

"வழிகாட்டிகள் வழிபெறுனர் தொடர்பு" எனும் தலைப்பில் ஒரு நிகழ்நிலை கருத்தரங்கு ஆனது இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட உயிர்ச் செயன்முறைத் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவினால் பிலிப்பைன்ஸில் உள்ள ரீ. டீ. ஆர் பூகோள ஆசியா எனும் கம்பனியுடன் இணைந்து கூட்டாக நடாத்தியது. கலாநிதி. ரீ.சீ. பழுணுஆராச்சிகே, (சிரேஷ்ட விரிவுரையாளர், உயிர்ச் செயன்முறைத் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு, தொழில்நுட்ப பீடம், இ. ர. ப), பேராசிரியர். ஜோசப் ரக்கர் (இணைந்த பேராசிரியர், சாபேல் மலையில் உள்ள வட கலிபோர்னியா பல்கலைக்கழகம் மற்றும் சுத்தம் மற்றுமு் மருத்துவ இலண்டன் பாடசாலை, ஐ. இ) மற்றும் பேராசிரியர். பிரதீபா பண்டாரநாயக்க (பணிப்பாளர், விவசாய உயிர்த் தொழில்நுட்ப நிலையம், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை) ஆகியோர்கள் இந் நிகழ்நிலைக் கருத்தரங்கின் பிரதான பேச்சாளர்கள் ஆவர். 589 பங்குபற்றுனர்கள் மற்றும் 3 குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அல்ஜீரியா, பங்களாதேஷ், பெல்ஜியம், பூட்டான், பேர்கினோ ∴பாஷோ, கமெரூன், சீனா, கொலம்பியா, எதியோப்பியா, ∴பாரோ தீவுகள், ∴ப்ரான்ஸ், ஜேர்மனி, கானா, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கென்யா, மடகஸ்கார், மாலவை, மாலைதீவு, மியன்மார், நேபால், நெதர்லாந்து, நைஜீரியா, பாகிஸ்தான், பப்புவா நியூக்கினியா, இலங்கை, சுவிஸ்லாந்து, தன்சானியா, தாய்லாந்து, உகண்டா, ஐ. இ, ஐ. அ. நா மற்றும் ஷிம்பாபே ஆகிய நாடுகள் உள்ளடங்கலாக 34 நாடுகளில் இருந்து பங்குபற்றுனர்கள் இணைந்து கொண்டார்கள். பல விருந்தினர் உரைகள் மாணவர்களுக்காக கற்கைத் துறைப் பிரிவினால் நடாத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் கற்கைத் துறைப் பிரிவில் இருந்து ஏழு ஆய்வுக் கட்டுரைகள் மீளாய்வு ஆய்வு இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன. எஸ். ரீ. எச். ஆர். டீ செயற்திட்டத்தின் ஊடாக சில பாரிய உபகரணங்களையும் கற்கைத் துறைப் பிரிவு கொள்வனவு செய்து கொண்டது. அவையாவன: பரம்பரையலகு துப்பாக்கி, பயோகேன் கனிஸ்ரர் முறைமை, கையடக்கமான pH 450 மீற்றர் கலக்கி, நுண்ணலை அடுப்பு, கலக்கு முறை இன்குயூபேட்டர் எஸ். ஐ. 500, கலக்கு முறை இன்குயூபேட்டர் எஸ். ஐ. 600.

மின்னியல் & இலத்திரனியல் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு ஆனது வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்கு மின்னியல் மற்றும் வலு, இலத்திரனியல், தொலைத் தொடர்பாடல்கள், தானியங்கிகள் ஆகியன சம்பந்தமாக 80% ஆன ஆய்வுகூட அமர்வுகளை பூர்த்தி செய்வதற்கு முடிந்துள்ளது. அவர்கள் தமது கற்கை நெறியின் முதலாம் வருட முதலாம் அரையாண்டு, இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு மற்றும் மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு ஆகியவற்றை இணைய வழி மூலமாக வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளனர். பாட விதான மீளாய்வுக்காக ஆலோசகர்களை பெற்றுக் கொள்ளும் செய்முறை ஆ. அ. வ. இன் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இக் கற்கைத் துறைப் பிரிவு இந்தியாவில் நடைபெற்ற ஐ.ஈ.ஈ.ஈ. மாநாட்டில் ஒரு ஆய்வுக் கட்டுரையைப் பிரசுரித்துள்ளது. இக் கற்கைத் துறைப் பிரிவு பயணிக்கும் பல்கலைக்கழகம் எனும் பெயரில் ஒரு நிகழ்ச்சியை ஜேர்மனியில் உள்ள பிரயோக விஞ்ஞான ரியர் பல்கலைக்கழகம் உடன் இணைந்து நடாத்தியது. இந்த நிகழ்வில் 10 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து கிட்டத்தட்ட 20 வெளிநாட்டு மாணவர்கள் உள்நாட்டு தொழில் நிறுவனங்களுக்கு இடையே பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் பூச்சிய வெளியீட்டுக் கொள்கை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக 20 உள்நாட்டு மாணவர்களுடன் இணைந்து செயற்பட்டனர். இந்த நிகழ்விற்கும் எஸ். ரீ. எச். ஆர். டீ செயற்திட்டத்தின் கீழ் ஆ. அ. வ. இனால் நிதி அளிக்கப்பட்டது.

உணவுத் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு சில பிரதான உபகரணங்களை எஸ். ரீ. எச். ஆர். டீ. செயற்திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டது. அவற்றுள் அமைப்பு பகுப்பாய்வி, ரி.∴ப்ராக்டோமீட்டர், விஸ்கோமீட்டர், நீர் செயற்பாட்டு மானி , மருந்து குளிர்சாதன பெட்டி, செஸ்ட் குளிரூட்டி மற்றும் வோர்டெக்ஸ் உபகரணம் ஆகியவை உள்ளடங்குகின்றன. அத்துடன், 2020 ஆம் ஆண்டில் 3 ஆய்வுக் கட்டுரைகள் இக் கற்கைத் துறைப் பிரிவின் கல்விசார் உத்தியோகத்தர்களினால் வெளியிடப்பட்டன.

த. தொ. தொ கற்கைத்துறைப் பிரிவானது வெவ்வேறு துறைகளின் விருத்தியுடன் வெற்றியை ஈட்டியது. விஷேடமாக புதிய உபகரணங்களுடன் கூடிய கற்கைத் துறைப் பிரிவு செயன்முறை வகுப்புக்களுக்குத் தேவையான மற்றும் த.தொ.தொ ஆய்வுகூடத்தின் அபிவிருத்திக்கான உயரிய முடிவுடைய வேலைத் தளங்கள், மடிக் கணினிகள் மற்றும் இணைய வழங்கிகள் என்பவற்றை பெற்றுக் கொண்டது. புதிய த. தொ உபகரணங்கள் மாணவர்களின் செயற்திட்டங்களுக்கும் மற்றும் மாணவர்களின் அறிவை தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப விரிவுபடுத்தவும் உதவுகின்றது. அத்துடன் இக் கற்கைத் துறைப் பிரிவு மாணவர்களின் அறிவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக பல தொழிற் பட்டறைகளை நடாத்தியது. செயற்கை அறிவு எனும் தலைப்பில் ஒரு தொழிற் பட்டறை நடாத்தப்பட்டதுடன் இதன் வளவாளராக நோர்வேயில் இருந்து முதுநிலைப் பட்ட பரீட்சார்த்தி கலந்து கொண்டார் மற்றும் உள்நாட்டு தொழில்நிறுவனம் ஒன்றில் இருந்து வளவாளரைக் கொண்ட இன்னொரு தொழிற் பட்டறை தர உத்தரவாதம் எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது. மாணவர்களின் வடிவமைப்புத் திறன்களை மேம்படுத்துவதற்கு இக் கற்கைத் துறைப் பிரவு முப்பரிமாண முறையில் அச்சிடக் கூடிய அச்சுப் பொறிகள் கொள்வனவு செய்யப்பட்டன மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்க ஒரு தொழிற் பயிற்சியும் நடாத்தப்பட்டன.

தொழிற்துறைப் பங்காளர் அற்லஸ் அக்சிலா தனியார் கம்பனி உடன் இணைந்து சடப்பொருட் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு ஆனது சாயங்கள் மற்றும் நீர் வர்ணங்களை இயற்கையாகக் கிடைக்கும் உள்நாட்டு மூலப் பொருட்களில் இருந்து தயாரிப்பதற்கு ரூ. 10 மில்லியன் பெறுமதியான மானியத்தை எஸ். ரீ. எச். ஆர். டீ. செயற்திட்டத்திடம் இருந்து பெற்றுக் கொண்டது.

இரு தகுதிகாண் விரிவுரையாளர்கள் அவர்களது பட்டப்பின் பட்ட கற்கை நெறிகளை அவுஸ்திரேலியா மற்றும் கொரியா ஆகிய நாடுகளில் மேற்கொள்ள எஸ். ரீ. எச். ஆர். டீ. செயற்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டது.

C. தோல்விகளும் நியாயங்களும்

இவ் வருட காலப் பகுதியல் பல தோல்விகள் போதிய கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினால் ஏற்பட்டுள்ளது. அவற்றில் உள்ளடங்குவன

- அன்றாட கடமைகளில் தாமதம்
- முறையற்ற வள முகாமைத்துவம்
- பரிசோதனை செயன்முறைகளை உரிய நேரத்தில் நடாத்த ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் கிடைக்காமை
- கல்விசார் உத்தியோகத்தர்கள் அவர்களது அதிகளவான நேரத்தை நிர்வாக மற்றும் கல்விசாரா கடமைகளில் செலவு செய்கின்றமை.
- கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக செய்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள் நடாத்தப்பட முடியாமை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பீடமாக இருப்பதால் தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் அதிக வேலைப்பளு காரணமாக திண்டாடுகின்றனர். உத்தியோகத்தர் பற்றாக்குறைக்கு மேலதிகமாக ஆய்வுகூடம் மற்றும் அலுவலகம் என்பவற்றில் இடப்பற்றாக்குறை நிகழ்கின்றது. இதுவும் பல்வேறு தோல்விகளுக்கு காரணமாக அமைகின்றது. அவையாவன

- கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு சரியான இடவசதி இன்மை
- விரிவுரை மண்டபங்களின் ஒழுங்குபடுத்தல்களில் ஏனைய பீடங்களுடனான குழப்பங்கள் காரணமாக விரிவுரைகள் இறுதி நிமிடத்தில் நிறுத்தப்படுதல்.
- கோரப்பட்ட வெற்றிடங்கள் அனுமதிக்கப்படாமை காரணமாக உத்தியோகத்தர்களுக்கு மேலதிக வேலைச்சுமை

பீடமானது மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் அதிகரிக்கும் மாணவர் எண்ணிக்கையை உள்வாங்குவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றது.

- முழு மிஹிந்தலை வளாகமும் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டதால் விடுதி வசதிகள் மிகப்பாரியளவில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயம் ஒன்றாக உள்ளது.
- போதிய சிற்றுண்டிச்சாலை வசதிகள் இல்லாமையால் நீண்ட வரிசை காரணமாக மாணவர்கள் தமக்குரிய உணவுகளை உரிய நேரத்தில் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், அதனால் கல்விசார் செயற்பாடுகளில் தாமதம் ஏற்படுகின்றது.
- மற்றைய பீடங்களில் விரிவுரைகளை நடாத்துவதால் மாணவர்கள் ஒரு விரிவரை மண்டபத்தில் இருந்து இன்னுமொரு விரிவுரை மண்டபத்திற்கு பல்கலைக்கழக வளாகத்தின் ஊடாக நடந்து செல்வதற்கு அதிகளவான நேரத்தை வீணடிக்க வேண்டியதாக உள்ளது.
- விரிவுரைகள், செய்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றை உரிய நேரத்தில் முடிப்பதற்காக பின்னிரவு வரை நடாத்தப்பட வேண்டியதாக உள்ளது.

D. எதிர்காலத் திட்டங்கள்

உட்கட்டமைப்பு விருத்தி

- கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பு: ப.மா.ஆ இன் நிதியின் கீழான கட்டம் II மற்றும் கட்டம் III கட்டடத் தொகுதி: தொழிற்பட்டறைகள் மற்றும் வேலைத்தளமானது 2021 ஆம் ஆண்டு பங்குனி மாத இறுதியில் நிர்மாணித்து முடிக்க திட்டம் இடப்பட்டுள்ளது. ஆ.அ.வ நிதி உதவியின் கீழான கட்டடத் தொகுதி 2021 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பாடவிதான மேம்பாடு

- 2021 ஆம் ஆண்டிற்குள் அனைத்து துறைப் பிரிவுகளினதும் பாடவிதான மீள்பார்வைகள் பூர்த்தி செய்தல்.
- 2021 ஆம் ஆண்டின் மத்தியில் அனைத்து பட்ட கற்கை நெறிளுக்குமான அங்கீகார உறுதிப்பாட்டு வருகைகளை ஆரம்பித்தல்.
- வணிக காப்பகங்களை ஆரம்பித்தல்
- வருடாந்த பங்குதாரர்கள் கூட்டம் மற்றும் தொழிற்துறை ஆலோசனைக் குழுக்கூட்டங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்.

மனித வள விருத்தி

- தொழில்நுட்ப பட்ட கற்கை நெறிகளுடன் தொடர்பான கற்கைத் துறைப் பிரிவுகளில் விசேடத்துவம் அடைந்தவர்களை பீட அங்கத்தவர்களாக உள்வாங்கல்
- ஆ.அ.வ நிதி உதவியுடன் தகுதிகாண் நிலையிலுள்ள விரிவுரையாளர்களை அவர்களது பட்டப்பின் பயிற்சி நெறிகளுக்காக அனுப்பி வைக்கப்படுதல்
- கிடைக்கக்கூடிய நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான தொழிற்பட்டறைகள் நடாத்துவதற்கு வெளிநாட்டு நிபுணர்கள் அழைக்கப்படுவதுடன் கல்விசார் உத்தியோத்தர்களுக்கு பயிற்சி அளித்தல்

23. நூலக வலையமைப்பு

A. அறிமுகம்

நூலக வரலாறு

1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 07 ஆம் திகதிய இல 896/2 வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 16.08.1978 ஆம் திகதிய பல்கலைக்கழக சட்டம் என்பவற்றுக்கு அமைய மத்திய, வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களின் இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளின் வளங்களை ஒன்றிணைத்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் ஆனது 1996 ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நூலக முறைமை ஆனது 1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. ரஜரட்ட பல்கலைக்கழக நூலகத்தின் முதலாவது நூலகர் பேராசியர். பியதாச ரணசிங்கவும் (1996-1998), அடுத்ததாக திரு. கபில ஜயலால் சிறிசேனவும், பின்னர் திரு. காமினி டீ சில்வா (1999-2007) திருமதி. ஹேமா விஜேதுங்க (ஓய்வு விடுப்பு நியமிப்பு - 2007-2009) ஆகியோரும் திருமதி ஏ.எஸ் சிரிவர்த்தன அவர்கள் தற்போதைய நூலகராக 2019 ஆம் ஆண்டு முதல் இன்று வரை கடமை புரிகின்றார்.

நூலக விபரக்குறிப்பு

ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் நூலகம் ஆனது அறிவைப் பெறுவதில் நிறுவனத்தின் இதயமாகவும் மற்றும் அறிவைப் பரப்பும் பரந்து விரிந்த விருட்சமாகவும் உள்ளது. இந்த நூலகமானது பட்டதாரி மாணவர்கள், பட்டப்பின் பட்டதாரிகள், கல்விசார் உத்தியோகத்தர்கள், நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய பல்கலைக்கழக பயனர்கள் சமூகத்திற்கு சேவையை வழங்கி வருகின்றது. மேலும், நூலகமானது ஆய்வாளர்கள் மற்றும் இப் பிரதேசத்தில் உள்ள வெளிச்சமூகம் என்பவற்றுக்கு சேவை அளித்து வருகின்றது.

பீட நூலகங்கள்

இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் நூலக முறைமை ஆனது பிரதான நூலகம் மற்றும் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ள ஏனைய நான்கு பீட நூலகங்களினையும் உள்ளடக்குகின்றது. பிரதான நூலகம்,பிரயோக விஞ்ஞான பீட மற்றும் தொழில்நுட்ப பீட நூலகங்கள் மிஹிந்தலையில் அமைந்திருப்பதோடு அதன் மூலம் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம், முகாமைத்துவ கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் என்பவற்றிற்கு சேவை அளித்து வருகின்றது. புளியங்குளத்தில் உள்ள நூலகம் விவசாய பீடத்திற்கு சேவையாற்றுவதோடு, சாலியபுரவில் அமைந்துள்ள நூலகம் ஆனது மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீடத்திற்கும் சேவையாற்றி வருகின்றது. வைத்திய சிகிச்சை நூலகம் ஆனது அநுராதபரத்தில் உள்ள போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ளது.

நூலக அலுவலர்கள்

நூலகம் தற்போது கல்விசார் நூலக உத்தியோகத்தர்கள் (0), நிர்வாக உத்தியோகத்தர் (01), நூலக கல்விசார் உதவி உத்தியோகத்தர் (01), சமதர உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் (25) ஆகிய அலுவலர்களைக் கொண்டுள்ளது.

நூலக சேர்க்கைகள்

பிரதான நூலகத்தில் பாடப்புத்தகங்கள், ஆய்வு இதழ்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், அரச ஆவணங்கள், விசேட தொகுப்புக்கள், உசாத்துணை நூல்கள், கடந்தகால செயற்திட்ட அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் இலத்திரனியல் வளங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு உள்ளெடுக்கப்படுகின்றன. நூலக வளங்கள் ஆனது அச்சு மற்றும் இலத்திரனியல் வடிவங்களில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

நூலகமானது கொன்சல் ஊடாக மருத்துவம், விவசாயம், பிரயோக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் கணிணி விஞ்ஞானம் மற்றும் முகாமைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளில் முழுமையான ஆய்விதழ்களை பார்வையிடக் கூடியவாறு இணையத்தள ஆய்விதழ் தரவுகளை தரவு மையத்தின் மூலம் வழங்குகின்றது. நூலகம் ஆனது பல தற்போதைய ஆய்விதழ்களின் பாவனைக்கு பதிவு செய்துள்ளதுடன், பயனர்கள் அவர்களது தற்காலப் போக்குக்கு ஏற்ப நடைமுறை சார்ந்த அறிவுகளை

வளர்த்துக் கொள்வதை நோக்காகக் கொண்டது. இப் புத்தக தொகுப்புக்கள் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களிலும் பிரதானமாகக் கற்பிக்கப்படும் பாடவிதானங்கள் மற்றும் வேறுபட்ட விடயத் துறைகளிலான பாடப் புத்தகங்கள் என்பவற்றை கொண்டுள்ளது.

பிரதான நூலகம்	பிரயோக விஞ்ஞான பீட நூலகம்	விவசாய பீட நூலகம்	மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீட நூலகம்	தொழில்நுட்ப பீட நூலகம்	மொத்தம்
83120	14036	15132	10601	1622	124511

அட்டவணை 01: 31-12-2020 இல் உள்ளவாறான கிடைக்கக்கூடிய புத்தகங்களின் (பிரதிகள்) எண்ணிக்கை

கிடைக்கக்கூடிய இலத்திரனியல் - ஆதாரங்கள் மற்றும் தரவுத்தளங்கள்

இலங்கையின் பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் நிதியளிக்கப்பட்ட கொன்சால் (இலங்கையின் கல்விசார் நூலகங்களின் கூட்டமைப்பு) மூலம் பெறப்பட்ட தரவுத்தளங்கள் அதாவது -- எமரால்டு தரவுத்தளம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம், வாழ்க்கைக்கான ஆய்வு, ஹினாரி, ஆர்டி, ஓரே, கோலி, அகோரா

நூலகத்தின் முக்கிய சேவைகள்

புத்தகம் வழங்கும் வசதிகள், உசாத்துணை குறிப்பு வசதிகள் மற்றும் இடை - நூலக கடன் முறைமைகள், தற்போதைய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், தகவல் எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டங்கள், பயனர் கல்வி நிகழ்ச்சித் திட்டம், தொழிற் பட்டறைகள் மற்றும் நூலக வலைத்தள பராமரிப்பு ஆகியவை நூலகத்தின் முக்கிய சேவைகளில் அடங்கும். இணைய வழி ஆதாரங்களுக்கான பயனுள்ள முகவரி இணைப்புகள் நூலக வலைத்தளத்தின் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. நூலக பட்டியல்களை இணையத்தள பொது அணுகல் பட்டியல்கள் (OPAC) மூலம் பார்வை இடக் கூடியதாக அமையும். பல்கலைக்கழகத்தின் நிறுவன ஆவண களஞ்சியம் ஆனது நூலகத்தால் பராமரிக்கப்படும். பயனர்கள் இன்ட்ராநெட் மூலம் இணையத்தில் கடந்த கால வினாத்தாள் சேகரிப்பை அணுகலாம். நூலகம் வட மத்திய மாகாணத்திற்கான சமூக மேம்பாட்டு சேவையை வழங்குகிறது. (எ.கா. பள்ளி மற்றும் பொது நூலக கட்டிடம் என்பவற்றை பயனுள்ள முறையில் மறுசீரமைத்தல், புத்தக நன்கொடை அளித்தல் செயற்பாடு, பள்ளி மற்றும் பொது நூலக ஊழியர்கள் பயிற்சிப் பட்டறை நிகழ்ச்சித் திட்டம்)

	பிரதான நூலகம்	பிரயோக விஞ்ஞான பீட நூலகம்	விவசாய பீட நூலகம்	மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீட நூலகம்	தொழில்நுட்ப பீட நூலகம்	மொத்தம்
பட்டதாரி மாணவர்கள்	6115	1418	1028	1631	739	10931
பட்டப்பின் பயிலுனர்கள்	00	00	00	00	00	00
கல்விசார் உத்தியோகத்தர்கள்	382	107	78	47	06	620
தற்காலிக கல்விசார் உத்தியோகத்தர்கள்	37	59	48	00	13	157
நிர்வாக உத்தியோகத்தர்கள்	21	01	04	06	00	32
கல்விசாரா உத்தியோகத்தர்கள்	406	27	58	54	03	548

அட்டவணை 02: 31-12-2020 இல் உள்ளவாறான நூலகத்தின் அங்கத்தவர்கள்

- **தன்னியக்க நூலக வசதியை அளித்தல்**

நூலகம் தற்போதுள்ள நூலக தரவுத் தள முகாமை முறைமையினை திறந்த மூல மென்பொருளான "கோஹா" மூலமாக வெற்றிகரமாக மாற்றியுள்ளது. ரஜரட்டைப் பல்கலைக்கழக நூலக அமைப்பு "கோஹா" ஐப் பயன்படுத்துகிறது, அனுப்புதல், வரிசைப்படுத்துதல், வரவு செலவுத் திடட் அணுகல், புள்ளிவிவரங்கள் பரிந்துரைகள் ஆகியவற்றைப் பெறுதல் மற்றும் பயனர்கள் நூலக அட்டவணை இணைய வழிச் சேவைகளைத் தேடலாம். சமீபத்திய தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நூலகம் பயனர் சமூகத்திற்கு தொலைநிலை அணுகலை வழங்க முடியும்.

- **ஒரு நிறுவன களஞ்சியம் (நி. க.)**

ஒரு நிறுவன நூலக களஞ்சியமானது நிறுவனத்தின் ஆய்வு வெளியீடுகளின் நிகழ்நிலை சேகரிப்பாக உள்ளது. இந்த நூலக களஞ்சியமானது பாவனை மற்றும் ரஜரட்டைப் பல்கலைக்கழக ஆய்வு வெளிப்பாடுகளை அதிகரிப்பதற்கும் மற்றும் உசாத்துணைப் பயன்பாட்டு வீதத்தையும் பல்கலைக்கழகத்தின தரநிலையையும் அதிகரிப்பதற்கும் மிக இன்றியமையாததாக உள்ளது. தற்போது நூலகமானது 2250 க்கும் அதிகமான வெளியீடுகளினைக் (சுருக்க ஆய்வுகள் மற்றும் விரிவான ஆய்வுக் கட்டுரைகள்) கொண்டுள்ளது.

- **இன்ட்ராநெட் அணுகல் மூலமான தகவல் ஆதாரங்கள் - கடந்த கால ஆவணங்கள்**

பயனர்களுக்கான தகவல்களைப் பெற கடந்த கால ஆவணங்களுக்கு இன்ட்ராநெட் அணுகலை நூலகம் வழங்குகிறது. அவர்கள் தங்கள் தகவல் தேவைகளை பூர்த்தி செய்ய மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பயனர் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப கடந்த கால ஆவணங்களைத் தேடலாம்.

- **எஸ்.டி.ஐ / சி.ஏ.எஸ் சேவைகள் மற்றும் ஆராய்ச்சி ஆதரவு சேவை**

தகவல் சேவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பரவலைப் (எஸ்.டி.ஐ) பயன்படுத்தி பயனர்கள் தங்களது குறிப்பிட்ட தகவல் தேவைகளுக்கான தனிப்பயனாக்க தகவல்களைப் பெறலாம். தற்போதைய விழிப்புணர்வு சேவைகள் பயனர்களுக்கு புதிய தலைப்புகள் மற்றும் அவர்களின் குறிப்பிட்ட ஆராய்ச்சி தேவைகள் பற்றிய தகவல்களை மின்னஞ்சல் வழியாக, வாய்மொழியாக மற்றும் அறிவிப்புகள் மூலம் தெரிவிக்கும். பயனர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும், அவர்களின் ஆராய்ச்சி பணிகள் மற்றும் நடப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்களை மின்னஞ்சல்கள் மற்றும் பிற வழிகள் வழியாக வழங்கவும் நூலகம் பயனர்களை ஆதரிக்கிறது.

- **ஒலி, ஒளி வள சேவை மற்றும் வை.ஃபை அணுகல்**

பிரதான நூலகத்தின் மின் வள அலகு மின்னணு தரவுத்தளங்கள், இணையம் மற்றும் இறுவட்டு / டிவிடி சேகரிப்புக்கான அணுகலை வழங்குகிறது. இது குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையான கணினிகளைக் கொண்டுள்ளது மற்றும் பயனர்கள் பதிவிறக்கம் செய்து தகவல்களைப் பகிரக் கூடியதாகவும் உள்ளது. அவர்கள் முழு உரை அறிவார்ந்த கட்டுரைகளையும் இலவசமாக அணுகலாம். இது நூலகத்தில் உள்ள அனைத்து மின்னணு பொருட்களுக்கும் எளிதான அணுகலை வழங்குகிறது. நூலக கட்டிடத்தின் வை.ஃபை இணைப்பு பகுதியுடன் மையமாக உள்ளது, மேலும் இது மாணவர்களின் மடிக்கணினிகள், ஐ-பேட்கள், ஸ்மார்ட் போன்கள் மற்றும் எடுத்துச் செல்லக் கூடிய சாதனங்களை இணைத்து இலத்திரனியல் தகவல்களை அணுக அனுமதிக்கிறது.

- **நகலெடுக்கும் வசதிகள் (தனியார்)**

நூலகம் பயனர்களுக்கு நகலெடுக்கும் வசதிகளை வழங்குகிறது. ஆய்வறிக்கை மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் தவிர அனைத்து பொருட்களும் பயனர்களால் நகலெடுக்கப்படக் கூடியதாக உள்ளது. ஸ்கேனிங் மற்றும் புத்தக பிணைப்பும் அவர்களால் வழங்கப்படுகின்றன.

- **செய்தி கிளிப்பிங் சேவை**

தொடர்ச்சியான விடயங்களுக்கான நூலக கிளிப்பிங் தொகுப்பை நூலகம் பராமரிக்கிறது. அந்தக் கட்டுரைகளை ஸ்கேன் செய்வதன் மூலம் அவற்றை டிஜிட்டல் காப்பகமாக மாற்ற நூலகம்

திட்டமிட்டது. இது புதுப்பித்த தகவல்களை உள்ளடக்கியது மற்றும் பயனர்கள் அந்த சேவையின் மூலம் தகவல்களைப் பகிரவும், பதிவிறக்கவும் முடியும்.

B. அடைவுகள்

- **பயனர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

பத்து (10) அறிமுக நிகழ்ச்சிகள் மற்றும் பல நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்து பீடங்களினதும் அதாவது முகாமைத்துவ கற்கைகள் பீடம், விவசாய பீடம், மருத்துவ பீடம் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் என்பவற்றின் பாவனையாளர் சமூகத்துக்காக நடாத்தப்பட்டது.

- **சமூக வெளியக செயற்பாடுகள்**

நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான பிரிவில் நூலகர்கள், பொது நூலக உத்தியோகத்தர்கள், பாடசாலை நூலகங்கள், பிரிவேனா நூலகச்கள் போன்றோருக்கு குறித்த கால ஒழுங்கில் தொழிற்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. இந்த நூலகம் ஆனது மூன்று (03) தொடர் தொழிற்பட்டறைகளை கர்ப்பிணித் தாய்மார்கள், பொதுச் சேவை நூலகர்கள் மற்றும் வட மத்திய மாகாண விவசாயிகள் போன்றோருக்கு நடாத்தியது. இத் தொழிற்பட்டறைகள் “கற்றல் திறனை விருத்தி செய்வது எவ்வாறு”, “தொழில் நேர்முறை” மற்றும் “தகவல்களை வழங்குவது எப்படி” எனும் தலைப்புக்களிலேயே நடாத்தப்பட்டது. மேலும், நூலகம் வெளியக பயனர் சமூகத்திற்காக ஒரு புத்தக கண்காட்சியினை ஒழுங்குபடுத்தி இருந்தது.

.

- **உத்தியோகத்தர் பயிற்சிப்பட்டறை விபரங்கள்**

நூலக உதவியாளர்கள் பல்கலைக்கழக நூலகர்கள் சங்கம் (யு. எல். ஏ) ஏற்பாடு செய்த “நூலக வீட்டு பராமரிப்பு மற்றும் செயல்பாட்டு ஆதரவு” தொழிற் பட்டறையில் பங்கேற்றனர். தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவை சபையில் தரவு பகுப்பாய்வு குறித்த எஸ்.பி.எஸ்.எஸ் பற்றிய குறுகிய பாடநெறியில் இரண்டு சிரேஷ்ட உதவி நூலகர்கள் பங்கேற்றனர்.

மேலும், சிரேஷ்ட உதவி நூலகர்கள் களனி பல்கலைக்கழக நூலகத்தில் நடைபெற்ற/ பல்கலைக்கழக நூலகர்கள் சங்கம் (யு. எல். ஏ) ஏற்பாடு செய்த “ஆய்வு முறைகள் மற்றும் புள்ளிவிபரவியல்” எனும் இரு நாள் தொழிற்பட்டறை ஒன்றிலும் மற்றும் தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபையால் நடத்தப்பட்ட “இணைய வழி-அரசு, இணைய பாதுகாப்பு மற்றும் சமூக ஊடகங்கள்” எனும் தொழிற்பட்டறை ஒன்றிலும் பங்கேற்றனர்.

- **தொலைதூர கற்றல் சேவைகள்**

நூலகமானது பல்கலைக்கழக கற்றல் முகாமை முறைமை (Moodle) உடன் ஒன்றிணைக்கப்பட்டு உள்ளது. நூலகம் பயனர்களுக்கு இந்த கற்றல் முறைமை மூலமாக புலமை வாய்ந்த விடயங்கள், புத்தக அத்தியாயங்கள், கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் ஏனைய சுயவிபரத் தரவுகள் போன்றவற்றை வழங்குவதற்கு ஆரம்பித்து உள்ளது. பயனர்கள் நூலக வலைத்தளத்தில் உள்ள இணைய முகவரியை சொடுக்குவதன் மூலம் இந்த சேவையை அணுக முடியும்.

C. தோல்விகளும் நியாயங்களும்

1) பட்டதாரி மாணவர்கள் அவர்களது நூலக செயற்பாடுகளை தொடர்வதற்கு நூலகத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் போதுமானதாக இன்மை.
2) நூலக சேவைக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டவை போதாமை.
3) தற்போதைய கோவிட் - 19 நோய்த்தொற்று நிலை நூலக அன்றாட சேவைகளை நேரடியாக பாதித்து உள்ளது.

D. எதிர்காலத் திட்டங்கள்

- **நூலகங்களுக்கான ரேடியோ அதர்வெண் அடையாள தொழில்நுட்பம் / சீசீரீவி பாதுகாப்பு அமைப்பு**

இந்த பாதுகாப்பு அமைப்பின் பிரதான நோக்கம் ஆனது சேகரிப்புக்களை பாதுகாப்பாக பேணுதல் மற்றும் இலங்கை பல்கலைக்கழக நூலக முறைமைகளுக்குள் மிகுந்த பயனர் நட்பு மிக்கதும் வினைத்திறன் மிக்கதும் ஆன நூலகமாக மாறுவது ஆகும்.

- **பசுமை நூலக சூழல்**

நூலகம் ஆனது இலத்திரனியல் வள உள்ளடக்கங்களை பசுமைக் கல் திறந்த மூல மென்பொருள் சூழலாக மாற்றுவதற்கு திட்டம் இட்டுள்ளது. இது தகவல்களின் ஆவண காப்பகம் ஒன்றை உருவாக்குவதற்காக இலத்திரனியல் சேகரிப்புக்களை ஆரம்பிக்க திட்டம் இட்டுள்ளது.

- **எழுத்துத் திருட்டு பரிசோதித்தல்**

நூர்லகம் ஆனது ‘‘ரெனிற்றின்’’ எழுத்துத் திருட்டு பரிசோதித்தல் மென்பெருளை அறிமுகம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. இச் சேவையை கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டப்பின் கற்கை மாணவர்கள் ஆகியோருக்கு வழங்க திட்டம் இட்டுள்ளது.

- **தற்போதைய கோவிட் நோய்த்தொற்று நிலை காரணமாக இலத்திரனியல் வளங்களை கொள்முதல் செய்வதற்கு திட்டம் இடப்பட்டு உள்ளது.**
- **சமூக வலையமைப்புக்களுடன் இணைந்த சேவைகளை வழங்குவதற்கு திட்டம் இடப்பட்டு உள்ளது.**

24. உடற்கல்வித் துறைப் பிரிவு




A. அறிமுகம்

உடற்கல்வி துறையானது பல்வேறுபட்ட விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை பல்கலைக்கழக மாணவர் சமூகத்திற்கு வழங்கி வருகின்றது. இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் விளையாட்டு திறன்களை முன்னேற்றி மேம்படுத்துதல், அவர்களது குழு மற்றும் தனிப்பட்ட திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்குதல் மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கைப்பாணிக்கு வழக்கப்படுத்தல் என்பன உடற்கல்வி துறையின் பிரதான நோக்கமாகும்.

B. அடைவுகள்

துறையின் மேற்கூறிய இலக்குகளை அடைவதற்காக, துறையானது 2020 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகளையும் நிகழ்ச்சி திட்டங்களையும் ஒழுங்குபடுத்தி நடாத்தியுள்ளது.

விருது வழங்கும் நிகழ்வு - 2020

இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி. பி. ஏ, கருணாரத்ன அவர்கள் தலைமையில் 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான வெற்றியாளர்களுக்கு விருது வழங்குதல் வைபவம் 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் அன்று இடம்பெற்றது. இவ் வைபவத்தில் 104 சிறப்பு விருதுகள் மற்றும் 222 வெற்றி விருதுகள் வழங்கப்பட்டன.











பீடங்கள் ஒவ்வொன்றினதும் புதுமுக மாணவர்களுக்கு வெவ்வேறாக உடற்கல்வி நிகழ்ச்சிகள் குறித்த நாள் ஒன்று ஒதுக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டது மற்றும் அவ்வாறான நிகழ்வுகள் அனைத்து புதுமுக மாணவர்களுக்கும் உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்கள் பற்றிய சில கொள்கைசார் அறிவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. அத்துடன் இது பங்குபற்றுனர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் வெளியக செயற்பாடுகள் சிலவற்றை ஒழுங்கமைத்து உள்ளது

பீடங்களுக்கு இடையிலான புதுமுக மாணவர்களுக்கான விளையாட்டுச் சுற்றுப் போட்டிகள்

13 விளையாட்டுக்கள் உள்ளடங்கலாக 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் நடாத்தப்பட்டது. ஆறு பீடங்களினையும் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த சுற்றுப் போட்டிகளில் முதலாம் வருட மாணவர்கள் (2017/ 2018) பங்குபற்றியதுடன் முகாமைத்துவ கற்கைகள் பீடம் சுற்றுப் போட்டிக்கான வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.



பல்கலைக்கழகத்தின் ஒரு பாரிய விளையாட்டு நிகழ்வாக 2020 ஆம் ஆண்டிற்கான பீடங்களுக்கு இடையிலான விளையாட்டுச் சுற்றுப் போட்டிகள் 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இச் சுற்றுப் போட்டிகளை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு முடப்படடு இருந்தமையால் முடிக்க முடியாமல் போனது.



மாசி மாதத்தில் பல்கலைக்கழக ஆண்கள் எல்லே அணி விஜய கழகம், பெரியக்குளம இனால் ஒழுங்குபடுத்தப்பட்ட அழைப்பு எல்லே சுற்றுப் போட்டியில் விளையாடியதுடன் அச் சுற்றுப் போட்டியில் எங்களது அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

பல்கலைக்கழக விளையாட்டுக்களுக்கான சர்வதேச நாள் - 2020

சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டு நாள் உத்தியோக பூர்வமாக ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனத்தால் 2016 ஆம் ஆண்டில் இருந்து அங்கீகரிக்கப்பட்டது. இலங்கையில் முதலாவதாக இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம் மற்றும் களனிப் பல்கலைக்கழகம் என்பன ஒன்றிணைந்து சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டு நாளினை 2020 ஆண்டின் புரட்டாதி மாதம் 20 ஆம் திகதி அன்று கொண்டாடியது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் ஜனித்தா என் லியனகே மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் நிலந்தி டீ சில்வா ஆகியோர்களின் தலைமையின் கீழ் இந்த நிகழ்வு நடாத்தப்பட்டது. இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தின் 14 அங்கத்துவ பல்கலைக்கழகங்களிலும் இருந்து கிட்டத்தட்ட 300 பங்குபற்றுனர்கள் பங்குபற்றினர். இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தில் இருந்து 9 அங்கத்துவர்கள்





இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

C. தோல்விகளும் நியாயங்களும்

- பீடங்களின் விளையாட்டுச் சுற்றுப் போட்டிகளை கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காரணமாக பூரணமாக நடாத்த முடியவில்லை.
- பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான எந்த வித சுற்றுப் போட்டிகளையோ அல்லது ஏனைய விளையாட்டுச் செயற்பாடுகளையோ ஒழுங்குபடுத்தப்பட முடியவில்லை.
- 2020 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான, தேசிய மற்றும் சர்வதேச சுற்றுப் போட்டிகளில் ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்ற முடியவில்லை

D. எதிர்காலத் திட்டங்கள்

- 2021 ஆம் ஆண்டில், இரண்டு உள்ளக சுற்றுப் போட்டிகளை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது
- 2021 ஆம் ஆண்டில், ஜிம்னாசியத்தின் கட்டம் iii இனைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

25. தொழில் வழிகாட்டல் அலகு

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் அலகானது 2005 ஆம் ஆண்டில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (ப.மா.ஆ) முன்னெடுப்பினூடாக ஆரம்பிக்கப்பட்டது. இவ்வலகு நேரடியாக துணைவேந்தரின் கீழ் தொழிற்படுகின்றது. இது மிஹிந்தலையிலுள்ள பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் எல்லா பீடங்களும் இலகுவாக அணுகக் கூடிய விதத்தில் அமைந்துள்ளது. இது 100 பேர்களை உள்ளடக்கக் கூடிய ஒரு மாடிக் கட்டடமாகும். இவ்வலகானது பணிப்பாளர், தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் மற்றும் ஒவ்வொரு பீடத்தைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்களின் கீழ் இயங்கி வருகின்றது.

தூர நோக்கு:

தேசிய பல்கலைக்கழகங்களுக்கிடையில் ஒரு உயரிய தொழில் வழிகாட்டல் சேவை வழங்குனராக விளங்குதல்.

செயற்பணி:

வாழ்க்கை முழுவதுக்குமான தொழில் விருத்தியை சுய – விழிப்புணர்வு, தொழில் வெளிக்கொணர்வு, தொழில் தேர்வுகள், தொழில் திட்டமிடல் மற்றும் மென்திறன்கள் விருத்தி செய்தல் என்பவற்றினை வசதிப்படுத்தலின் ஊடாக தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பட்டதாரி மாணவர்களை ஊக்குவித்தல். தொழில் வழிகாட்டல் அலகு சங்கங்கள் மற்றும் வேலைவாய்ப்பை நோக்கிய ஆர்வத்துடனான உத்தியோகத்தர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் அதனை கட்டியெழுப்புகின்றது.

பணிப்பாளர்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I , கலாநிதி (செல்வி). எச். ஓ. விஜேவர்த்தன

தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள்

திருமதி. ஏ. மங்கலிக்கா திஸ்ஸாநாயக்க – AS 2 (II)
திரு. ஜே. டீ. ரத்னாயக்க – AS 2 (II)

தொழில் வழிகாட்டல் ஒருங்கிணைப்பாளர்கள்

கலாநிதி (செல்வி). எச். ஓ. விஜேவர்த்தன	– பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
கலாநிதி. புத்திக்க ஹெட்டியாராச்சி	– சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடம்
திரு. சம்பத் திஸ்ஸாசாயக்க	– விவசாய பீடம்
கலாநிதி. டபிள்யூ. எம். ரோகண வீரசூரிய	– முகாமைத்துவ கற்கைகள் பீடம்
கலாநிதி. எச். ஏ. நவீன்	– தொழில்நுட்ப பீடம்

முகாமைத்துவ உதவியாளர்

திருமதி. எம். ஜீ. சுந்தரி ஸ்ரீயாமாலா திஸ்ஸாநாயக்க – தரம் III

வேலை உதலியாளர்

திருமதி. டபிள்யூ. எம். கே. கயானி – தரம் III

B. அடைவுகள்

01. தொழில்நுட்ப பீட புதுமுக மாணவர்களுக்கான தலைமைத்துவ விருத்தி நிகழ்வு

இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு தொழில்நுட்ப பீடத்தின் புதுமுக மாணவர்களுக்கான இரு நாள் தலைமைத்துவ தொழில்பயிற்சி நிகழ்ச்சிகளை பங்குனி மாதம் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் மு.ப. 8.30 மணியில் இருந்து பி.ப 4.30 மணி வரை

பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தியது. இத் தொழில் பயிற்சி ஆனது தொழில் வழகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் ஆன திரு. ஜாலியா ரத்னாயக்க மற்றும் திருமதி. ஏ.எம். திஸ்ஸாநாயக்க அவர்களால் நடாத்தப்பட்டது.

02. விவசாய பீட மாணவர்களுக்கான தலைமைத்துவ விருத்தி நிகழ்வு

இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு விவசாய பீடத்தின் புதுமுக மாணவர்களுக்கான் தலைமைத்துவ தொழில்பயிற்சி நிகழ்ச்சியை 2020 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 03 ஆம் திகதி மு.ப. 8.30 மணியில் இருந்து பி.ப 4.30 மணி வரை பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தியது. இத் தொழில் பயிற்சி ஆனது தொழில் வழகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் ஆன திரு. ஜாலியா ரத்னாயக்க மற்றும் திருமதி. ஏ.எம். திஸ்ஸாநாயக்க அவர்களால் நடாத்தப்பட்டது.

03. தொழில் முயற்சியாண்மை நிகழ்வு "தொழிற்துறை நிபுணர்களுடன் நிகழ்நிலைக் கருத்தரங்கு தொடர்களை ஆரம்பித்தல்"

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு "தொழிற்துறை நிபுணர்களுடன் நிகழ்நிலைக் கருத்தரங்கு தொடர்களை ஆரம்பித்தல்" எனும் பயிற்சி நிகழ்வை பட்டதாரி மாணவர்களுக்கிடையே சார்ந்த அறிவை மேம்படுத்தும் பொருட்டு வெற்றிகரமாக நடாத்தியது. இந் நிகழ்வு 2020 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 03 ஆம் திகதி மு.ப. 08.00 மணியில் இருந்து மு.ப. 10.00 மணி வரை பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகுடன் இணைந்து இணைய வழியில் நடாத்தப்பட்டது. இலங்கையில் உள்ள கிறிஸ்டல் லைப் அன்ட் மைகோலா பிராண்ட் இன் ஸ்தாபகர் திரு. ஆர். எம். சர்மா அவர்கள் முதலாவது வளவாளர் ஆவார்.

04. "கனிமடல" எனும் தலைப்பில் தொழிற்பட்டறை

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத்துக்காக "கனிமடல" எனும் தொழிற்பட்டறை நிகழ்வை தை மாதம் 25 ஆம் திகதி பி.ப. 02.00 மணியில் இருந்து பி.ப. 05.30 மணி வரை வெற்றிகரமாக நடாத்தியது மற்றும் இந் நிகழ்வு ஆனது தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகரான திருமதி. ஏ. எம். திஸ்ஸாநாயக்க அவர்களினால் நடாத்தப்பட்டது.

05. "அவுஸ்திரேலியாவில் உயர் கல்வி" எனும் தலைப்பில் தொழிற்பட்டறை

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு "அவுஸ்திரேலியாவில் உயர் கல்வி" எனும் தொழிற்பட்டறை நிகழ்வை வெற்றிகரமாக நடாத்தியது. இந் நிகழ்வு பி.ப. 01.00 மணியில் இருந்து பி. ப. 04.00 மணிவரை தொழில் வழிகாட்டல் அலகின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது மற்றும் இந் நிகழ்வு ஸ்பெக்ரம் வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது.

06. " பட்டதாரி மாணவர்களுக்கான வாழ்க்கைத் திறன்கள்" எனும் தலைப்பில் நிகழ்ச்சி

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு "பட்டதாரி மாணவர்களுக்கான வாழ்க்கைத் திறன்கள் விருத்தி நிகழ்வு" எனும் பயிற்சி நிகழ்வை 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 02 ஆம் திகதி மு.ப. 09.15 மணியில் இருந்து பி. ப. 12.30 மணிவரை புதிய சோமாதேவி மாணவர் விடுதி வளாகத்தில் வெற்றிகரமாக நடாத்தியது. இந் நிகழ்வு திருமதி. ஏ.எம். திஸ்ஸாநாயக்க அவர்களினால் நடாத்தப்பட்டது.

07. "மென் திறன்கள் விருத்தி நிகழ்வு" எனும் பயிற்சி நிகழ்வு

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு "மென் திறன்கள் விருத்தி நிகழ்வு" எனும் பயிற்சி நிகழ்வை 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 21 ஆம் திகதி மு.ப. 08.30 மணியில் இருந்து பி. ப. 12.30 மணிவரை தொ. வ. அ இன் கேட்போர் கூடத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந் நிகழ்வு ஆனது கொழும்பில் உள்ள ஐ.ஈ.எஸ்.ஈ.சீ. கழகத்தின் அங்கத்தவர்களினால் நடாத்தப்பட்டது.

08. "கற்றல் திறன்கள்" எனும் தலைப்பில் நிகழ்வு

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு "கற்றல் திறன்கள்" எனும் பயிற்சி நிகழ்வை விவசாய பீடத்தின் பட்டதாரி மாணவர்களுக்காக 2020 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 05 ஆம் திகதி பி.ப. 04.30 மணிக்கு பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் வெற்றிகரமாக நடாத்தியது. இந்த நிகழ்வு ஆனது தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகரான திரு. ஜாலியா ரத்நாயக்க அவர்களினால் நடாத்தப்பட்டது.

01. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளின் விபரம் (2020 ஆம் ஆண்டின் தை மாதம் 1 ஆம் திகதியில் இருந்து மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை)

பீடம் / இலக்குக்குரிய குழு	நிகழ்ச்சியின் பெயர்	தினங்கள்	பங்குபற்றியோர் எண்ணிக்கை	குறிப்புக்கள்
01/01/2020 இலிருந்து 31/01/2020 வரை				
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்	தொழில் வாய்ப்புக்கள் கருத்தரங்குகளை நிகழ்நிலை முறையில் மாற்றுதல்" எனும் தொழிற் பட்டறை	03/01/2020	208	பீடத்தின் கேட்போர் கூடத்தில் மு. ப. 09.00 மணியில் இருந்து பி.ப. 04.00 மணி வரை இந்த நிகழ்வு நடைபெற்றது மற்றும் இந்த நிகழ்வு லெயிங் ஓ'ரவுர்கே இனால் நடாத்தப்பட்டது.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	"உங்கள் பட்டத்திற்கு அப்பால்" எனும் தொழிற் பட்டறை	08/01/2020	133	பீடத்தின் கேட்போர் கூடத்தில் மு. ப. 09.00 மணியில் இருந்து பி.ப. 04.00 மணி வரை இந்த நிகழ்வு நடைபெற்றது மற்றும் இந்த நிகழ்வு ஆனது திரு. சுமித் டீ சில்வா, முகாமையாளர்/ சந்தைப்படுத்தல், இலங்கை விமான சேவையினால் நடாத்தப்பட்டது.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	சுய விபரக் கோவை, மற்றும் நேர்முகத் தேர்வு எதிர்கொள்ளல் தொடர்பான தொழிற் பட்டறை	21/01/2020	42	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் மு. ப. 08.30 மணியில் இருந்து பி. ப. 11.30 மணி வரை இந்த நிகழ்வு நடைபெற்றது மற்றும் இந்த நிகழ்வு ஆனது தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகரான திரு. ஜாலியா ரத்நாயக்க

				அவர்களினால் நடாத்தப்பட்டது.
காவல் அலுவலர்களின் நலன்புரி	"கனிம தலா" எனும் தொழிற் பட்டறை	25/01/2020	33	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் பி. ப. 02.00 மணியில் இருந்து பி. ப. 05.30 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது மற்றும் இந் நிகழ்வு ஆனது தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகரான செல்வி ஏ. எம். திஸ்ஸாநாயக்க அவர்களினால் நடாத்தப்பட்டது.
அனைத்துப் பீடங்கள்	"அவுஸ்திரேலியாவில் உயர் கல்வி" எனும் தொழிற் பட்டறை	28/01/2020	81	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் பி. ப. 01.00 மணியில் இருந்து பி. ப. 04.00 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது மற்றும் இந் நிகழ்வு ஆனது ஸ்பெக்ரம் வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது.
01/02/2020 இலிருந்து 28/02/2020 வரை				
அனைத்துப் பீடங்கள்	"பொதுப் பேச்சு கழகம்" எனும் பயிற்சி நிகழ்வு	10/02/2020	29	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் பி. ப. 04.30 மணியில் இருந்து பி. ப. 06.30 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது.
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்	"நடை உடை பாவனை மற்றும் உணவெடுக்கும் முறைகள்" பயிற்சி நெறி நிகழ்வு	12/02/2020	35	அநுராதபுரத்தில் உள்ள அவஸ்தெ ஹோட்டலில் மு. ப. 08.30 மணியில் இருந்து பி. ப. 05.00 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது.
புதிய சோமாதேவி மாணவர் விடுதி	"பட்டதாரி மாணவர்களுக்கான வாழ்க்கைத் திறன்கள்" எனும் நிகழ்வு	13/02/2020	105	புதிய சோமாதேவி மாணவர் விடுதி வளாகத்தில் மு. ப. 09.15 மணியில் இருந்து பி. ப. 12.30 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது.

	வெளியக தொழிற் பயிற்சி நெறிக்கான 1 ஆவது தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்றுகூடல்	18/02/2020	05	தொ. வ. அ. இல் சிறிய கேட்போர் கூடத்தில் பி.ப. 12.00 மணியில் இருந்து பி.ப. 01.00 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.
அனைத்துப் பீடங்கள்	"பொதுப் பேச்சு கழகம்" எனும் பயிற்சி நிகழ்வு	18/02/2020	51	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் பி.ப. 04.30 மணியில் இருந்து பி.ப. 07.10 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	"வேலை வாழ்க்கை சமநிலை" எனும் தலைப்பில் நிகழ்ச்சி	19/02/2020		இந்நிகழ்ச்சி ஆனது பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் மு.ப. 08.30 மணியில் இருந்து மு. ப 10.30 மணி வரை நடைபெற்றது.
அனைத்துப் பீடங்கள்	"மென் திறன்கள் விருத்தி நிகழ்ச்சி" எனும் நிகழ்வு	21/02/2020	30	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் மு. ப. 08.30 மணியில் இருந்து பி.ப. 12.30 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது. மற்றும் இந்நிகழ்வு ஆனது இலங்கை, ஐ. ஈ. எஸ். ஈ. சீ. இனால் நடாத்தப்பட்டது.
	வெளியக தொழிற் பயிற்சி நெறிக்கான 2 ஆவது தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்றுகூடல்	25/02/2020	05	தொ. வ. அ. இல் பி. ப. 01.30 மணியில் இருந்து பி.ப. 02.30 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்	" தொழில் வழிகாட்டல் முன்னோடி செயற்திட்டம்" எனும் பயிற்சி நிகழ்வு	25/02/2020	முதலாம் வருட மாணவர்கள்	பீடத்தின் கேட்போர் கூடத்தில் மு. ப. 08.00 மணியில் இருந்து மு. ப. 10.00 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.
அனைத்துப் பீடங்கள்	"தலைமைத்துவத்தில் தேசிய இளைஞர்கள் கலந்துரையாடல்கள்" எனும் நிகழ்வு	26/02/2020	06	இந்நிகழ்வு ஐ. நா. அ. தி இனால் கொழும்பில் உள்ள ப. ஞா. ச. மா. ம இல் தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் மு. ப. 08.00 மணியில் இருந்து பி. ப. 05.30 மணி வரை நடைபெற்றது.

அனைத்துப் பீடங்கள்	"பொதுப் பேச்சு கழகம்" எனும் பயிற்சி நிகழ்வு	27/02/2020	60	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடத்தில் பி.ப. 04.30 மணியில் இருந்து பி.ப. 07.30 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.
புதிய பண்டுல விடுதி	"பட்டதாரி மாணவர்களுக்கான வாழ்க்கைத் திறன்கள்" எனும் நிகழ்வு	27/02/20202	86	புதிய பண்டுல மாணவர் விடுதி வளாகத்தில் மு.ப. 09.15 மணியில் இருந்து பி.ப. 12.30 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.
விவசாய பீடம்	"பேச்சு வல்லுனர்கள்" எனும் நிகழ்வு	27/02/2020		மாணவர்களின் பங்குபற்றல் குறைவாக இருந்தமையால் இந்நிகழ்வு நிறுத்தப்பட்டது.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	"மென் திறன்கள் விருத்தி நிகழ்ச்சி" எனும் நிகழ்வு	28/02/2020	39	தொ. வ. அ. இன் சிறிய கேட்போர் கூடம் மற்றும் பல்கலைக்கழக வளாகம் என்பவற்றில் மு.ப. 08.30 மணியில் இருந்து பி.ப. 04.30 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	"வேலை வாழ்க்கை சமநிலை" எனும் தலைப்பில் நிகழ்ச்சி	28/02/2020		இந்நிகழ்ச்சி ஆனது பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் மு.ப. 10.30 மணியில் இருந்து பி.ப 12.30 மணி வரை நடைபெற்றது.
01/03/2020 இலிருந்து 16/03/2020 வரை				
தொழில்நுட்ப பீடம்	தலைமைத்துவ விருத்தி நிகழ்ச்சி	12, 13/03/2020	120	இந்நிகழ்ச்சி ஆனது பல்கலைக்கழக வளாகத்தில் மு. ப. 08.30 மணியில் இருந்து பி.ப 04.30 மணி வரை நடைபெற்றது. வளவாளர்களாக தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்களான திரு. ஜாலியா ரத்நாயக்க மற்றும் திருமதி ஏ.எம். திஸ்ஸாநாயக்க ஆகியோர் கலந்து

				கொண்டனர்.
14/03/2020 இல் இருந்து 17/07/2020 வரை பல்கலைக்கழகம் கோவிட் - 19 காரணமாக மாணவர்களுக்கு மூடப்பட்டு இருந்நது. தொலைபேசி மூலமாக ஆலோசனைகள் மற்றும் ZOOM இனூடாக தொழில் வழிகாட்டல் ஆலோசனை அமர்வுகள் நடாத்தப்பட்டது.				
01/07/2020 இலிருந்து 31/07/2020 வரை				
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு அமர்வு	08/07/2020	புதுமுக மாணவர்கள் 1 ஆம் குழு	இந் நிகழ்வு பி. ப. 02.00 மணியில் இருந்து பி. ப. 04.00 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது. தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் திரு. ஜாலிய ரத்நாயக்கே மற்றும் திருமதி. ஏ. எம். திஸ்ஸாநாயக்க ஆகியோரினால் இந் நிகழ்வு நடாத்தப்பட்டது.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு அமர்வு	09/07/2020	புதுமுக மாணவர்கள் 2 ஆம் குழு	இந் நிகழ்வு பி. ப. 01.30 மணியில் இருந்து பி. ப. 03.30 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது. தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் திரு. ஜாலிய ரத்நாயக்கே மற்றும் திருமதி. ஏ. எம். திஸ்ஸாநாயக்க ஆகியோரினால் இந் நிகழ்வு நடாத்தப்பட்டது.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	தொழில்நுட்பங்களை கற்றல் எனும் நிகழ்ச்சி	09/07/2020	புதுமுக மாணவர்கள் 1 ஆம் குழு	இந் நிகழ்வு பி. ப. 01.00 மணியில் இருந்து பி. ப. 03.00 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது. தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திரு. ஜாலிய ரத்நாயக்கே அவர்கள் இந்

				நிகழ்வை நடத்தினார்.
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	தொழில்நுட்பங்களை கற்றல் எனும் நிகழ்ச்சி	10/07/2020	புதுமுக மாணவர்கள் 2 ஆம் குழு	இந் நிகழ்வு பி. ப. 01.30 மணியில் இருந்து பி. ப. 03.30 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது. தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திரு. ஜாலிய ரத்நாயக்கே அவர்கள் இந் நிகழ்வை நடத்தினார்.
01/08/2020 இலிருந்து 31/08/2020 வரை				
விவசாய பீடம்	தொழில் விருத்தி நிகழ்ச்சி	25/08/2020	119	இந்நிகழ்ச்சி ஆனது பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் பி.ப. 02.30 மணியில் இருந்து பி.ப 04.30 மணி வரை நடைபெற்றது.
	தொழில் வழிகாட்டல் பீட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்	25/08/2020	6	இக் கூட்டம் பி.ப. 02.30 மணியில் இருந்து பி.ப 03.30 மணிவரை ZOOM செயலி ஊடாக நடாத்தப்பட்டது.
விவசாய பீடம்	தொழில் விருத்தி நிகழ்ச்சி	28/08/2020	112	பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் பி.ப. 08.30 மணியில் இருந்து பி. ப. 12.30 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது.
01/09/2020 இலிருந்து 30/09/2020 வரை				
சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்	தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு நிகழ்வு	02/09/2020		இந் நிகழ்வு பி. ப. 01.00 மணியில் இருந்து பி. ப. 03.30 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது. இந் நிகழ்வின் வளவாளர்களாக தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் ஜே. டீ. ரத்நாயக்கே மற்றும் ஏ. எம் திஸ்ஸாநாயக்க

				அவர்கள் கலந்து கொண்டனர்.
	பியொன்ட் எம் கம்பனி உடன் ZOOM செயலியின் ஊடாக ஒன்றுகூடல்	08/09/2020	6	தொ.வ.அ இன் பணிப்பாளர் மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் பியொன்ட் எம் கம்பனியின் தொழிலாளர்களுடன் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கான சுயவிபரக் கோவை தயாரிப்பதற்கான தொழில்நுட்ப தளம் தொடர்பாக கலந்துரையாடல் நடைபெற்றது.
	கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான தனிநபர் விருத்தி தொழிற்பட்டறை	16/09/2020	2	சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் ஒரு தனிநபர் விருத்தி தொழிற்பட்டறையை ஒழுங்குபடுத்தியது மற்றும் இவ் அலகின் இரு தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வு பேராசிரியர். அருண எஸ். கமகே அவர்களினால் மு.ப. 09.00 மணியில் இருந்து பி.ப 04.00 மணி வரை நடைபெற்றது.
	“பால் சமத்துவம்” எனும் தொனிப் பொருளில் ஒன்றுகூடல்	28/09/2020	2	ஒன்றுகூடல் பி. ப. 02.00 மணியில் இருந்து பி. ப. 04.30 மணி வரை பிரயோக விஞ்ஞான பீடத்தில் நடாத்தப்பட்டது. இரு தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்
விவசாய பீடம்	புதுமுக மாணவர்களுக்கான வெளியக தொழிற் பயிற்சி	30/09/2020	6	ஒன்றுகூடல் பி ப. 02.30 மணியில் இருந்து பி. ப. 03.30 மணி வரை ZOOM

				செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது.
08/10/2020 இலிருந்து 31/12/2020 வரை பல்கலைக்கழகம் கோவிட் - 19 காரணமாக மாணவர்களுக்கு மூடப்பட்டு இருந்நது. தொலைபேசி மூலமாக ஆலோசனைகள் மற்றும் ZOOM இனூடாக தொழில் வழிகாட்டல் ஆலோசனை அமர்வுகள் நடாத்தப்பட்டது.				
01/10/2020 இலிருந்து 31/10/2020 வரை				
அனைத்துப் பீடங்களுடனும்	தொழிற்துறை நிபுணர்களுடன் நிகழ்நிலைக் கருத்தரங்கு தொடர்களை ஆரம்பித்தல்	03/10/2020	59	இந் நிகழ்வு மு.ப. 08.00 மணியில் இருந்து மு.ப. 10.00 மணி வரை பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகுடன் இணைந்து இணைய வழியில் நடாத்தப்பட்டது. இலங்கையில் உள்ள கிறிஸ்டல் லைப் அன்ட் மைகோலா பிராண்ட் இன் ஸ்தாபகர் திரு. ஆர். எம். சர்மா அவர்கள் வளவாளர் ஆவார்.
விவசாய பீடம்	"கற்றல் திறன்கள்" எனும் தலைப்பில் நிகழ்ச்சி	05/10/2020	120	பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் பி.ப. 02.00 மணியில் இருந்து பி.ப. 04.30 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது.
விவசாய பீடம்	"பட்டதாரி மாணவர்களுக்கான கற்றல் திறன்கள்" எனும் தலைப்பில் நிகழ்ச்சி	07/10/2020	120	பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் பி.ப. 02.00 மணியில் இருந்து பி.ப. 04.30 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது.
01/11/2020 இலிருந்து 30/11/2020 வரை				
	சீ. ஈ. ஈ. ஐ. டீ. உடனான ஒன்றுகூடல்	11/11/2020	4	சீ. ஈ. ஈ. ஐ. டீ. உடனான நிகழ் நிலை தொழிற் சந்தை தொடர்பாக ஒன்றுகூடல் மு ப. 09.00 மணியில் இருந்து மு. ப. 10.00 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது.
தொழில்நுட்ப பீடம்	"தற்கொலை தடுப்பு" எனும் தலைப்பில் கலந்துரையாடல்	17/11/2020	4	ஒன்றுகூடல் பி. ப. 06.00 மணியில் இருந்து பி. ப. 07.00 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது.

				திருமதி. ஏ. எம். திஸ்ஸாநாயக்க அவர்கள் தற்கொலையை தடுப்பதற்கான புதிய மென்பொருளை உருவாக்குவதற்கு அறிவுரை வழங்கினார்.
அனைத்துப் பீடங்களுடனும்	தொழில் வழிகாட்டல் ஒருங்கிணைப்பாளர்களுடனான கூட்டம்	19/11/2020	7	ஒன்றுகூடல் மு ப. 09.00 மணியில் இருந்து மு. ப. 10.30 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது.
01/12/2020 இலிருந்து 31/12/2020 வரை				
பிரயோக விஞ்ஞான பீடம்	"புதிய சுமுகமான நிலையை ஏற்றுக் கொள்ளல் மற்றும் உறுதியாக இருத்தல்" எனும் நிகழ்வு	17/12/2020	36	ஒன்றுகூடல் பி. ப. 02.00 மணியில் இருந்து பி. ப. 04.00 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது. இந் நிகழ்வின் வளவாளராக தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திரு. ஜே. டீ. ரத்நாயக்கே அவர்கள் நடத்தினார்.
பிரயோக விஞ்ஞான பீடம்	தொழில் வழிகாட்டல் முன்னோடி செயற்திட்ட அறிமுகம்	18/12/2020	60	ஒன்றுகூடல் பி. ப. 02.00 மணியில் இருந்து பி. ப. 04.00 மணி வரை ZOOM செயலியின் ஊடாக நடாத்தப்பட்டது. திரு. ஜே. டீ. ரத்நாயக்கே அவர்கள் இந் நிகழ்வை நடத்தினார்.

02. தனிநபர்/ தொழில் வழிகாட்டல் ஆலோசனை அமர்வுகள் மற்றும் ஆலோசனை அமர்வுகள் தொடர்பான விபரங்கள்

	மாணவர்கள்	தொலைபேசி ஊடாக மாணவர்கள்	ஏனையவர்கள்	மொத்தம்
தை	35	09	05	49
மாசி	39	01	23	63
பங்குனி	07	16	-	23
சித்திரை	10	-	10	20
வைகாசி	14	-	06	20
ஆனி	02	07	04	13

ஆடி	13	-	01	14
ஆவணி	01	05	03	09
புரட்டாதி	22	05	05	32
ஐப்பசி	12	15	02	29
கார்த்திகை	-	36	04	40
மார்கழி	01	26	08	35
மொத்தம்				**347**

C. தொழில் வழிகாட்டல் எதிர்காலத் திட்டங்கள் - 2021

தொடர் இல	நிகழ்வின் பெயர்	நிகழ்வு விபரம்	தினங்கள்
01	விடுதி நிகழ்ச்சி பட்டதாரி - "மாணவர்களுக்கானவாழ்க்கை திநன்"	மென்திறன் மற்றும் ஆளுமை விருத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான – 20 நிகழ்வுகள்	வருடம் முழுவதும்
02	நாடக மருத்துவ தொழிற் பட்டறைகள்	முன்வைக்கும் திறன் விருத்தி மற்றும் மன அழுத்தத்தில் இருந்து விடுபடல் - 05	புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை 2021
03	எப்.ஓ.ஏ.பீ.பீ இல் தொ. வ. முன்னோடி செயற்திட்டங்கள்	தொழில் வழிகாட்டல் நிகழ்வுகளை நடாத்துதல்	வருடம் முழுவதும்
04	தனியான தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்	தொழில் வழிகாட்டல் தீர்வுகளை மாற்றி அமைத்து வழங்குதல்	வருடம் முழுவதும்
05	மென்திறன்கள் விருத்தி தொழிற்பயிற்சி – பிரயோக விஞ்ஞான பீடம்	மென்திறன் விருத்தி	பங்குனி, 2021
06	மென்திறன்கள் விருத்தி தொழிற்பயிற்சி – விவசாய பீடம்	மென்திறன் விருத்தி	பங்குனி, 2021
07	மென்திறன்கள் விருத்தி தொழிற்பயிற்சி – தொழில்நுட்ப பீடம்	மென்திறன் விருத்தி	வைகாசி, 2021
08	மென்திறன்கள் விருத்தி தொழிற்பயிற்சி – சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்	மென்திறன் விருத்தி	ஆனி, 2021
09	மென்திறன்கள் விருத்தி தொழிற்பயிற்சி – முகாமைத்துவ கற்கைகள் பீடம்	மென்திறன் விருத்தி	புரட்டாதி, 2021
10	தொழிற்துறை நிபுணர்களுடனான ஒன்றுகூடல்	தொழில்துறைக்கு வெளிப்படுத்தல்	வருடம் முழுவதும்
11	சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	தை, 2021
12	முகாமைத்துவ கற்கைகள் பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	பங்குனி, 2021

	கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்		
13	பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	வைகாசி, 2021
14	விவசாய பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	கார்த்திகை, 2021
15	தொழில்நுட்ப பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	ஆவணி, 2021
16	விவசாய பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	ஆனி, 2021
17	தொழில்நுட்ப பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	பங்குனி, 2021
18	பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	வைகாசி, 2021
19	முகாமைத்துவ கற்கைகள் பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	வைகாசி, 2021
20	சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	வைகாசி, 2021
21	விவசாய பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	ஆளுமை விருத்தி	ஆவணி, 2021
22	தொழில்நுட்ப பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	ஆளுமை விருத்தி	ஆவணி, 2021
23	பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	ஆளுமை விருத்தி	புரட்டாதி, 2021
24	முகாமைத்துவ கற்கைகள் பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	ஆளுமை விருத்தி	ஐப்பசி, 2021
25	சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	ஆளுமை விருத்தி	ஐப்பசி, 2021
26	தொழில் முயற்சியாண்மை விருத்தி செய்தல் நிகழ்வுகள்	தொழில் முயற்சித் திறன்களை விருத்தி செய்தல்– 02 நிகழ்வுகள்	புரட்டாதி, கார்த்திகை 2021
27	புகைப்படம் பிடித்தல் தொழிற் பட்டறை	புகைப்படம் பிடிக்கும் திறன்களை மேம்படுத்தல்– 02 நிகழ்வுகள்	ஆவணி, புரட்டாதி 2021
28	தொ.வ.அ. தொழில் வலைத்தள விருத்தி மற்றும் தொழிற்பாடு	தொழில் வழிகாட்டல் தொடர்பான தகவல் பரிமாற்றம்	வருடம் முழுவதும்
29	காவேல் கழகம்	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	வருடம் முழுவதும்

26. தொலை மற்றும் தொடர் கல்விக்கான நிலையம்


A. அறிமுகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியன குறிப்பிட்ட வழிகாட்டிகளை திறமையுள்ள, அறிவுள்ள மற்றும் தொழில்புரியக் கூடிய பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் மற்றும் சான்றிதழ் கற்கையாளர்கள் ஆகியோரை உருவாக்கும் நோக்கத்துடன் வெளிவாரிக் கற்கை நெறிகளின் ஊடாக பரந்த அளவில் மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்புக்களை அளிக்க தயாரித்து உள்ளது. தனியான நிர்வாக கட்டமைப்பு ஒன்றை ஸ்தாபித்து வெளிவாரி கற்கை நெறிகளின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் கையாளுவதற்கு பல்கலைக்கழகங்கள் வேண்டப்பட்டன. இதனால் கற்கைத் துறைப் பிரிவுகள் மற்றும் பீடங்களினால் கையாளப்படுவதில் உள்ள வேலைச் சுமை குறைக்கப்பட்டது. வெவ்வேறு பீடங்கள் பல எண்ணிக்கையான வெளிவாரி பட்ட கற்கை நெறிகள் மற்றும் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறி மட்டங்களில் விரிவாக்கல் கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது.

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக தொலை மற்றும் தொடர் கல்வி நிலையம் (தொ.தொ.க.நி) ஆனது வெளிவாரி கற்கை நெறிகளுக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக தாபிக்கப்பட்ட சுயாதீன நிர்வாக அமைப்பாகும். தொ.தொ.க.நி பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்துடன் ப.மா.ஆ இன் 932 ஆம் இலக்க சுற்று நிரூபத்துக்கு இணங்க (155 ஆவது பேரவைக் கூட்டம்) 24 ஆம் திகதி ஐப்பசி 2011 அன்று தாபிக்கப்பட்டது. தொ.தொ.க.நி ஆனது அன்று முதல் 31ஆம் திகதி பங்குனி 2014 வரை பிரயோக விஞ்ஞான பீடத்தில் தொழிற்பட்டு வந்தது. 01ஆம் திகதி சித்திரை 2014 இலிருந்து தொ.தொ.க.நி ஆனது பிரதான நிர்வாக கட்டட வளாகத்திற்கு மாற்றப்பட்டது.

ப.மா.ஆ இன் வழிகாட்டல்களுக்கு அமைவான தொ.தொ.க.நி இன் நிர்வாக கட்டமைப்பு ஆனது கீழே தரப்பட்டுள்ளது.

தொ.தொ.க.நி இன் நிர்வாக கட்டமைப்பு



*எதிர்வரும் காலத்தில் இந்த பதவிகள் தொ.தொ.க.நி இன் மேலான விரிவாக்கத்தின் போது நிரப்பப்படும்.

2. தொ.தொ.க.நி இன் முகாமைத்துவக் குழு

2020 ஆம் ஆண்டில் மூன்று முகாமைத்துவக் குழு கூட்டங்கள் பின்வரும் திகதிகளில் நடைபெற்றன.

1. 31 ஆம் முகாமைத்துவக் குழு கூட்டம் - 2019 ஆம் ஆண்டு ஆனி 03 ஆம் திகதி
2. 32 ஆம் முகாமைத்துவக் குழு கூட்டம் - 2020 ஆம் ஆண்டு ஆவணி 25 ஆம் திகதி

3. தற்போது உள்ள கற்கை நெறிகள்

தொ இல	கற்கை நெறி	2020 இல் உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	2020 இல் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை
01	விஞ்ஞான இளமாணி (உயிரியல் விஞ்ஞானம்) வெளிவாரிப் பட்ட கற்கை நெறி	20	05
02	விஞ்ஞான இளமாணி (பௌதிக விஞ்ஞானம்) வெளிவாரிப் பட்ட கற்கை நெறி	10	-
03	வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்ட கற்கை நெறி	-	176
04	ஆங்கில மொழி டிப்ளோமா (விரிவாக்கல்) கற்கை நெறி	402	353
05	உயர்மட்ட ஆங்கில மொழி சான்றிதழ் கற்கை நெறி	201	218
06	தமிழ் மொழி டிப்ளோமா கற்கை நெறி	-	-
07	தமிழ் மொழி சான்றிதழ் கற்கை நெறி	-	-
08	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா கற்கை நெறி	110	-
09	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி	77	-
10	சூழல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா கற்கை நெறி	25	-

4. அடைவுகள்

- **தொ.தொ.க.நி இற்கான புதிய கட்டடத் தொகுதி**
  தொ.தொ.க.நி இற்கான புதிய கட்டடத் தொகுதி ஆனது அநுராதபுர நகரில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

- **பொலன்னறுவையில் கற்கை நிலையத்துக்கான நிலத் தொகுதி**
  பொலன்னறுவையில் கற்கை நிலையத்தை அமைப்பதற்காக ரஜரட்ட பல்கலைக்கழகத்துக்கு பொலன்னறுவையில் உள்ள புதிய நிலப் பகுதி கையளிக்கப்பட்டது.

- **தொ.தொ.க.நி இற்கான வலைத்தளம்**
  தொ.தொ.க.நி இற்கான வலைத்தளமானது உருவாக்கப்பட்டு வருகின்றதுடன் 2021 ஆம் ஆண்டின் முறபகுதியில் ஆரம்பித்து வைப்பதற்கு திட்டம் இடப்பட்டு உள்ளது.

- **வெளிவாரிக் கற்கை நெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட்டமை**
  வெளிவாரிக் கற்கை நெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகளை கோவிட் 19 நோய்த்தொற்று நிலையில் கூட கால தாமதம் இன்றி வெளியிட்டு உள்ளது.

- **வெளிவாரிக் கற்கை நெறிகளை நடாத்துதல்**
  கோவிட் 19 நோய்த்தொற்று நிலையில் பெரும்பாலான வெளிவாரிக் கற்கை நெறிகள் இணைய வழிமூலமாக நடாத்தப்பட்டது.

5. 2020 இல் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

- கோவிட் 19 நோய்த்தொற்று நிலை காரணமாக வெளிவாரிக் கற்கை நெறிகளை நடாத்துவதில் மெதுவான போக்கு காணப்பட்டது.
- தொ.தொ.க.நி இன் திறனான தொழிற்பாட்டுக்கு தேவையான பௌதிக மற்றும் மனித வளங்கள் போதாமை. ப.மா.ஆ வின் 932 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட பதவிகளின் அடிப்படையில் நிர்வாக, நிதி, செயலக மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை கொண்டிராமை.
- சுயமாக வினைத்திறனான மற்றும் உற்பத்தி வாய்ந்த ஒரு நிலையமாக செயற்படுவதில் உள்ள தடைகள்.
- பிற கற்கை நிலையங்களினால் ஏற்படுத்தப்படும் சவால்கள்.
- தொ.தொ.க.நி, கற்கை சபை மற்றும் கற்கை நெறிக்கான ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கு இடையில் உன்னத ஒருங்கிணைப்பு இன்மையால் ஏற்படும் சவால்கள்.

6. எதிர்காலத் திட்டங்கள்

- தொ.தொ.க.நி இற்கான புதிய கட்டணம் செலுத்தும் இலத்திரனியல் முறைமையை அறிமுகப்படுத்தல்
- ப.மா.ஆ இன் தர உத்தரவாத அலகின் கீழான வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கான கற்கை நெறி மீளாய்வை மேற்கொள்ளல்
- கற்கை நெறிகளுக்கு வசதிப்படுத்தும் வகையில் நன்றாக தொழிற்படும் பூரண நிர்வாக அலகாக தொ.தொ.க.நி இனை விரிவுபடுத்தல்.
- வெளிவாரிக் கற்கை நெறிகளின் பாடவிதானங்களை மீளாய்வு செய்தல்
- விரிவுரை மண்டபங்கள் மற்றும் வெளியக கற்கை நிலையங்கள் என்பவற்றின் வசதிகளை மேம்படுத்தல்.
- தொ.தொ.க.நி இற்கான தரவுத்தள முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல்
- தொ.தொ.க.நி, கற்கை சபை மற்றும் கற்கை நெறிக்கான ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருக்கு இடையில் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தல்.
- தொ.தொ.க.நி இனால் ஈட்டப்பட்ட பணத்தை வினைத்திறனன மற்றும் உற்பத்தி வாய்ந்த முறையில் பயன்படுத்தல்.
- தொ.தொ.க.நி இன் மாணவர் கையேட்டினை மேம்படுத்தல்.
- தொ.தொ.க.நி அலுவலர்களுக்கான (நிர்வாக & முகாமைத்துவ உதவியாளர்) பயிற்சிப் பட்டறை நிகழ்வை நடாத்துதல்.

27. அலுவலர் அபிவிருத்தி நிலையம்

A. அறிமுகம்

அலுவர் அபிவிருத்தி நிலையம் (அ.அ.நி) ஆனது 2015 ஆம் ஆண்டில் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டது. நிலையத்தின் தூரநோக்கு "தொழில்சார் அபிவிருத்தியின் உன்னத மையமாக இருத்தல்" ஆகும். அ.அ.நி இன் பணிக்கூற்று தொடர்ச்சியாக தேவைக்கு ஏற்றதான கற்றல் மற்றும் தொழில் அபிவிருத்திக்கான வாய்ப்பைபல்கலைக்கழகத்தின் அனைத்து வகையான உத்தியோகத்தர்களுக்கும் அளித்தல் ஆகும். பல்கலைக்கழக அ.அ.நி ஆனது பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்பட்ட அனைத்து பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான சிரேஸ்ட கல்விசார் உத்தியோகத்தர்களையும் உபவேந்தரை தலைவராகவும் கொண்ட முகாமைத்துவ குழுவினால் முகாமை செய்யப்படுகின்றது.

B. 2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தொழிற்பட்டறை மற்றும் தொழிற் பயிற்சி நெறிகள்

2020 ஆம் ஆண்டில் மூன்று தொழிற் பட்டறைகள் மற்றும் இரு தொழிற் பயிற்சி நெறிகள் உத்தியோகத்தர்களின் விருத்தியை நோக்காகக் கொண்டு நடாத்தப்பட்டன. அத்துடன் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்காக திட்டமிடப்பட்ட ஏனைய இரண்டு தொழிற்பட்டறைகள் திட்டமிடலின் பின்னர் பிற்போடப்பட வேண்டி இருந்தது. 2020 ஆம் ஆண்டின் பிரதான தொழிற்பயிற்சி நிகழ்வாக உயர் கல்வி கற்பித்தல் சான்றிதழ் பயிற்சி நெறி (உ.க.க.சா) காணப்பட்டது. இந் நிகழ்வு 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து பீடங்களில் இருந்தும் முப்பத்து மூன்று (33) பங்குபற்றுனர்கள் கலந்து கொண்டனர் அத்துடன் அதுவே ஒரு நிகழ்வில் பங்குபற்றக் கூடிய அதிகூடிய எண்ணிக்கையாகக் காணப்பட்டது. உ.க.க.சா பயிற்சி நிகழ்வு வாரம் விட்டு வாரம் ஒன்றாக வாரத்தின் ஐந்து வேலை நாட்களிலும் தொடர திட்டமிடப்பட்டது. இப் பயிற்சி நெறியானது 20 நாட்களில் முடிவடைய வேண்டி இருந்தாலும் கோவிட் -19 நிலைமை காரணமாக இப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டு மே மாதத்தின் இறுதி வரைக்கும் தொடரப்பட்டது. இந்த உ.க.க.சா பயிற்சி நெறியானது 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்படாமையால், அதிக எண்ணிக்கையான இ.ர.ப. கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் இருந்து விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் காத்திருப்போர் பட்டியலில் காணப்படுகின்றனர். ஆகவே, 2020 ஆம் ஆண்டில் இரண்டாவது உ.க.க.சா பயிற்சி நெறி ஆனது கார்த்திகை மாதத்தில் ஆரம்பிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் கோவிட் -19 நிலைமையின் கட்டுப்பாடுகள் காரணமாக இத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட வேண்டி இருந்தன. ஆனாலும், 2021 ஆம் முற்பகுதியில் அடுத்த உ.க.க.சா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும்.

அலுவலக அபிவிருத்தி நிலையம் ஆனது பல்கலைக்கழக நிர்வாக மற்றும் நிதியியல் படிமுறைகள் தொடர்பாக கற்கைத் துறைப் பிரிவன் தலைவர்கள் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான ஒரு தொழிற் பயிற்சி ஒழுங்குபடுத்தி இருந்தது. இந்த ஐந்து நாள் தொழிற் பயிற்சி நெறியானது வாரத்தில் நாளொன்றாக ஐந்து வாரத்தில் நடாத்தப்பட்டது அனைத்து பீடங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவுகளில் இருந்தும் 27 பங்குபற்றுனர்கள் கலந்து கொண்டனர்.

இணைய வழி கற்பித்தல் முறைக்கு தீடீர் திருப்பத்தினை கொண்டு செல்ல கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக, அ.அ.நி ஆனது இணைய வழி கற்பித்தல் முறைகள் தொடர்பாக இரு தொழிற் பட்டறைகளை கல்விசார் உத்தியோகத்தர்களுக்காக ஒழுங்குபடுத்தி இருந்தது. இந்த தொழிற் பட்டறைகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கணினி பொறியியல் கற்கைத் துறைப் பிரிவுடன் இணைந்து நடாத்தப்பட்டது. 100 க்கும் அதிகமான கல்விசார் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினார்கள்.

முகாமைத்துவ உதவியாளர்களுக்கு அலுவலக படிமுறைகள் தொடர்பாக அ.அ.நி. இனால் நடாத்தப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து கலந்து கொண்ட வளவாளரினால் நடாத்தப்பட்ட இநத

தொழிற்பட்டறையில அனைத்துப் பீடங்களில் இருந்தும் முப்பத்து ஐந்து (35) முகாமைத்துவ உதவியாளர்கள் பங்குபற்றினார்கள்.

பல்கலைக்கழக ரோஸ்ற்ட் மாஸ்ரர் கழகத்தின் மாதாந்த அமர்வுகளை நடாத்துவதற்கு தொழில் வழிகாட்டல் அலகுடன் அ.அ.நி ஆனது இணைந்து செயற்படுகின்றது. சர்வதேச ரோஸ்ற்ட் மாஸ்ரர் கழகத்தில் இருந்து வளவாளர் ஒருவரின் பங்குபற்றலுடன் தை மாதத்தில் ஒரு அமர்வு நிகழ்த்தப்பட்டது.

தொழிற்பட்டறை & பயிற்சி நெறிகள் பற்றிய சுருக்கம் - 2020

தொழிற் பட்டறையின் பெயர்	திகதி	உத்தியோகத்தர் வகை	பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை	செலவு
உயர்கல்வி கற்பித்தலுக்கான சான்றிதழ்	மாசி 11ஆம் திகதியில் இருந்து வைகாசி 28 ஆம் திகதி வரை	கல்வி சார் உத்தியோகத்தர்	33	492,885.00
ரோஸ்ற்ட் மாஸ்ரர் கழகம்	தை 9, 2020	கல்வி சார் உத்தியோகத்தர் & கல்வி சாரா உத்தியோகத்தர்	14	2,229.00
நிகழ்நிலை கற்பித்தல் முறைகள்	புரட்டாதி 10, 2020	கல்வி சார் உத்தியோகத்தர்	108	137,160.00
நிகழ்நிலை கற்பித்தல் முறைகள்	புரட்டாதி 27, 2020	கல்வி சார் உத்தியோகத்தர்		
முகாமைத்துவ உதவியாளர்-அலுவலக படிமுறைகள்	புரட்டாதி 29, 2020	கல்வி சாரா உத்தியோகத்தர்	55	14,520.00
கற்கைத் துறைப் பிரிவன் தலைவர்கள் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான தொழிற் பயிற்சி – பல்கலைக்கழக நிர்வாக & நிதியியல் படிமுறைகள்	புரட்டாதி 29, 2020	கல்வி சார் உத்தியோகத்தர் & கல்வி சாரா உத்தியோகத்தர்	27	139,093.00
	புரட்டாதி 17, 2020			
	புரட்டாதி 24, 2020			
	புரட்டாதி 30, 2020			
				785,887.00

C. 2020 ஆம் ஆண்டில் அலுவலர் அபிவிருத்தி நிலையத்தின் முன்னேற்றங்கள்

2020 ஆம் ஆணடுக்கான அ.அ.நி இன் செயற்பாட்டுத் திட்டங்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அ.அ.நி இன் அதிகமாக கோவிட்-19 நோய்த் தொற்று நிலை உடனான கட்டுப்பாடுக்கள் மத்தியிலும் திட்டம் இடப்பட்ட பயிற்சி நெறிகளில் அதிகமானவற்றை பூர்த்தி செய்யப்படக் கூடியதாக அமைந்தது மற்றும் உத்தியோகத்தர்களின் தேவையின் அடிப்படையில் புதிய தொழிற் பயிற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் நீண்ட காலமாக தாமதமாகிய உ.க.க.சா பயிற்சி நெறி கோவிட்-19 நோய்த் தொற்று நிலையின் சவால்களின் மத்தியிலும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன. அ.அ.நி. ஆனது 2020 ஆம் ஆண்டில் 90% ஆன வெற்றியை அடைந்நதாக அடையாளம் காணப்பட்டு உள்ளது.

பல்கலைக்கழக நிர்வாக மற்றும் நிதியியல் படிமுறைகள் தொடர்பாக கற்கைத் துறைப் பிரிவன் தலைவர்கள் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான ஒரு புதிய தொழிற் பயிற்சியை 2020 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்தமை அ.அ.நி க்கு ஒரு பெறுமதி சேர்க்கும் புதிய நிகழ்வாக அமைந்தது. இந்த தொழிற் பயிற்சி நெறி இந்த வருடத்தில் இருந்து வருடாந்தம் தொடர்ந்து நடாத்தப்படும்.

D. 2020 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள்

அதிகமான தொழிற்பட்டறைகள் மற்றும் தொழிற் பயிற்சிகள் கோவிட்-19 காரணமாக பல்கலைக்கழகம் 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் மூடப்பட்டு தொடர்ந்தும் பல மாதங்களுக்கு மூடப்பட்டு இருந்தமையால் நடாத்தப்பட முடியாமல் போனது. பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட பின்னரும் கூட பயண மற்றும் ஒன்றுகூடல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தமை அ.அ.நி இன் செயற்பாடுகளைப் பாதித்தது. 2020 ஆம் ஆண்டுக்காக ஒழுங்குபடுத்தப்பட இருந்த கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான பல எண்ணிக்கையான செயற்பாடுகளுக்கான திட்டங்களை நிறுத்தி வைக்கப்பட வேண்டி அமைந்தது. இவை கல்விசார்ந்த விடயங்களை எழுதுதல், ஆய்வு திறமைகள், மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றல் மற்றும் கற்கை நெறி மீள்பார்வைக்கான சு.ம.அ. எழுதுதல் ஆகிய தலைப்புக்களில் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான தெரிழிற்பட்டறைகளை உள்ளடக்கி இருந்தன. கல்விசாரா உத்தியோகத்தர்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்த தொழிற்பட்டறைகள் அலுவலக கடிதங்கள் எழுதும் முறை, தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் மற்றும் ஆய்வுகூட பாதுகாப்பு பயிற்சி நெறிகள் என்பனவும் நிறுத்தி வைக்கப்பட வேண்டி இருந்தன. "ஒரு சிறந்த சாரதியாதல்" எனும் தலைப்பில் சாரதிகளுக்கான தொழிற்பட்டறை மார்கழி மாதத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது ஆனால் அனைத்து ஆயத்தங்களையும் செய்த பின்னர் 2021 ஆம் ஆண்டு தை மாதத்திற்கு பிற்போட வேண்டி அமைந்தது.
இந்த நிலைமைகளுக்கு கீழ் உ.க.க.சா பயிற்சி நெறியை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டதுடன் உ.க.க.சா பயிற்சி நெறியின் சில இறுதி நிகழ்வுகள் இணையவழி முறையில் நடாத்தப்பட்டன. மேலும், இரண்டாவது உ.க.க.சா பயிற்சி நெறி தாமதமாகியதுடன் 2021 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டது. சில நிகழ்வுகள் இணைய வழியின் மூலமாக பூர்த்தி செய்யப்பட்டாலும் சில தலைப்புகளுக்கு இணைய வழியில் நடாத்துவதில் ஏற்பட்ட இடர்பாடுகள் அ.அ.நி இனை அந்த நிகழ்வுகளை அடுத்த வருடத்தில் நடாத்துவதற்கு பிற்போடச் செய்தன.

E. 2021 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள்

இ. ர. ப. இன் அ. அ. நி பல்வேறு தொழிற்பட்டறைகள் மற்றும் தொழிற் பயிற்சிகளை கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் நடாத்த திட்டம் இடப்பட்டுள்ளது. பிரதான தொழிற்பயிற்சி நிகழ்வாக 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட உள்ள உ.க.க.சா ஆகும். இதற்கு மேலதிகமாக, கற்கைத் துறைப் பிரிவுத் தலைவர்கள் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான தொழிற் பயிற்சியை வருடாந்த தொழிற்பயிற்சி நிகழ்வாக 2021 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் தொழில் அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்குவதற்கான அலுவலர் அபிவிருத்தி நிலைய செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு உள்ளன.

28. கணினி நிலையம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் கணினி நிலையமானது பட்டதாரி மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தும் நோக்கோடு 1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையமானது நேரடியாக உபவேந்தரால் நிர்வகிக்கப்படுவதோடு,இதன் தொழிற்பாடுகள் உபவேந்தரால் நியமிக்கப்பட்ட நிலையத்தின் தலைவரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. கணினி நிலையமானது முகாமைத்துவ கற்கைகள் பீடத்தினதும் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல்பீடத்தினதும் மாணவர்களுக்காக அடிப்படை கணினி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதை ஆரம்பத்தில் முதன்மையாகக் கொண்டது. பல்கலைக்கழகம் விரிவுபடுத்தப்பட்டது போலவே,இக்கணினி நிலையமானது பல்கலைக்கழகத்திற்குரிய முதன்மையான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை வழங்குனராகும். நிலையம் ஆரம்ப காலத்திலிருந்தே விரிவுபடுத்தப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து நிர்வாகப் பழுவைக் குறைப்பதற்காக, பல்கலைக்கழக பேரவையால் கல்வி மற்றும் நிர்வாக விடயங்களை பார்ப்பதற்காக பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சிறந்த அறிவுடைய ஒரு கல்விசார் அங்கத்தவர் ஆவார். பணிப்பாளரின் பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆகும்.

நிலையம் வார நாட்களில் மு.ப 8.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரையும் சனிக் கிழமைகளில் மு.ப 8.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரையும் திறந்திருக்கும். சாதாரணமாக திறக்கும் நேரங்கள் தவிர உபவேந்தரின் அனுமதியுடனான விசேட வேண்டுகோள்களின் பொருட்டும் பரீட்சை விடுமுறைக் காலங்களிலும் பரீட்சை காலங்களிலும் நிலையமானது பி.ப 8.00 மணி வரையும் திறந்திருக்கும். கணினி நிலையத்தின் அலுவலர்களாக ஒரு கணினி தொழில்நுட்ப போதனாசிரியர், ஒரு கணினிப் பொறிமுறை பகுப்பாய்வாளர், ஒரு உதவி வலையமைப்பு முகாமையாளர், ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒரு ஆய்வுகூட உதவியாளர் மற்றும் ஒரு சிற்றூழியர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

வளங்களும் சேவைகளும்

கணினி ஆய்வுகூடங்கள்

ஒவ்வொன்றும் 100 நவீன கணினிகளைக் கொண்ட இரு ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ளது. இந்த ஆய்வுகூடங்களில் ஒன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயங்கள் சார்ந்த விரிவுரைகளையும் செயன்முறைகளையும் நடாத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றைய ஆய்வுகூடமானது மாணவர்ளுக்கு அவர்களது கற்றல் சார்ந்த செயற்பாடுகளுக்காக கிடைக்கக்கூடியதாக உள்ளது.

காணொளி மாநாட்டு அலகு

ஓர் அர்ப்பணிப்பு காணொளி மாநாட்டு முறைமை தேவையான பகுதிகளை ஒரு ஒற்றைத் தொகுப்பு கருவியாக பொதியிட்டு கணினி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளதால் எந்தவொரு கல்வி அல்லது நிர்வாக உத்தியோகத்தர்கள் தொலைதூர உத்தியோக பூர்வ நிகழ்வுகளில் பங்கேற்க முடியும். அதனுடன் பிறபகுதியினரை தொலைவிலிருந்து இணைக்கக் கூடிய வசதிகளை வழங்குகின்றது.

கணினி பராமரிப்பு ஒன்றுசேர்த்தல் மற்றும் திருத்தியமைத்தல் அலகு (சி.எம்.ஏ.யூ)

பல்கலைக்கழகத்தின் சி.எம்.ஏ.யூஆனது கணினி நிலையத்தின் பணிப்பாளர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது. சி.எம்.ஏ.யூ இனால் தனிப்பட்ட கணினிகள், யூ.பீ.எஸ்கள், அச்சுப்பொறிகள் போன்ற தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. மென்பொருள் நிறுவுதல் மற்றும் பிழைகளை திருத்தல் போன்ற சேவைகளையும் இவ்வலகு வழங்கி வருகின்றது. சி.எம்.ஏ.யூ இன் கடமைகளை கொண்டு நடாத்த இரு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் கடமை நேரத்திற்கு மேலதிகமாகவும் விடுமுறை தினங்கள் மற்றும் வார இறுதி நாட்களிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

இணைய மற்றும் அக வலையமைப்பு சேவைகள்

எல்.ஈ.ஏ.ஆர்.என் என்பது பல்கலைக்கழகத்தின் பிரதான ஐ.எஸ்.பீ ஆகும் அத்துடன் பல்கலைக்கழக மிஹிந்தலை வளாகம் பெற்றுள்ள இணைய பட்டையகலம் 400 எம்.பி.பீ.எஸ் ஆகும். அதிவேக ஒளியியல் நார் வலையமைப்பு மிஹிந்தலே வளாகத்தின் பெரும்பாலான கட்டடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்டடங்களுக்கு உட்பகுதிகளில் யூ.ரி.பீ கம்பிகள் பொருத்தப்பட்டு எல்.ஏ.என் இனூடாக பிரதான வலையமைப்புக்கு இணைக்கப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் சில விரிவுரை மண்டபங்கள் தவிர, அனைத்து கல்விசார் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு இணைய மற்றும் அக வலையமைப்பு இணைப்புக்களை கணினி நிலையம் வழங்குகின்றது.

B. அடைவுகள்

தகவல் தொடர்பாடல் நிலையம் மிஹிந்தலை வளாகத்தில் உள்ள பீடங்களினது அனைத்து கல்விசார் நடவடிக்கைகளுக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக அமைந்தது. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு மேலாக தற்போது உள்ள கணினி ஆய்வு கூடங்கள் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக 25 கணினிகளை புதிய கணினிகளை இட்டு பிரதியீடு செய்து மேம்படுத்தப்பட்டு உள்ளது.

1. ஒவ்வொன்றிலும் முறையே 77 மற்றும் 110 மாணவர்களை கொண்ட த.தொ.தொ இல் சான்றிதழ் கற்கை நெறி மற்றும் த. தொ.தொ. இல் டிப்ளோமா கற்கை நெறி ஆகிய விரிவாக்கல் கற்கை நெறிகளை ஆரம்பித்தது.

2. கணினி பராமரிப்பு ஒன்றுசேர்த்தல் மற்றும் திருத்தியமைத்தல் அலகு (சி.எம்.ஏ.யூ) தனது கடமைகளை வழமை போன்று ஆற்றி வருகின்றது.

3. புதிய பண்டுல I, புதிய பண்டுல II மற்றும் புதிய சோமாதேவி மாணவர் விடுதிகளிற்கு வை-பை வசதிகள் செய்து வழங்கப்பட்டன.

4. சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்தின் வை-பை வலையமைப்பு செயற்பாடுக்ள ஏறத்தாழ 80 மூ பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.

5. கோவிட் 19 காரணமாக பல்கலைக்கழகம் பௌதிக முறை பயன்பாட்டுக்கு மூடப்பட்டு இருந்தபோதும் 2020 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் இருந்து எல்.ஈ.ஏ.ஆர்.என் நிறுவன உதவியுடன் காணொளி மாநாட்டு வசதிகள் நிறுவப்பட்டன. ZOOM செயலி ஆனது நீண்ட காலத்திற்கு மிகக் குறைந்தளவான இடையூறுகளுடன் செயற்படுவதுடன் கற்றல் மற்றும் ஆய்வு பாட விதானங்களை இணையத்தில் அணுகல், வீட்டில் இருந்து வேலை செய்வதற்கு அனுமதித்தல் போன்றவற்றிற்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குகின்றது.

C. எதிர்காலத் திட்டங்கள்

1. இணைய வழங்கி அறையை நிர்வாகக் கட்டடத் தொகுதியில் இருந்து தற்போது ஸ்தாபிக்கப்பட்ட தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்திற்கு மாற்றி அமைத்தல்.

2. த. தொ. நிலையத்துக்கான நுழைவாயிலை பிரித்தல்.

3. பல்கலைக்கழகத்துக்கான புதிய வலைத்தளத்தை உருவாக்குதல்

29. தர உத்தரவாதத்துக்கான நிலையம்

A. அறிமுகம்

உள்ளக தர உத்தரவாதமானது (உ.த.உ) தர உத்தரவாதத்துக்கான அலகு (த.உ.அ) மற்றும் உள்ளக தர உத்தரவாத அலகுகள் (உ.த.உ.அ) என்பவற்றின் கீழ் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றதுடன் உ.த.உ செயற்பாடுகளின் மீதான உ.த.உ கையேட்டுக்கு (2013) அமைவான துணைச் சட்டங்களினால் வழிப்படுத்தப்பட்டு வருகின்றது. தரத்தை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து சாத்தியமான மண்டலங்களின் வேலைகள் ஊடாக அவர்களது பணியை விரிவுபடுத்த உ.த.உ.அ புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் உ.த.உ.அ இன் அங்கத்தவர் ஒருவர் பொறுப்பாக விளங்குவதுடன் அவள்.ர். அவன் பீட சபை அல்லது தொ.தொ.க.நி இனால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டுக் குழு ஒன்றுடன் சேர்ந்து அனைத்து துறைகளிலும் உள்ள உ.த.உ இன் தொழிற்பாடுகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக உருவாக்கவும் மற்றும் பல உத்தியோகத்தர்களின் ஈடுபாட்டை ஏற்படுத்தவும் தனது கடமைகளைப் புரிவர். த.உ.அ ஆனது தர உத்தரவாதம் மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, பாடவிதான விருத்திக் கொள்கை, மனித வள அபிவருத்திக் கொள்கை, மாணவர் மதிப்பீட்டுக் கொள்கை ஆகிய பல கொள்கை ஆவணங்களை தயாரிப்பதில் தலைமை வகித்து வருகின்றது. த.உ.அ ஆனது வெளியக தர உத்தரவாத (வெ.த.உ) செய்முறைகளிலும் முன்னாயத்தக்கள் மற்றும் வழிகாட்டல்களை மேற்கொள்கின்றது. த.உ.அ இன் பீட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பீடங்களின் பீடாதிபதிகள் ஆகியோர்களே பீடங்களில் உள்ள உ.த.உ இற்குப் பொறுப்பானவர்கள் ஆவர். தொ.தொ.க.நி இன் உ.த.உ.அ ஆனது பீடாதிபதிகளுக்கு பதிலாக தொ.தொ.க.நி இன் பணிப்பாளருடன் அதே முறையிலேயே செயற்படுகின்றது. த.உ.அ இன் முகாமைத்துவக் குழு ஆனது மூதவையின் உப குழுவாக மாற்றப்பட்டு உப வேந்தரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. த.உ.அ இன் விடயங்கள் மூதவையில் ஒரு தனியான விடயமாக கருத்திற் கொள்ளப்படுவதுடன் நிலையங்கள் மற்றும் அலகுகளில் ஆவணப்படுத்தப்படுகின்றன.

B. அடைவுகள்

ப.மா.ஆ இன் த.உ.அ இனால் நடாத்தப்பட்ட கற்கைநெறி மீளாய்வுக்கான தரங்கள் பின்வருமாறு:

மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி பட்டம் (எம். பி.பி. எஸ்) - B தரம் (நன்று)
விவசாய இளமாணிப் பட்டம் - B தரம் (நன்று)

த. உ. அ இன் வெளியக மீள்பார்வைக்காக சு. ம. அ. சமர்ப்பிக்கப்பட்டது

நி. மீ / க. நெ. மீ.	கற்கை நெறி/ தொகுதியின் பெயர்	சு. ம. அ. சமர்ப்பிக்கப்பட்ட திகதி
க. நெ. அ.	உயிரியல் விஞ்ஞான இளமாணிப் பட்டம்	30.06.2020
க. நெ. அ.	சுகாதார விருத்தி விஞ்ஞான இளமானிப் பட்டம்	30.06.2020
க. நெ. அ.	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணிப் பட்டம்	30.06.2020
க. நெ. அ.	பௌதிக விஞ்ஞான இளமாணிப் பட்டம்	30.06.2020

C. தோல்விகளும் நியாயங்களும்

பௌதிகமாக நடாத்த திட்டமிடப்பட்ட அனைத்துக் கூட்டங்கள், தொழிற்பட்டறைகள் மற்றும் தொழிற் பயிற்சி நெறிகள் கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காரணமாக நிறுத்திவைக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டுக்கான பிரயோக விஞ்ஞான கற்கை நெறிகளின் மீள்பார்வைக்காக திட்டமிடப்பட்ட வருகை ஆனது கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காரணமாக ப. மா. ஆ இனால் நிறுத்திவைக்கப்பட்டது.

D. எதிர்காலத் திட்டங்கள்

2021 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மீண்மெடழும் செலவினங்கள்

இல.	செயற்பாடுகள்	காலம்	பயன் பெறும் குழுவினர்	செயற்பாடு	தொகை (ரூ.)
1.	"நிறுவன மீள்பார்வை அறிக்கை எழுதுவது எப்படி" எனும் தலைப்பில் தொழிற் பட்டறை	முழு நாள்	கல்விசார் உத்தியோகத்தர்கள்	தொழிற்பட்டறை	60,000.00
2.	இணையவழிக் கற்றல், தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு கற்றல் எனும் தலைப்பில் தொழிற் பட்டறை	முழு நாள்	கல்விசார் உத்தியோகத்தர்கள்	தொழிற்பட்டறை	60,000.00
3.	கொள்முதல் செய்தல், விலைமனுக் கோரல், மனுக் கோரலின் செயன்முறைகள் எனும் தலைப்பில் தொழிற் பட்டறை	முழு நாள்	நிர்வாக மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள்	தொழிற்பட்டறை	60,000.00
4.	தொழிற் பட்டறைகள் / கருத்தரங்குகள் / மாநாடுகளில் பங்குபற்றல் - உ.த.உ.அ இன் பணிப்பாளர்/ பீட ஒருங்கிணைப்பாளர்கள்	-	த.உ.அ இன் பணிப்பாளர் மற்றும் பீட ஒருங்கிணைப்பாளர்கள்	-	100,000.00
5.	ஒன்றுகூடல்களுக்கான சிற்றுண்டிச் செலவுகள்/ எழுதுகருவிகள் மற்றும் நுகர்பொருட்கள்	-		-	60,000.00
மொத்தம்					340,000.00

30. பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகு

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகு 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) இன் சுற்றறிக்கை இல. 10 /2016 இற்கு அமைவாக முன்னெடுப்புக்களுடன் உலக வங்கியின் நிதி உதவியுடன் உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குகின்ற இலங்கை அரசினால் இயக்கப்படுகின்ற உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்தல் திட்டத்தின் நிதி உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. இவ் அலகு துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகின்றது. அது பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் அதாவது அனைத்து பீடங்களும் இலகுவாக இணுகக் கூடிய வகையில் அமைந்துள்ளது. பிரதான கட்டடத் தொகுதியில் தொ. தொ. க. நி இற்கு அடுத்ததாக அமைந்துள்ளது. இவ்வலகானது பணிப்பாளர், முகாமையாளர், ப. வ. இ. அ. இன் அறிவுரைக் குழு மற்றும் ஒவ்வொரு பீடத்தில் இருந்தும் ஆதரவு வழங்கும் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்களின் கீழ் நன்றாக இயங்கி வருகின்றது.

ப. வ. இ. அ இன் தற்போதைய பணிப்பாளர் பேராசிரியர் (திருமதி) ஜீ. ஏ. எஸ். கினிகத்தர மற்றும் அவரின் கீழ் ஒரு ப. வ. இ. அ இன் முகாமையாளர் திருமதி. ஈ. என். லியனகே மற்றும் ப. வ. இ. அ இன் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஒரு பயிலுனர் செல்வி. ஆர். ஆர். மொகமட் ஆகியவர்கள் அலகின் உத்தியோகத்தர்களாக கடமை புரிந்து வருகின்றனர்.

ப. வ. இ. அ இன் பணிப்பாளர் அவர்களின் வழிகாட்டலுடன் ஒவ்வொரு பீடத்தில் இருந்தும் ஆறு பீட ஒருங்கிணைப்பாளர்கள் ப. வ. இ. அ உடன் ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் தொடர்பாடலை மேற்கொள்ளல் என்பவற்றை இலகுவாக்குவதற்காக காணப்படுகின்றனர். துணை வேந்தர், தொழிற்துறை நிபுணர்கள் மட்டுமன்றி பீடத்தின் பீடாதிபதிகள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோரை கொண்ட ப. வ. இ. அ இன் அறிவுரைக் குழு ஆனது ப. வ. இ. அ இற்கு அறிவுரை வழங்கி வருகின்றது.

B. அடைவுகள்

பீட விழிப்புணர்வு நிகழ்வுகள்

ப. வ. இணைப்புக்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகள் 2020 ஆம் வருடம் முழுவதும் ஒழுங்குபடுத்தப்பட்டு பீட மட்டங்களில் நடாத்தப்பட்டது மற்றும் பீட மாணவர்கள், உத்தியோகத்தர்களுக்கு தனித்தனியாக அமர்வுகள் நடாத்தப்பட்டன. இது ஒரு வெற்றிகரமான அமர்வுகளின் தொடராக காணப்பட்டது. ஏனெனில் பல்கலைக்கழக சமூகம் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகின் பரந்த கருத்துக்களை பெறுக் கூடியதாக அமைந்தது. ஐந்து விழிப்புணர்வு அமர்வுகள் மொத்தமாக 250 மாணவர்கள் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களை பங்குபற்றாளர்களாகக் கொண்டு ஐந்து பீடங்களிலும் (விவசாய பீடம், முகாமைத்துவ கற்கைகள் பீடம், வமூக விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம்) நடாத்தப்பட்டன.

வார இறுதி ஆரம்பம்

இந் நிகழ்வு பிரயோக விஞ்ஞான பீடத்தின் முயற்சியாண்மை (ஐ. சீ. ரீ 3208) மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி (ஐ. டீ. சீ 3201) பாட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பீடத்தினால் அடையாளம் காணப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தல் இருந்து 4 நிபுணர்கள் உள்ளடங்கலாக 30 நிபுணர்களுடன் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்த மூன்று நாள் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 80 மாணவர்கள் பங்குபற்றினர். 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6 ஆம், 7 ஆம், மற்றும் 8 ஆம் திகதிகளில் ஆர்வத்துடன் கூடிய இளைய சமுதாயமாகிய நிபுணத்துவம் உடைய மாணவர்களை குழுக்களாகப் பிரித்து 54 மணி நேர குழு வேலையுடன் மூலமாக சேர்க்கப்பட்ட வார இறுதி ஆரம்பம் ரஜரட்டப் பல்கலைக்கழக வெளியீடு 2.0 பூர்த்தி செய்யப்பட்டது.

X.∴பௌண்ட்றி இணைப்பு ஆரம்பம்

இ. ர. ப. இன் வணிகமயமாக்கக் கூடிய ஆய்வுகளின் வெளிக்கொணர்வுகளை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் மேம்படுத்துவதற்கு X.∴பௌண்ட்றி நிறுவனம் ஆனது இ. ர. ப உடன் இணைந்து ப. வ. இ.

அ இன் ஊாடாக ஒரு புரிந்துணர்வு உப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டது. ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை புத்தாக்க கூட்டமைப்பு செயற்திட்டத்தின் (ஈ.யூ - எஸ்.எல்.ஐ.பீ) நிகழ்ச்சித் திட்டத்துடன் செயலாற்றி வருகின்ற X.'.பௌண்ட்றி நிறுவனம் ஆனது ப. வ. இ. அலகுகளின் செயற்திறனை கட்டியெழுப்புவதற்கு ப. வ. இ. அ இன் உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறனான பல்கலைக்கழக – வணிக இணைப்புக்களை உருவாக்குவதில் தொடர்பாக முதலாவது நிகழ்நிலை தொழிற் பட்டறையை 2020 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 06 ஆம் திகதி பி. ப. 1.00 மணி முதல் பி.ப. 04.30 மணி வரை நடாத்தியது. இதன் பிரதான கருத்து என்னவெனில் ப.வ.இ.அ/ ரீ.ரீ.ஒ ஆகியன ஜேர்மனி, லிதுவானியா மற்றும் இந்தியாவில் இடம்பெற்ற வெற்றிகரமான இணைப்புக்களில் இருந்து ஊக்குவிப்புக்களை பெற்றுக் கொண்டதுடன் கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய வணிக நிறுவனங்கள் என்பனவற்றுடன் எவ்வாறு இணைந்து தொழிற்படுவது என்பதே ஆகும். அத்துடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே இணைப்புக்களை உருவாக்குவதில் ப.வ.இ.அலகுகளினை வசதிப்படுத்துவதற்காக ஒரு பெரிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாக அமைவதை நோக்காகக் கொண்டது.

வட மத்திய மாகாண வர்த்தக, தொழில் நிறுவன மற்றும் விவசாய அமையத்துடனான இணைந்த செயற்பாடு

என். சீ. பீ, சீ. சீ. ஐ. ஏ மற்றும் இ. ர. ப. இணைந்து ப. வ. இ. அ இன் ஊாடாக விரைவாக தொழிற்துறை நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை நிறைவு செய்தது.

நிகழ்நிலைக் கருத்தரங்கு நிகழ்வுகளை ஆரம்பித்தல்

02 - மணித்தியால அமர்வு வார இறுதி நாட்களில் இணைய வழியாக ப. வ. இ. அ இனால் தொழிற்துறை நிபுணர்கள் அழைக்கப்பட்டு அவர்களது அனுபவங்களை இ. ர.ப. மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஒழுங்குபடுத்தப்பட்டதுடன் இ. ர. ப. இன் ஆறு பீடங்களிலும் இருந்தும் மாணவர்களின் நேர் விமர்சனங்களுடன் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகின்றது. நிகழ்நிலை கருத்தரங்குகள் மாணவர்களிடம் இருந்து மட்டுமன்றி பீட ஒருங்கிணைப்பாளர்களிடம் இருந்தும் பெறப்பட்ட ஆரோக்கியமான பின்னூட்டல்களுடன் இன்னமும் நடாத்தப்பட்டு வருகின்றன.

2020 ஆம் ஆண்டு ஆறு தொழிற்துறை நிபுணர்களுடனான ஆறு நிபுணர்கள் மற்றும் 1000 எண்ணிக்கையான பங்குபற்றுனர்கள்/ மாணவர்கள் இணைந்து கொண்டனர்.

கிடைக்கப் பெற்ற 13 கண்டுபிடிப்புக்கள், புத்தாக்கங்கள் மற்றும் வணிகமயமாக்கல் என்பவற்றுக்காக முன்மொழியப்பட்ட ஆய்வுகள்

முன்மொழியப்பட்ட ஆய்வுகளின் தலைப்புக்கள்	பீ.ஐ
உணவுக்குப் பின்னர் குருதியில் குளுக்கோஸின் அளவை கட்டுப்படுத்துவதற்காக மூலிகைக் குடிபானம் – *மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம்*	எஸ் பீ. ஏ. எச். சேணாதீர / எச். ரீ. டபிள்யூ. வீரக்கோன்
இயற்கை மூலப் பொருட்களின் மூலம் தயாரிக்கப்பட்ட அகத்துறிஞ்சிகளைப் பயன்படுத்தி குளோரீன், வன்னீர் கூறுகள் & மொத்த கரையக்கூடிய திண்மங்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கு வணிக நீர் வடிகட்டல் - *தொழில்நுட்ப பீடம்*	திரு. ஜே. எஸ் ஜயசுந்தர
வளப்படுத்திய கூட்டெருவின் உற்பத்தி வீதம் மற்றும் போசணை பெறுமதி ஆகியவற்றில் வளியூட்டலின் விளைவு - *விவசாய பீடம்*	கலாநிதி. டீ. எம். எஸ். எச். திஸ்ஸாநாயக்க
சுகாதார நிலைமைகள் மற்றும் வினைத்திறனை அதிகூடியதாக்க குழாய்களில் தன்னியக்க மீள்பொருத்தக்கூடிய நுட்பத்தை விருத்தி செய்தல் - பிரயோக விஞ்ஞான பீடத்தில்	என். குருகுலசூரியகே
தூமங்களின் வெளியிடுகை முறைமை மூலம் கோவிட் - 19 நுண்ணிய ஆர். என். ஏ தொற்று நீக்கல் முறை - *மருத்துவ மற்றும் இணைந்த*	கலாநிதி. தன்ஜுஸ்கா ஹேவாபொஸ்தான்திரிகே

விஞ்ஞானங்கள் பீடம்	
வெதுப்பதற்கு தயாரான பூசணி மாவை அடிப்படையாகக் கொண்ட கேக் கலவையை தயாரித்தல் மற்றும் தர மதிப்பீடு – *தொழில்நுட்ப பீடம்*	கே. எச். ஐ. ஜிம்ஹானி
மாட்டின் சிறுநீரை அடிப்படையாகக் கொண்டு நைதரசன் பசளை - *விவசாய பீடம்*	கலாநிதி. டபிள்யூ. சீ. பீ. ஈகொடவத்தே
சோடியம் ஒக்சிகுளோரைட் நீர் கொண்ட கிருமி நீக்கி தயாரிப்புக்கான ஒரு புதிய கிரபீன் மெருகூட்டப்பட்ட நனோ உலோக ஒக்சைட் இலத்திரனியலூக்கி – *பிரயோக வஞ்ஞான பீடம்*	பேராசிரியர். அஜித் ஹேரத்
கோவிட் - 19 இற்கான ஆய்வுகூடம் மற்றும் சிகிச்சை மதிப்பீடுகளில் ஆயர்வேத மருத்துவ அறிமுகம் – *தொழில்நுட்ப பீடம்*	கலாநிதி. ஆஷா விஜேகுணவர்த்தன
ஒரு இணைய வழி மருத்துவ முறை மற்றும் ஒரு இலத்திரனியல் மருந்து பரிந்துரைக்கும் முறைமை ஆகியவற்றை உருவாக்குதல் - *மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம்*	கலாநிதி. ஜனித் சந்ரகுமார
கழிவு பிளாஸ்டிக் இனைக் கொண்டு நடைபாதைக் கற்களுக்கு இடைப் பொருத்துக்களை தயாரித்தல் – *தொழில்நுட்ப பீடம்*	கலாநிதி. எச். ஏ. என். தர்மகுணவர்த்தன
அந்துரியம் (அந்துரியம் அந்ரேனம்) பயிர்ச் செய்கைக்கு ஏற்ற மெதுவாக பொட்டாசியத்தை விடுவிக்கும் சேதன குளிகை ஒன்றை கண்டுபிடித்தல் – *விவசாய பீடம்*	டில்சானி டீ சில்வா
கணினி எண் கட்டுப்பாட்டு (க. எ. க) முறையைப் பயன்படுத்தி பற்றிக் நார்களில் மெழுகூட்டலுக்கான இயந்திரத்தை வடிவமைத்து தயாரித்தல் – *தொழில்நுட்ப பீடம்*	புபுது குமாரகே

உரிமத்துக்கான விண்ணப்பப் படிவம்

தற்போது, ப. வ. இ. அ பிரயோக விஞ்ஞான பீடத்தில் இருந்து இரு உரிமம் கோரலுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன் வணிக கூட்டாளர்களை தேடும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. கிடைக்கப் பெற்ற உரிமங்களின் தலைப்புக்கள்;

உரிமத்தின் தலைப்பு	கண்டுபிடிப்பாளர்கள் பெயர்	பீடம்
ஆர்டுய்னோ இனைப் பயன்படுத்தி வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் இரும்பு உபகரணத்தை உருவாக்கலும் கட்டுப்பாட்டு முறையும்	திரு. டீ. எம். எச். எம். திஸ்ஸாநாயக்க	பிரயோக விஞ்ஞான பீடம்
சேர்கோன் மண் காணப்படும் இடங்களில் சேர்கோணியா உற்பத்திக்குரிய ஒரு வினைத்திறனான முறை	கலாநிதி. பி. ஏ. கருணாரத்ன திருமதி. ஏ. ஜீ. விக்ரமகெதர	பிரயோக விஞ்ஞான பீடம்

ப. வ. இ. அ இன் அலுவலக உத்தியோகத்தர்களுக்கான தொழிற்பட்டறைகள்

உலக புலமைச் சொத்து அமைப்பு (உ. பு. சொ. அ) பல்வேறு தொழிற்பட்டறைகளை அலுவலக உத்தியோகத்தர்களுக்கு நடாத்தியது. ப. வ. இ. அ இன் பணிப்பாளர், முகாமையாளர் மற்றும் ப. வ. இ. அ இன் பயிற்சியாளர்கள் ஆகியோர் 34 நிகழ்நிலை தொழிற் பயிற்சி அமர்வுகளில் இந்த வருடம் முழுவதும் நேரத்துக்கு நேரம் பங்குபற்றினர்.

ப. வ. இ. அ இன் பீட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டங்கள்

அனைத்து 06 பீடங்களினதும் பீட ஒருங்கிணைப்பாளர்களும் அனைத்து பீடங்களினதும் ப. வ. இ. அ இன் செயற்பாடுகளை வினைத்திறனாக நடாத்திச் செல்ல ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு கூட்டங்களில் பங்குபற்றினார்கள். இந்த வருடம் முழுவதும் நிலவிவரும் நோய்த் தொற்று நிலையை கருத்திற் கொண்டு

நிகழ்நிலை மற்றும் பௌதிக முறையில் 06 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அனைத்து பீடங்களில் இருந்து ஒருங்கிணைப்பாளர்கள் அல்லது பிரதிநிதிகள் அமர்வுகளுக்கு பங்குபற்றினர்.

ப. வ. இ. அ இன் அறிவுரைச் சபை ஒன்றுகூடல்கள்

ப. வ. இ. அ இன் அறிவுரைச் சபை ஆனது ப. வ. இ. அ இன் செயற்பாடுகள் சார்பாக ஒரு தீர்மானம் மேற்கொள்ளும் சபையாக காணப்படுகின்றது. இது உப வேந்தர், அனைத்து பீடாதிபதிகள், ப. வ. இ. அ இன் பணிப்பாளர், நிதியாளர், பேரவையால் தெரிவுசெய்யப்பட்ட பேரவை உறுப்பினர்கள் மற்றும் தொழிற்துறை நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கியது. பல்கலைக்கழகத்தின் ப. வ. இ. அ இன் 02 ஆம் அறிவுரைச் சபை கூட்டம் ஆனது 2020 ஆம் ஆண்டு தை மாதம் 14 ஆம் திகதி அன்று பதில்கடமையாற்றும் உப வேந்தர், பீடாதிபதிகள், நிதியாளர், பேரவை உறுப்பினர்கள் மற்றும் தொழிற்துறை நிபுணர்கள் ஆகியோரின் வருகையுடன் நடைபெற்றது. ப. வ. இ. அ இன் பணிப்பாளர் பேராசிரியர். ஜீ.ஏ.எஸ். கினிகத்தர அவர்கள் ப. வ. இ. அ இனை அறிமுகப்படுத்தியதுடன் சபையின் அடையப்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்கள் என்பவற்றை முன்வைத்தார்.

தொழிற்துறை நிபுணர்கள் பல்கலைக்கழகத்தின் புத்தாக்க மற்றும் தொழில்முயற்சி கலாச்சார விருத்தியுடனான அவர்களது ஆலோசனைகள் மற்றும் பல்கலைக்கழகமானது எவ்வாறு தொழிற்துறை நிறுவனங்களுக்கான தீர்வுகளுக்கு ஆதரவு அளிக்க முடியும் என்பதற்கான மாற்றுக் கருத்துக்கள் ஆகியவற்றை வழங்கி பங்களிப்புச் செய்தனர். இந்த ஒன்றுகூடலில் பல்கலைக்கழக சிம்போசியத்தில் தொழிற்துறைகளின் பங்குபற்றல் மற்றும் புத்தாக்க கண்காட்சியை விருத்தி செய்தல் என்பன முக்கிய விடயங்களாக கொள்ளப்பட்டன. இந்த ஒன்றுகூடலில் 11 பேர் கலந்து கொண்டனர்.

சேகரிக்கப்பட்ட கண்டுபிடிப்பு இணைப்புப் படிவங்களின் எண்ணிக்கை

வாடிக்கையாளர்கள்	கண்டுபிடிப்பாளர்கள் எண்ணிக்கை	சமர்ப்பிக்கப்பட்ட ஐடீஎ.்ப் களின் எண்ணிக்கை
ரஜரட்ட பல்கலைக்கழக கண்டுபிடிப்பாளர்கள்	06	09
பீடம்	**விபரம்**	**கண்டுபிடிப்பாளர்**
பிரயோக விஞ்ஞான பீடம்	"ஆர்டுய்னோ" கண்டுபிடிப்பு இணைப்புப் படிவம் சமர்ப்பிப்பு	கண்டுபிடிப்பாளர் திரு. டீ. எம். எச். எம். திஸ்ஸாநாயக்க
விவசாய பீடம்	"தேபு பிஸ்கட்" கண்டுபிடிப்பு இணைப்புப் படிவம் சமர்ப்பிப்பு	கண்டுபிடிப்பாளர் திருமதி. கே. டீ. டீ. எம். காரியப்பெரும
விவசாய பீடம்	கண்டுபிடிப்பு இணைப்புப் படிவங்கள் சமர்ப்பிப்பு - நொதிக்கப்பட்ட அரிசித் தவிடு ஐஸ்கிறீம் - உடலுக்குகந்த பக்டீரியா உதிரிகளைக் கொண்ட குடிபானம் - நெய்ப் புரதம் சேர்க்கப்பட்ட தானியக் கலவை	கண்டுபிடிப்பாளர் கலாநிதி. (திருமதி). டீ. எம். எஸ். எச். திஸ்ஸாநாயக்க
விவசாய பீடம்	கண்டுபிடிப்பு இணைப்புப் படிவங்கள் சமர்ப்பிப்பு - தோடம்பழ நார் சேர்க்கப்பட்ட யோகட் பானம் - தர்பூசணி யோகட் - வெண்ணெய் உடனான கறிவேப்பிலை கிறீம்	கண்டுபிடிப்பாளர்கள் திரு. டபிள்யூ. வீ. வீ. ஆர். வீரசிங்க, டபிள்யூ. டீ. பீ. வேரகம, பேராசிரியர். ஏ. எம். ஜே. பீ. அதிகாரி, எஸ். வீ. எச். ஸ்ரீமாலி, பேராசிரியர். டபிள்யூ. ஏ. டீ. நயணாஞ்சலீ

பிரயோக விஞ்ஞான பீடம்	கண்டுபிடிப்பு இணைப்புப் படிவங்கள் சமர்ப்பிப்பு “ சேர்கோன் மண் காணப்படும் இடங்களில் சேர்கோணியா உற்பத்திக்குரிய ஒரு வினைத்திறனான முறை ”	கண்டுபிடிப்பாளர்கள் கலாநிதி. பி. ஏ. கருணாரத்ன மற்றும் திருமதி. ஏ. ஜே. விக்ரமகெதர

கம்பனிகளுடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை

குறித்த வருட காலப்பகுதியில் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்கலைக்கழக சட்ட அலுவலரால் மதிப்பிடப்பட்டது. அதில் ஒன்று ஸ்ரார்ட்அப்.்.பௌண்ட்றி உடன் இந்த வருட காலப்பகுதியில் கெச் சாத்திடப்பட்டபது.

D. எதிர்காலத் திட்டங்கள்

- தொழில் முயற்சிப் பயணங்களை பகிர்ந்து கொள்ளல் மற்றும் சந்தைகளில் இருந்து எவ்வாறு புத்தாக்க கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் விதத்தை பகிர்ந்து கொள்ளல் என்பவற்றுக்காக தொழிற்துறை நிபுணர்களுடனான அமர்வுகளை ஒழுங்குபடுத்தல்.
- ரஜரட்ட பல்கலைக்கழக ஆய்வுகளின் புத்தாக்க விளைவுகளை வெளிக்கொணர கண்காட்சி ஒன்றை ஒழுங்குபடுத்தல்.
- ஆய்வுகூட வசதிகள் மற்றும் கல்விசார் நிபுணர்களிடமிருந்து தொழில்துறை நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அறிவைப் பெற்றுக் கொள்ள தொழில்துறை நிறுவனங்களை அழைத்தல்.
- தொழிற்துறை நிறுவனங்களின் தீவிர பிரச்சினைகளை பல்கலைக்கழக ஆய்வு மற்றும் விருத்திக்காக பெற்றுக்கொள்ளல் ஆகவே பிரச்சினைகள் கல்விசார் உத்தியோகத்தர்களின் வழிகாட்டல் உடன் மாணவர்களினால் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக அமையும்.
- வணிகமயமாக்கல் நடவடிக்கைகள் மற்றும் உதவக்கூடிய தொழில்துறை நிறுவனங்களின் கூட்டுத் தொடர்புகளை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் வலுப்படுத்தல்.

வணிக இணைப்பு அலகினால் எதிர்கொள்ளப்பட்ட இடர்பாடுகள்

- வணிகமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்புக்கள்/ புத்தாக்கங்களை கட்டியெழுப்புதல் என்பது ரஜரட்ட பல்கலைக்கழக சமூகத்தினருக்கு ஒரு புதிய கொள்கையாக இருப்பதனால், ஒவ்வொருவரினதும் உதவியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கால அளவை விட அதிகமான அளவு காலம் தேவைப்பட்டது மற்றும் இவ் அலகு நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒரு சவாலாகக் காணப்பட்டது என்பதை விளங்கக் கொண்டது.

31. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பாகம் III இல் 17(d) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால திட்டங்களின் அறிக்கை

நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால திட்டங்களின் அறிக்கை

1. தற்போது பல்கலைக்கழகம் சுத்திகரிக்கப்பட்ட (முறையற்ற பிரசாரண முறை மூலம்) குடிநீரை அனைத்து மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்குகின்றது. மேலும், முறையற்ற பிரசாரண வடிகட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் கிடைப்பனவை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
2. மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் என்பவற்றின் அனுசரனையுடன் கழிவகற்றல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய பல்கலைக்கழகம் கழிவுகளை வேறு பிரிக்கும் செயற்திட்டத்தை ஏனைய பீடங்கள், மாணவர் விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் அலுவலகங்கள் ஆகிய இடங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.
3. கழிவு நீரை சூழலுக்கு நேயமான முறையில் வெளியேற்றும் வகையில், கழிவு நீரை சுத்திகரிப்பதற்காக 200 மில்லியன் ரூபா மதிப்புள்ள செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.
4. பசுமைப் பல்கலைக்கழக எண்ணக்கருவுக்கு அமைய, ஒரு பசுமைப் பல்கலைக்கழகத்தை பராமரித்தல் மற்றும் சேகரிக்கப்பட்ட மழை நீரினை பசுமைச் சூழலைப் பேண பயன்படுத்தப்படுதல்.
5. சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் மற்றும் விவசாய பீடம் ஆகியவற்றினால் நீடித்து நிலைத்து நிற்கும் சூழலை உருவாக்குவதற்காக மர நடுதை நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்வதற்கு எதிர்பார்த்தல்.

6. பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் நியாயமான முறையில் மற்றும் தரமான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்து பெண் மற்றும் ஆண் ஆகிய இரு தரப்பினராலும் சமமான முறையில் அணுகக் கூடியதாக இருப்பதை உறுதி செய்தல்.
.

7. பல்கலைக்கழக கற்கைக்கு தெரிவு செய்யப்படாத மாணவர்களில் திறமையுள்ள, அறிவாற்றல் மிக்க மற்றும் தொழில்புரியக் கூடிய பட்டதாரிகள், டிப்ளோமாதாரர்கள் மற்றும் சான்றிதழ் கற்கையை பூர்த்தி செய்தோர்களை உருவாக்குவதற்காக வெளிவாரிக் கற்கை நெறித் திட்டங்களுக்கு அதிகளவு மாணவர்களை அனுமதித்தல்.

8. முகாமைத்துவ கற்கைகள் பீடம் மற்றும் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் ஆகிய பீடங்களினால் வழங்கப்படும் பட்டப்பின் பட்ட கற்கை நெறிகள் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகள் போன்றவற்றை தொடர்வதற்கு அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை அனுமதித்தல் மற்றும் பால் சமத்துவத்தை உறுதிப்படுத்தல்.

9. வட மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக உயிரியல், கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், த. தொ. தொ மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் பயிற்சிப் பட்டறையை அப் பகுதியில் உயர்தர கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடர்ந்து ஒழுங்குபடுத்துதல்.

10. ஆறு பீடங்களினாலும் நடாத்தப்பட்ட. அறிவைப் பரப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து நடாத்துதல் மற்றும் மேம்படுத்துதல்

32. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 106 (1) மற்றும் 107 (b) உப பிரிவுகள் மற்றும் அதில் செய்யப்பட்ட திருத்தங்கள் என்பவற்றுக்கு அமைய மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைய 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
நிதி நிலைக் கூற்று

டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி உள்ளவாறானது ரூபா இல்	குறிப்பு	2020	2019
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	2	118,835,657	98,710,358
முற்பணங்கள் - விநியோகம் மற்றும் சேவைகள்	3	11,322,935	11,400,311
முற்பணங்கள் - வேறு	4	1,392,551	1,108,644
உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள்	5	249,450	551,550
உத்தியோகத்தர்களுக்கான கடன்கள்	6	16,783,823	11,539,236
ஏனைய பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பட வேண்டிய பணம்	7	10,680,816	11,849,700
கிடைக்கப்பட வேண்டிய வட்டிகள்	8	2,112,675	4,221,396
கிடைக்கப்பட வேண்டியவைகள்		-	-
சரக்குகள்	9	43,450,050	42,522,868
முற்கொடுப்பனவுகள்	10	2,034,605	1,728,165
ஆய்வு முற்பணங்கள்	11	2,662,323	7,841,574
பத்திர மீறல் மூலம் பெறப்பட வேண்டியவைகள்	12	45,838,543	47,597,601
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**255,363,418**	**239,071,403**
நிலையான சொத்துக்கள்			
உத்தியோகத்தர்களுக்கான கடன்கள்	6	8,699,076	16,207,892
முதலீடு – மட்டுப்படுத்தப்பட்ட நிதி	13	4,854,742	4,322,912
முதலீடு – ஏனைய நிதி	13	289,095,311	263,389,261
உயிரியல் சொத்துக்கள்	14	3,939,970	3,583,382
அசையும் முற்பணங்கள்	15	278,456,724	140,021,672
நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள்	15	335,529,262	121,387,627
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்	16	6,047,025,487	6,487,549,719
மொத்த நிலையான சொத்துக்கள்		**6,967,600,572**	**7,036,462,465**
மொத்தச் சொத்துக்கள்		**7,222,963,990**	**7,275,533,868**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வேறுபட்ட வைப்புக்கள்	17	11,014,577	9,405,926
கடனாளிகள்	18	261,987,059	248,260,767
இணைந்த செலவுகள்	19	111,043,844	75,789,113
ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்	20	16,115,837	17,946,344
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**400,161,317**	**351,402,150**
நிலையான பொறுப்புக்கள்			
ஓய்வின் போதான கொடுப்பனவுகள்	21	205,174,358	131,804,694
மொத்த நிலையான பொறுப்புக்கள்		205,174,358	**131,804,694**
மொத்த பொறுப்புக்கள்		**605,535,675**	**483,206,845**
தேறிய சொத்துக்கள் / பங்குகள்		**6,617,628,315**	**6,792,3327,023**
மூலதன நிதிகள்			
மூலதன மானியம் - செலவழிக்கப்பட்டவை		6,013,653,368	6,322,273,477
மூலதன மானியம் - நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளுக்காக செலவழிக்கப்பட்டவை		335,529,262	121,387,627
மூலதன மானியம் - நிர்மாணிப்புக்களுக்காக செலவழிக்கப்படாதவை	22	110,584,697	123,043,323
புனரமைப்பு மானியம் - புனரமைப்பு வேலைகள்	23	48,237,465	23,317,510
மூலதன மானியம் - உபகரணங்கள், தளபாடங்கள், நூலக புத்தகங்களுக்காக செலவழிக்கப்படாதவை	23	33,267,893	(7,240,803)
மூலதன மானியம் - தொழில்நுட்ப பீடம்	24	24,983,038	25,471,537
மூலதன மானியம் - மனித மூலதன விருத்தி	25	13,808,015	12,208,015
மூலதன மானியம் - ஏனைய மானியம்	25	15,191,085	5,067,187
		6,595,254,824	**6,625,527,873**
ஒதுக்கப்பட்ட நிதி			
நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		28,980,803	28,980,803
மூலதன ஒதுக்கம்		218,432,934	218,432,934
பொது ஒதுக்கம்		(766,817,570)	(598,218,478)
		(519,403,833)	**(350,804,740)**
வேறு சமப்படுத்தற் கூறுகள்			
ஏனைய நிதி	27	515,359,977	487,346,201
நன்கொடை நிதி	28	6,896,876	6,352,765
ஆய்வு மானியம்	29	19,520,471	23,904,925
விசேட ஒதுக்கம்			
		541,777,324	**517,603,891**
மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள்		**6,617,628,315**	**6,792,327,023**

இந்த நிதிக் கூற்றின் ஒரு முக்கிய பாகமாக பக்கம் 11 முதல் 16 வரையுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்கம் 11 முதல் 32 வரையான கணக்கீட்டுக்குரிய குறிப்புரைகள் இந்த நிதிக்கூற்றுக்களின் இணைந்த பாகமாக அமைகின்றது. இந்த நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பன பல்கலைக்கழக பேரவையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டவர்களினால் பேரவையின் சார்பாக கையொப்பம் இடப்படுகின்றது.

…….	…….	…….	…….
டீ.டீ. உபநந்த	கலாநிதி. பி. ஏ. கருணாரத்ண	எஸ். பீ. கே. குணரத்ன	ஆர். எம். வன்னிநாயக்க
நிதியாளர்	உபவேந்தர்	பேரவை அங்கத்தவர்	பேரவை அங்கத்தவர்

22.02.2021

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
நிதி செயற்றிறன் அறிக்கை

டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி உள்ளவாறானது ரூபாவில்	**குறிப்பு**	***2020***	***2019***
வருமானம்			
அரச மானிய வருமானம் - மீண்டெழும்		1,874,500,000	1,732,406,000
மாணவர் உதவிப் பணத் தொகை		75,364,600	42,552,000
மகாப்பொல மானியம் - ப.மா.ஆ. கூறு		-	37,921,100
மகாப்பொல மானியம் - நம்பிக்கை நிதிய கூறு		-	39,471,900
அரசாங்கம் அங்கீகரித்த மானியம் & ஏனைய மானியங்கள்		526,425,218	519,266,312
		2,476,289,818	**2,371,617,312**
வேறு வருமானங்கள்			
பராமரிப்புக்கான புனரமைப்பு மானியம்		1,628,153	4,143,252
முதலீடுகளின் வட்டி		20,081,149	26,165,537
உத்தியோகத்தர் கடன்களின் வட்டி		1,056,835	1,154,978
சொத்துக்களில் இருந்தான வாடகை		1,144,577	1,840,672
நிலையான சொத்துக்களின் விற்பனை		242,915	145,960
பதிவுக் கட்டணம் (பட்டக்கல்வி)		2,331,566	3,093,667
விநியோகஸ்தர்களின் பதிவுக் கட்டணம்		1,334,000	1,544,520
பட்டமளிப்பு விழா கட்டணம்		-	2,388,560
பரீட்சைக் கட்டணம் (பட்டக்கல்வி)		107,155	848,585
விலைமனுக்கள்		587,400	1,058,475
தாமதத்துக்கான தண்டப்பணம் & நூலக கட்டணம்		593,895	545,448
பிற நிறுவனங்களுக்கு வழங்கும் சேவை		2,500	3,328,646
மாணவர் விடுதி கட்டணம்		1,826,925	2,567,330
சான்றிதழ் பணம்		203,785	205,800
ஆய்வுகூட கட்டணங்கள்		2,123,220	122,000
சேதாரங்களுக்கான கட்டணங்கள்		89,125	1,802,047
நீச்சல் தடாக அங்கத்துவக் கட்டணம்		4,700	35,000
சூரிய கல மின் வலு வருமானம்		653,300	138,864
விரிவாக்கல் கற்கை நெறிகளின் கட்டணம்		21,066,665	7,043,032
ஏனைய வருமானம்		5,816,357	7,090,175
		60,894,222	**65,262,548**
		2,537,184,040	**2,436,879,860**
செலவுகள்			
தனிநபர் ஊதியம்		1,739,629,220	1,503,782,540
பிரயாணங்கள்		1,228,192	5,743,477
விநியோகம்		51,679,393	55,288,545
பராமரிப்பு	30	16,377,306	24,419,171
ஒப்பந்த சேவைகள்		226,290,874	300,651,137
வேறு செலவுகள்		46,829,777	100,419,596
மாணவர்களுக்கான நிதி உதவிகள்		75,370,300	119,942,000
தேய்மானம்		520,074,524	488,677,288
		2,677,479,585	**2,598,923,753**
இவ்வருடத்தின் தேறிய நிறை (குறைவு)		**(140,295,545)**	**(162,043,893)**

செம்மையாக்கல் கணக்கு

மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது ரூபா இல்	*2020*	*2019*
இவ்வருடத்தின் தேறிய நிறை (குறைவு)	**-140,295,545**	**-162,043,893**
முந்நைய ஆண்டில் இருந்து கொண்டு வரப்பட்ட மீதி	-598,218,478	-355,977,172
	-738,514,023	-518,021,065
குறை :		
முந்நைய ஆண்டுகளுக்கான சரியாக்கம்	-28,303,547	-80,197,413
மீதி		
கொண்டு செல்லப்பட்ட மீதி	**-766,817,570**	**-598,218,478**

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
காசுப் பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறானது ரூபாவில்	*2020*	*2019*
தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்		
சாதாரண செயற்பாடுகளில் இருந்தான மிகை/ குறை	(140,295,545)	(162,043,893)
பணம் அல்லாத அசைவுகள் /சீரமைப்புக்கள்		
குத்தகை வட்டி சீரமைப்பு	-	9,490
தேய்வுகள்	520,074,524	488,677,268
பணிக்கொடை ஒதுக்கம்	80,058,586	9,781,961
வேறு சீரமைப்புக்கள் மற்றும் பொது ஒதுக்கம்	68,062,651	(85,783,367)
மூலதன மானியத்திற்கு நிதி சேர்த்தல் & ஏனைய மானியங்கள்	(549,120,036)	(519,266,312)
செயற்படும் மூலதன மாற்றங்களுக்கு முன்னரான மிகை /(குறை)	**(21,219,820)**	**(268,624,853)**
செயற்படும் மூலதன மாற்றங்கள்		
சரக்குகள் மீதான (அதிகரிப்பு) /குறை	(1,283,770)	(4,992,649)
பெறுவனவுகள் மூலம் ஏற்பட்ட (அதிகரிப்பு) /குறை	3,661,248	(34,927,283)
முற் செலுத்தப்படவேண்டியவைகளில் ஏற்பட்ட (அதிகரிப்பு) /குறை	(306,440)	(286,794)
தேக்கி வைத்திருப்பவை மற்றும் கடனாளிகளின் (அதிகரிப்பு) /குறை	48,759,167	86,734,151
உத்தியோகத்தர்களின் முற்பணங்களில் (அதிகரிப்பு) /குறை	5,481,351	844,024
வேறு பல்கலைக்கழகங்கள் /நிறுவனங்கள் இலிருந்து பெற வேண்டிய பணம்	1,168,884	7,538,336
		-
செயற்படும் மூலதன மாற்றங்களுக்கு பின்னரான செயற்பாடுகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	**36,260,620**	**(213,715,068)**
பணிக்கொடை செலுத்துதல்கள்	(6,688,922)	(2,787,297)
செயற்பாடுகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	**29,571,697**	**(216,502,365)**
முதலீட்டு செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்		
சொத்து, ஆலை மற்றும் உபகரணம் கையகப்படுத்தல்	(125,932,829)	(251,080,904)
நிர்மாணம் மற்றும் மீள்புனரமைப்பு கொடுப்பனவுகள்	(140,643,758)	(150,912,398)
நடமாடும் சேவைகளுக்கான முற்கொடுப்பனவுகள்	(163,831,453)	(110,977,731)
கட்டிட முற்பண செலுத்துதல்கள்	(200,000)	
வாகன குத்தகை பணம் செலுத்துதல்கள்	-	(601,785)
உத்தியோகத்தர் கடன்களில் இருந்தான காசு	2,264,239	2,604,594
முதலீடுகளில் இருந்தான காசு	79,432,864	113,693,586
நிலையான வைப்புகளில் முதலீடு	(105,670,744)	(86,550,000)
முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(454,581,681)**	**(483,824,638)**
நிதி செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்		
கிடைக்கபெற்ற மூலதன மானியம்	358,773,551	477,263,678
கிடைக்கபெற்ற புனரமைப்பு மானியம்	62,188,000	111,300,000
ஆய்வு மற்றும் வேறு நிதிகளின் அதிகரிப்பு	24,173,433	108,206,836
நிதி செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்	**445,134,984**	**696,770,514**
காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பாய்ச்சலில் தேறிய அதிகரிப்பு	20,125,000	(3,556,489)
ஆண்டின் தொடக்கத்தில் இருந்த காசு மற்றும் காசுக்கு சமமானவை	98,710,658	102,267,147
ஆண்டின் இறுதியில் இருந்த காசு மற்றும் காசுக்கு சமமானவை	**118,835,658**	**98,710,658**

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகம்

சமப்படுத்தலில் மாற்றங்களுக்கான கூற்றுக்கள்

மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது ரூபாவில்	குறிப்பு	மூலதன நிதி	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	மூலதன ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	சமப்படுத்தலின் ஏனைய கூறுகள்	மொத்தம்
2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதி		**6,540,137,766**	**28,980,803**	**213,284,451**	**-355,929,171**	**409,142,418**	**6,835,616,267**
சொத்துக்களின் மீதான முதலீடுகள்		585,141,939	-	-	-	-	585,141,939
வருமானத்துக்கான சேர்க்கப்பட்ட கடன		-499,751,832	-	-	-	-	-499,751,832
சுயமாக ஈட்டப்பட்ட நிதி & நிதிகளுக்காக பெறப்பட்ட மானியங்கள்		-	-	-	-	108,461,473	108,461,473
ஆண்டுக்கான மிகை / குறை		-	-	-	-162,043,893	-	-162,043,893
செம்மையாக்கம்		-	-	5,148,483	-80,245,414	-	-75,096,931
2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதி		**6,625,527,873**	**28,980,803**	**218,432,934**	**-598,218,478**	**517,603,891**	**6,792,327,023**
சொத்துக்களின் மீதான முதலீடு		494,889,566	-	-	-	-	494,889,566
வருமானத்துக்கான சேர்க்கப்பட்ட கடன்		-520,074,524	-	-	-	-	-520,074,524
சுயமாக ஈட்டப்பட்ட நிதி & நிதிகளுக்காக பெறப்பட்ட மானியங்கள்		-	-	-	-	-	-
ஆண்டுக்கான மிகை / குறை		-	-	-	-140,295,545	-	-140,295,545
செம்மையாக்கம்		-5,088,067	-	-	-28,303,547	24,173,433.00	-9,218,181
2020 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதி		**6,595,254,848**	**28,980,803**	**218,432,934**	**-766,817,570**	**541,777,324**	**6,617,628,339**

01. நிதிநிலை கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1.1 நிறுவன தகவல்கள்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டஒரு முழுமையான அரசுக்கு சொந்தமான உயர்கல்வி நிறுவனம் ஆகும்.இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் தற்போது ஆறு பீடங்களுடன் செயற்பட்டு வருவதுடன் வட மத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது.

1.2 தயாரிப்பின் அடிப்படை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிதிநிலை கூற்றுக்கள் வேறுவிதமாக கூறப்படாவிட்டால் சம்பள அடிப்படையில் மற்றும் வரலாற்று செலவு மாநாட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதி கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் (ரூ) வழங்கப்படுகின்றன. இது பல்கலைக்கழக செயற்பாட்டு மற்றும் நாணயம் மற்றும் அனைத்து மதிப்புக்களும் அருகிலுள்ள ரூபாய் மதிப்புக்கு அண்ணளவாக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

முக்கிய கணக்கியல் கொள்கைகள் குறிப்பு 1.3 மற்றும் 1.4 இல் காட்டப்பட்டுள்ளன.

நிதிநிலை கூற்றுக்கள், நிதி செயல்திறன் கூற்றுக்கள், பங்கு மாற்றங்களிலான கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் ஆகியவை கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ஆகியவற்றுடன் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் (எஸ்.எல்.பீ.எஸ்.ஏ.எஸ்) மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டமும் அதன் திருத்தங்கள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றன.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் சாதாரண வணிகத்தின் நிகர நிதி மற்றும் முடிவு நிதி செயல்திறன் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலை கூற்றில் காட்டப்பட்டுள்ளன. மேலும் பணப்பாய்ச்சல் கூற்றானது பல்கலைக்கழகத்தின் பண கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கப்படுகின்றது.

1.3 கணக்கியல் கொள்கைகள்

1.3.1 எஸ்.எல்.பீ.எஸ்.ஏ.எஸ் இன்பிரயோகங்கள்

2020 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூற்றுக்களை தயாரித்து வழங்கும் போது பல்கலைக்கழகம் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளை (எஸ்.எல்.பீ.எஸ்.ஏ.எஸ்) பின்பற்றியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் சட்டப்பூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து எஸ்.எல்.பீ.எஸ்.ஏ.எஸ் தரநிலைகளும் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால் பின்பற்றப்படுகின்றன.

1.3.2 கணக்கியல் கொள்கைகளில் மாற்றங்கள்

வேறுவிதமாக கூறப்படாத சந்தர்ப்பங்களில், பல்கலைக்கழகத்தின் நிதி நிலை கூற்றினை தயாரித்து வழங்கும் போது பல்கலைக்கழகம் பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளை ஏற்றுக்கொண்டது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கணக்கியல் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

1.3.3 முக்கிய கணக்கியல் தீர்வுகள் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

ருமானம், செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான கடன்களை வெளிப்படுத்துதல் ஆகியவற்றை பாதிக்கக்கூடிய தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை செய்ய நிர்வாகம் தேவைப்படுகின்றது. கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்தும்போது எதிர்கால மதிப்பீடுகள் மற்றும் பிற அம்சங்கள் தொடர்பான முக்கிய அனுமானங்கள் கீழே விவாதிக்கப்படுகின்றன.

1.4 முக்கிய கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

1.4.1 வெளிநாட்டு நாணய பரிமாற்றங்கள் மற்றும் நிலுவைகள்

அனைத்து நாணய பரிவர்த்தனைகளும் பரிவர்த்தனைகள் நிகழும் நேரத்திலான நாணய மாற்றுவிகிதங்களுக்குரிய தொழிற்பாட்டு நாணய விகிதங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணய விகிதத்தில் பரிந்துரைக்கப்பட்ட பண சொத்துக்களும் பொறுப்புக்களும் 31/12/2020 அன்று நிலவும் சமமான மாற்று விகிதத்தில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு (ரூபாய்) மாற்றப்படுகின்றன. வதிவிட வெளிநாட்டு நாணய (வ.வெ.நா) கணக்குகளின் அறிக்கையிடப்படும் திகதியிலான நிலுவையானது அதே திகதியிலான விகித மாற்றங்களின் தொழிற்பாட்டு நாணயத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயத்தில் இனங்காணப்பட்ட ஆதாயம் மற்றும் இழப்பு ஆனது வெவ்வேறாக குறிப்பு இல.– 31 இல் காட்டப்பட்டுள்ளதுடன் நிகர விளைவு அந்தந்த நிதிக் கணக்கில் தனித்தனியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

1.4.2 வரி

வருமான வரி

நடைமுறையில் உள்ள வரி விதிமுறைகளின் படி வணிகத்தின் சாதாரண நடைமுறையின் வருமானத்திற்கு வருமான வரி செலுத்த பல்கலைக்கழகம் பொறுப்பல்ல.

செலுத்துவோர் வரி

